குடி அரசு பதிப்பக வெளியீடு 26.

இராமாயண ஆராய்ச்சி.

(மூன்றாம் பாகம்.)

ஆரண்ய காண்டம்.

முதற்பதிப்பு 2000

சந்திரசேகரப் பாவலர் என்பவரால் 'இதிகாசங்கள்' என்னும்

தலைப்பின் கீழ் எழுதப்பட்ட

இராமாயண ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதி.

187

D03

ஈரோடு

"குடி அரசு" பதிப்பகத்தாரால்

வெளியிடப்பட்டது.

1935.

விலை அணா 4.

குடி அரசு பதிப்பக வெளியீடு 26.

இராமாயண ஆராய்ச்சி.

(மூன்றாம் பாகம்.)

ஆரண்ய காண்டம்.

முதற்பதிப்பு 2000

சந்திரசேகரப் பாவலர் என்பவரால் 'இதிகாசங்கள்' என்னும்

தலைப்பின் கீழ் எழுதப்பட்ட

இராமாயண ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதி.

ஈரோடு

"குடி அரசு" பதிப்பகத்தாரால்

வெளியிடப்பட்டது.

1935.

விலை அணா 4.

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

ஆரண்ய காண்டம்.

முதல் அத்தியாயம்.

இராமன் தண்டகாரண்யத்தில் புகுந்து அங்கிருந்த முனிவர்களால் வரவேற்கப்பட்டான். மறுநாள் அவர்களை விட்டுப்பிரிந்து சென்ற இராமன், விராதன் என்ற அரக்கனைச் சந்தித்தான். அவன் சீதையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, "முனிவர்களாகிய உங்களுக்கு மனைவி ஏன்? நீங்கள் இருவரும் ஒரே பெண்ணை மனைவியாக வைத்திருக்கலாமா? உங்களைக் கொன்று இவளை என் மனைவியாக வைத்துக்கொள்ளுகிறேன்" என்று கத்தினான். சீதை நடுங்கினாள், விராதன் இடுப்பில் சீதை இருப்பதைக் கண்ட இராமன் முகம் சுருங்கி "சீதைக்கு வந்த கதியைப்பார்! கைகேசி எண்ணம் இன்று ஈடேறியது. தன் மகனுக்கு அரசைக் கேட்டதோடு நிற்கக்கூடாதா? நான் காட்டிற்குப் போனால் சீதையை எவனாவது கொண்டுபோவான். அப்போதெனக்கு ஆபத்துண்டாகும் என்று அவள் முன்னரே அறிவாள். என் தந்தையையும், அரசையும் இழந்ததைவிட இது மிகுந்த கவலையை உண்டுபண்ணிற்று" என்று கண்ணீர்விட்டுப் புலம்பினான்.

இலக்குவன், "அண்ணா! அஞ்சவேண்டாம். அரசாட்சியைப்பற்றி நான் பரதனிடம் கொண்டிருக்கும் கோபத்தை இவ்விராதன்மேல் செலுத்துகிறேன்" என்று கூறினான். விராதன் கேட்க, இராமன் தங்கள் வரலாறு கூறினான். விராதன் சீதையை விட்டுவிட்டு ஓடிப்போகச் சொன்னான். சண்டை தொடங்கிற்று, விராதன் சீதையைக் கீழே வைத்துவிட்டு இராமன் இலக்குவர்களைத் தூக்கி ஓடினான். சீதை கதறினாள், அவர்கள் விராதனுடைய கைகளை வெட்டித்தள்ளினார்கள். உடனே விராதன் "நான் குபேரனுடைய சாபத்தால் அரக்கனானேன் என்னை அடக்கம் செய்துவிட்டு சரபங்க முனிவரிடம் செல்லுங்கள்" என்றான். அவர்கள் அவனைக் குழி வெட்டிப் புதைத்தார்கள். விராதன்

பலாத்காரம் செய்ததாலுண்டான பயத்தையும், வெட்கத்தையும் போக்க இராமன் சீதையைத் தழுவிக்கொண்டு சரபங்க முனிவரிடம் சென்றனன். அப்போது இந்திரன் சரபங்க முனிவரிடம் வந்திருப்பதைப்பார்த்து, இராமன் லக்குவனையும் சீதையையும் நிறுத்திவிட்டுத்தனியே சென்றான். அதைக் இந்திரன் "அரக்கரை அழித்தபின்னரே நான் அவனைப் பார்க்கவேண்டும்" என்று கூறித் தேரேறிச் சென்றனன். இராமன் பின் மனைவியையும் தம்பியையும் கூட்டிக்கொண்டு முனிவனை அடைந்தான். முனிவன் "இராமா! இந்திரன் என்னை நான்முகனுலகம் அழைத்துப்போக வந்தான். உங்களை உபசரிக்க விரும்பி நான் மறுத்துவிட்டேன். அவ்வுலகங்களை உனக்குத்தருகிறேன்" என்றான். இராமன் அவைகளை நானே தேடிக்கொள்வேன். இக்காட்டில் நாங்கள் தங்கத்தகுந்த இடம் கூறும்" என்றனன். முனிவன் "இந்நதிக்கரை வழியே மேற்கே சென்றால், சுதீக்கணன் என்ற முனிவன் இருக்கின்றான். அவன் தகுந்த இடத்தைக் காட்டுவான்" எனக்கூறி தீயில் விழுந்து திருமாலுலகமடைந்தனன். அங்கிருந்த முனிவர்கள் இராமனிடம் வந்து தங்களை அரக்கர்கள் துன்பத்தினின்றும் காப்பாற்ற வேண்டினர். இராமனும் அவ்வாறே வாக்களித்து அவர்கள் சூழ்ந்துவர வெகு தூரம் வந்து ஒரு மலையின் பக்கத்தில் உள்ள குடிசையில் சுதீக்கணனைக் கண்டு பணிந்தனன். முனிவன் இன்னுரை கூறினான். இராமன் தான் வாழத் தகுந்த இடம் காட்ட வேண்டினன். முனிவன் "நீங்கள் இங்கேயே வாழலாம்! இங்கே மான் கூட்டங்கள் அச்சமில்லாமல் வந்து அடிக்கடி எங்கள் தவத்தைக் கலைக்கின்றன, வேறு தொந்திரவில்லை" என்றனன். இராமன் "அவைகளை வேறிடங்களில் நான் கொல்வேன்" என்று கூறி அன்றிரவு அங்கே தங்கினான். மறுநாள் அவனிடம் விடைபெற்று, இராமன் சென்றனன். சீதை "நீர் தண்டகாரண்யம் போதல் எனக்குச் சம்மதமில்லை. நீர் ஆயுதங்களை எறிந்துவிட்டுத் தவம் செய்யும். பகையில்லாமல் அரக்கர்களைக் கொல்லக் கூடாது. அப்பகை என்னால் ஏற்படலாம். ஆகையால் நாம் தவம் செய்வோம்" என்றனள். இராமன் நான் வாக்குத்தவறேன். நீயும் என்னைப்போல நினை" என்றனன்.

சிறிது தூரம் சென்ற பின்பு ஓர் குளத்தைக் கண்டு அதில் இன்னிசைஒலி கேட்பதை அறிந்து இராமன் அதன் வரலாறுவினவினான். ஓர் முனிவன், "இங்கொரு முனிவன்

தவம் செய்திருந்தான். அவனுடைய தவத்தைக்கெடுக்க விண்ணவர் ஐந்து பெண்களை ஏவ அவன் . அவர்களுடன் இதில் வாழ்கிறான். அவர்களுடைய பாட்டொலியே இது'' என்றனன். கொஞ்சதூரம் சென்றவுடன் குடிசைக்கூட்டங்கள் தென்பட்டன. அவைகளில் இராமன் ஒவ்வொன்றிலும் சிற்சில மாதங்கள் தங்கி அங்கே பத்து ஆண்டுகளைக் கழித்தான். பிறகு முன் கண்ட சுதீக்கண முனியைக்கண்டு அகத்திய முனிவன் வாழுமிடம் வினவினன். அவன் "தெற்கே போனால் அகத்தியனை அடையலாம்'' என்றனன்.

இராமன் அகத்தியனுடைய தம்பியின் குடிசையை அடைந்தபோது 'இதுவே அகத்தியர் தம்பி இடம், அகத்தியர் அநேக அரக்கரை அழித்தவர் இல்வலன் என்ற அசுரன் தன் தம்பி வாதாபியை ஆடாக்கிக்கொன்று சமைத்து உண்பித்தனன். அம்முனிவன் வாதாபியைத்தின்று செறிக்கப்பண்ணியதால் வழக்கம்போல் இல்வலன் அழைத்தபோது அவன் வரவில்லை. அதனால் அவன் அவரைக் கொல்லவர அவனை அவர் எரித்துவிட்டார்' என்று கூறி அன்றிரவை அங்கே கழித்தனன். மறுநாள் அகத்தியன் தம்பியிடம் விடை பெற்றுச் சென்று அகத்தியமுனிவனை அடைந்தான். தன் வரவை இலக்குவனால் தெரிவித்துச் சீடனால் அழைத்துப்போகப் பட்டு இராமன் முனிவனை வணங்கினான். முனிவன் இராமனுக்கு ஒரு வில்லையும் இரு அம்பறைகளையும் தந்தனன். மறுநாள் இராமன் தான் வாழத்தனி இடமொன்று கேட்டனன். முனிவன் "நீ இங்கேயே தங்கலாமென்றாலோ தனி இடம் கேட்கிறாய். சமீபத்தில் பஞ்சவடி இருக்கிறது. அங்கே நீ சீதையோடு தனியே வாழலாம்'' என்று கூற இராமன் புறப்பட்டுச் சென்றனன்.

இராமன் வழியில் ஓர் கழுகைக்கண்டு வினாவ அது தன் வரலாறு கூறித் தன் பெயர் சடாயுவென்றும் தான் தசரதனுக்கு நண்பன் என்றும் புகன்று, அவர்கள் வெளியே போகும் போது தான் சீதைக்குத் துணையிருப்பதாகச் செப்பியது. அவன் அதற்கு இன் சொற் கூறித் தன்னுடன் அழைத்துச் சென்றான். அவர்கள் கோதாவரிக்கரையிலுள்ள பஞ்சவடியை அடைந்தவுடன் இராமன் இலக்குவனைக் குடிசை கட்டென்றான். அவனோ "உமக்கு விருப்பமான இடத்தைக்காட்டு'' என்ன இராமன் காட்டினான். இலக்குவன் அவ்விடத்தில் ஓர் அழகான குடிசை கட்டினான். அதில் இராமனும் சீதையும் தனியே இருப்பதற்கு ஓரிடம் இருப்பதைக்கண்டு இரா

மன் மகிழ்ந்து தன் தம்பி குறிப்பறிந்தியற்றியமையைப்பாராட்டினான், அவர்கள் அங்கே மகிழ்ந்திருந்தார்கள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

விராதன் சீதையைப் பலாத்காரமாகத் தூக்கி இடுப்பில் வைத்ததைக்கண்ட இராமனுக்கு மனம் மிக உடைந்தது. அப்போது அவன் தன் மனத்திலிருந்த உண்மையான எண்ணங்கள் புலப்படப் புலம்புகிறான். மீதூர்ந் தெழும் துன்பம், மகிழ்ச்சி, சினம் இக்காலங்களில் மனத்திலுள்ள உண்மையான எண்ணங்கள் வெளிப்படும். ''கைகேசி இவ்வாறெல்லாம் நடக்கும் என்பதை முன்னரே அறிந்து தான் என்னைக் காட்டுக்குப்போகச் சொன்னாள். இது என்மனதை உடைத்து விட்டது'' எனப்புலம்புகிறான். பரதன் வந்து காட்டைத் தந்து போயும் கூட இராமன் கொண்ட சினம் தணியவில்லை. தனக்கு உரிமையில்லாத நாட்டைப் பெற முயன்று கிடையாமைக்காக இவ்வளவு தூரம் கண்ணீர் விட்டழுது வருந்துகின்றான்.

இந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசயங்கார் குறிப்பு நோக்கத்தக்கது. ஆரண்ய காண்டம் பக்கம் 8 ல் அவர் ''கைகேயியைக் குற்றம் சொல்லக்கூடாதென்றும், தெய்வச் செயலென்றும், பரதனைக்கண்டித்துப் பிரமாணம் செய்யச்சொன்ன ராமனே இங்கே அவளைக் கடுமையாகத் தூஷிக்கிறார். லோகத்தில் மனிதர்கள் தங்களுக்கு எதிர்பாராத ஆபத்து நேரும் பொழுது பிறர்க்குச் செய்த உபதேசத்தை மறந்து தாங்களே அந்தக்குற்றத்தைச் செய்வது சகசமென்று ராமன் இவ்விடத்திலும் பல இடங்களிலும் நடத்திக்காட்டுகிறானென்றே எண்ண வேண்டும். ஆகையால் ராமாயணம் முழுவதிலும் ராமனைச் சாதாரண மனிதனாகவே நாம் கொள்ள வேண்டும்'' என்று எழுதியிருக்கிறார். இதனாலும் இராமன் உண்மையாகவே பேராசைக்காரனென்பதும் தனக்கு நாடு கிடையாமைக்காக மிக வருந்தி அதற்கு இடையூறாக இருந்த கைகேசியைப் பல இடங்களிலும் இகழ்கிறானென்பதும் பசுமரத்தாணி போல நிலைபெறுகின்றமை காண்க.

இராமனுடைய புலம்பலழுகையைக்கேட்ட இலக்குவன் ''நான் அரசாட்சி பற்றி பரதன் மேல் கொண்டிருக்கும் கோபத்தை இவ்விராதன் மேல் செலுத்துகிறேன்'' என்கிறான்.

இதனால் இலக்குவனும் மறைமுகமாக எப்படியாவது பரதனைக்கொன்று அரசாட்சியைக்கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணத்தை இன்னும் கொண்டிருந்தானென்பது விளங்குகிறது. இவர்களெல்லாரும் உத்தமர்களாம். தெய்வத்தன்மையுடையவர்களாம். இத்தகைய இழிதகையாளர்களை எங்குத் தேடிக்காண்பது? சீதைக்குண்டான அவமானத்தைப் போக்குவதற்கு இராமன் அவளைத் தழுவிக் கொள்கின்றனன்.

சரபங்கன், சுதீக்கணன் முதலிய முனிவர்கள் இராமனைத் தெற்கே போய் தங்கக்கூறினமையைச் சிந்தித்தால் அவர்கள் அவனை அரக்கர்கள் வாழுமிடத்துக்கு அருகிலேயே நெருங்கி வாழவிட்டால் போருண்டாவது திண்ணமென்றே அவனை அவ்வாறு தள்ளிவிட்டனரென்பது விளங்கும். இவ்வாறு முனிவர்கள் செய்த சூழ்ச்சியைச் சிந்தித்துணர்ந்த சீதை காட்டினுள் செல்வதைத் தடுக்க முயல்கின்றாள். அவள் காட்டுள் நுழைவதில் தனக்கு மனமில்லாமையை வெளியிடுவதுடன் இராமனையும் அரக்கரோடுபோராடுதல் கூடாதென எச்சரிக்கிறாள். இராமன் அதற்கு இசையவில்லை.

பத்து ஆண்டுகள் தண்டகாரண்யத்தில் தங்கிய பின்னர் இராமன் அகத்திய முனிவனை அடைந்தான். அம்முனிவனுடைய வேண்டுதலின் வண்ணம் இராமன் அங்கே தங்க இசையாமல் தனி இடம் வேண்டுகிறான். அதனால் முனிவன் பஞ்சவடிக்குப் போகச் சொல்ல, அவன் அங்கே போய்க் குடிசை கட்டுகிறான். அதில் இலக்குவன் சீதையும் இராமனும் இருக்கத் தனியிடம் அமைத்தமைகண்டு இராமன் மிக மகிழ்ந்து அவனைப் பாராட்டுகிறான். இதனால் இராமன் சீதையோடு சிற்றின்ப நுகர்ச்சி கருதியே அக் காட்டில் தனியிடங்கள் தேடி அலைந்தனனென்பது புலனாகிறது.

அகத்திய முனிவனுடைய வரலாற்றை ஆராயுமிடத்து அம்முனிவனும் ஏனைய முனிவர்களைப் போலவே ஆடு முதலிய மிருகங்களைக் கொன்று தின்னும் தீய வழக்கமுடையவனாகவே இருந்தனனென்பது விளங்குகின்றது. தமிழ்மொழிக்கு இலக்கணமியற்றியவனாகவும், ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பிய முனிவனுக்கு ஆசிரியனாகவும் இருந்த தண்டமிழ்முனிவன் அகத்தியனோ இவன்? இல்லை, இல்லை. தமிழ் மக்கள் அரக்கர், அசுரரென்று கூறி இகழ்ந்தமையோடு

அவர்கள் மனிதருடைய புலாலை உண்போர் என்று இழித்துக் கூறும் ஆரிய மாக்கள் இவ்வாறு அகத்தியனாரைப்பற்றிக் கதை கட்டிவிட்டனர் போலும்! அதைத் தமிழ் மக்களும் உண்மையென நம்புமாறு செய்தனர். அகத்தியம் என்பது இன்றியமையாதது என்று பொருள் படும். இவருடைய இலக்கண நூல் தமிழ் மொழிக்கு இன்றியமையாததாய் அகத்தியமாயிருந்ததினாலே அந்நூல் அகத்தியம் எனப்பட்டது. அகத்தியம் என்ற நூலை இயற்றியதனால் அகத்தியர் என்று பெயர் பெற்றார். அவரை வடமாழியாளராகிய ஆரியர் அகஸ்தியர் என்று கூறுவதோடு அவரை ஆரியராக்கி அதற்கேற்ப ஆட்டைத் தின்றாரென்று கதையும் கட்டிவிட்டனர்.

வில்வலன் வாதாபி என்பவர் தமிழ் மக்கள். இவர்கள் செய்த செயல், வாதாபி ஆடாவதும் அதைச் சமைத்து ஆரிய முனிவருக்கு வில்வலன் விருந்தமைப்பதும், பின் வாதாபி, அவர்களுடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்து கொல்லுவதும்தான், இவ்வாரிய முனிவரே புலாலுணவைத் தமிழ் நாட்டில் பரப்பிவந்தனராதலின் அவர்களைக் கொல்வதற்காக இவ்விருவரும் இவ்வாறு சூழ்ச்சி செய்துவந்தனர் போலும். இவர்களை அகத்தியர் கொன்றனரெனக் கதை போகிறது. இத்தகைய அகத்தியர் தமிழ் முனிவரென்பது பிழையுடைத்து. ஆரியர் தமிழ் மக்களை இழிவு படுத்தக் கட்டிவிட்ட கதையே இது, இத்தகையகதைகள் பல உள்ளன. இவ்வகத்தியனுக்கு ஒரு தம்பி இருந்தானாம்! இனிக் கம்பர் போக்கைக் காண்போம்.

வால்மீகி போக்குக்கு மாறாகக் கம்பர் அத்திரி முனிவனை இராமன் கண்ட வரலாற்றை முதற்கண் கூறியுள்ளார் இது அயோத்தியாகாண்டத்தமைந்திருப்பதே பொருந்துமென்பது முன்னர் ஆராயப் பெற்றது. இராமன் தண்டகாரண்யத்தில் புகுந்ததும் சில முனிவர்களால் வரவேற்கப்பட்டு அன்று அவர்களோடும் தங்கி, மறுநாள் விடை பெற்றுச் சென்ற கதையைக் கம்பர் கூறாது விடுத்தார். விராதன் இராம லக்குமணரைச் தூக்கிச்சென்றான். என்று வால்மீகி கூறக் கம்பர் அவ்விருவரும் தோளிற் சென்று எறினர், அவன் அவர்களோடும் ஓடினன் என்று கதையை மாற்றிக் கூறுறார். விராதன் சீதையை தூக்கியவுடன் இராமன் கைகேசியை இகழ்ந்துரைத்தமையும், இலக்குவன் மறுமொழியையும்

கம்பர் மறைத்தார். அவை அவர்களுடைய இழி குணம் புலப்படுப்பனவாதலின்.

விராதன் தன் வரலாற்றைக் குழி வெட்டுமுன் கூறினதாக வால்மீகி கூற, அவனைக் குழியிலே தள்ளியபின் கூறியதாகக் கம்பர் கூறுகிறார். சரபங்கனைப் பார்க்குமாறு விராதன் கூறியதைக் கம்பர் மறைத்தார். சரபங்கன் இராமனை சுதீக்கண முனிவனிடம் போகக்கூறியதைக் கம்பர் கூறவில்லை. சரபங்கன் மட்டும் தீயில் விழுந்தனனென வால்மீகி கூறக் கம்பர் அவன் தன் மனைவியோடும் தீயில் விழுந்ததாகக் கூறுகிறார். சரபங்கன் குடிசையிலேயே தண்டகவன முனிவர் இராமனையடைந்து தங்களைக் காக்கவேண்டினராகவும், கம்பர் இராமன் நெடுந்தூரம் வந்தபின் அவர்கள் அவனைக் கண்டனரெனக் கூறுகிறார்.

சரபங்கன் கூறியவாறு இராமன் சுதீக்கணனைக் கண்டு அவன் சொற்படி அங்கிருந்த குடிசைகளிலே பத்தாண்டுகள் தங்கினன் என்று வால்மீகி கூறும் செய்தியைக் கூறாது, பத்தாண்டுகளின் பின்னரும் இராமன் சுதீக்கணனைக் கண்டு அகத்தியனைக் காணச் சென்றனெனும் கம்பர், அப்போதுதான் முதன்முறை அம்முனிவனை இராமன் கண்டனன்போலக் கூறுகிறார். சீதை இராமனை நோக்கித் தண்டகாரண்யம் புகுவதை மறுத்துத் தடுத்ததையும், அரக்கரோடு சண்டையிடல் கூடாதெனக் கூறியதையும், இராமன் அதை மறுத்ததையும் கம்பர் அவன் தெய்வத் தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு மறைத்தார்.

இராமன் அகத்தியனுடைய தம்பியைக் கண்டதும் அவனுழைத் தங்கியதையும் கம்பர் கூறாது விடுத்தார். அகத்தியனைத் தமிழ் முனிவனாகவே காட்டுகிறார் கம்பர். அகத்தியனைப்பற்றிய செய்தியை இராமன் கூறியதாக வால்மீகி கூற, கம்பர் அவைகளைப் பெருக்கித் தமது கூற்றாகவே கூறி அமையாது இராமன் வந்து வரவறிவித்து அழைக்கச் சென்ற செய்திகளை மறைத்து முனிவன் எதிர்கொள்ளச் சென்றடைந்தான் அவன் என்கின்றார் கம்பர். இராமனுக்கு இரண்டு அம்பறை கொடுத்ததாக வால்மீக கூற, ஒன்று தந்ததாக் கூறுவதோடு, வாளும், வேறு அம்புகளும் தந்தனெனக் கம்பர் கூறுகிறார்.

இராமன் தனக்குத் தனியிடங் கூறவேண்ட அகத்தியன் பஞ்சவடி கூறினனென வால்மீகி கூற, 'அசுரர் வரும் இடத்தில்

தங்கினால் நலம் அதற்கேற்ற இடம் கூறுக' என இராமன் வேண்டியதாகக் கம்பர் கதை கட்டுகிறார். இதையெல்லாம் இராமனை உயர்வுறுத்தவே. இராமன் அகத்தியனைப் பிரிந்து சென்று ஜடாயுவைக் கண்டபோது ஜடாயுதான் அவர்கள் தந்தையாகிய தசரதன் தோழனென்று கூறியதாகவும் சீதைக்குத் துணையிருப்பலெனப் புகன்றதாகவும் வால்மீகி கூற, அதற்கு மாறாகக் கம்பர் புதுக்கதை காட்டுகிறார். அஃதாவது ஜடாயு அவர்களை யார் என வினவ, அவர்கள் தசரதன் மைந்தரெனப் புகன்று அவன் இறந்தமை கூற, ஜடாயு புலம்பித் தன் நண்பனிறந்தமையின் தானும் இறப்பலெனத் துணிந்து கூறிற்றாக, இராமன் தடுத்தனனென்பதும், பின் கழுகு அவர்களுடைய நாட்டை வேற்றரசர் கைப்பற்றி இருந்தால், தான் வென்று இராமனுக்கு முடி சூட்டுவதாகக் கூறிற்றாகவும், அவர்கள் தமது சிற்றன்னை செய்த தீமையில் நாடிழந்து வந்தமையைப் பகர்ந்தனரென்பதும், பின் அது அவர்களுக்குப் பஞ்சவடியைக் காட்டி மீண்டது என்பதுமே. இவையனைத்தும் கம்பருடைய கற்பனைகளே. பஞ்சவடியில் இராமன் தனக்கு தம்பி இழைத்த தனியறை கண்டு பாராட்டிய செய்தியைக் கம்பர் மறைத்ததோடு அக்குடிசையை ஜடாயு போனபின்னரே கட்டினனெவும் நவிலுகின்றனர்.

இரண்டாம் அத்தியாயம்.

ஒரு நாள் காலையில் இராமனும் இலக்குவனும் சீதையும் கோதாவரியில் நீராடப் போனார்கள். இலக்குவன் "நல்லவனாகிய பரதனுக்கு தீயவளாகிய கைகேசி எவ்வாறு தாயாக அமைந்தாள்?" என்றான். இராமன் "நல்லவனாகிய பரதனுடைய இனிய மொழிகள் எனக்கு அடிக்கடி நினைவுக்கு வருகின்றன" என்றான். அவர்கள் நீராடி குடிசைக்கு வந்தார்கள். அப்போது இராவணனுடைய தங்கையாகிய சூர்ப்பனகை அங்கே வந்து இராமனைக்கண்டு காமுற்று அவர்களை யாரென வினாவினாள். இராமன் தங்கள் வரலாறு கூறி "இவ்வளவு அழகுடைய நீ அரக்கியாகத்தோன்றவில்லை நீ யாரெ"ன வினவினன். சூர்ப்பனகை தன் வரலாறு கூறி இராமனை நோக்கி "இவ்வழகற்ற பெண்ணோடிருக்கி

றாயே! என்னோடுவா நாம் சுகமாகக் கூடி வாழ்வோம். இவளையும் உன் தம்பியையும் நான் கொன்றுவிடுகிறேன்'' என்றாள். இராமன் "நான் கல்யாணமானவன்; என் தம்பி பெண் சுகத்தை அறியான்; அவனுக்கு மனைவியில்லை; உன் அழகான உருவத்துக்கு அவனே சரியானவன். அவனை நீ பெற்றால் சச்களத்திக் கவலையில்லாமல் இருக்கலாம்'' என்றான் சூர்ப்பனகை இலக்குவனை அடைந்து வேண்ட, அவன் "நான் இராமனுக்கு அடிமை, ஆதலின் நீ தலைவனையே மணக்க வேண்டும். சீனதயோ விகாரமான உருவுடையவள், கெட்ட நடையுள்ளவள், சரிந்த வயிறுள்ளவள், கிழவி, ஆதலின் நிகரற்ற அழகுள்ள சிறுமியாகிய நீ அவரை அடைதலே நன்று'' என்றான். அவள் இராமனை அடைந்து "அழகற்ற, கெட்ட நடையுள்ள, கிழவியான இவளைக் கொன்றுவிடுகிறேன். அப்படியானால்தான் நீர் என் வசமாவீர்'' என்று சீதையைக் கொல்ல ஓடினான். இராமன் "கெட்டவர்களிடத்தில் விளையாடக்கூடாது. தம்பி! இவளை உருக்குலைத்துவிடு'' என்றனன். உடனே இலக்குவன் அவளுடைய மூக்கையும் காதுகளையும் அறுத்தான். அவள் ஓடிக் கரனிடம் தெரிவித்தான். கரன் சினம்கொண்டு தனது பதினான்கு சேனாதிபதிகளையும் அனுப்பினன். தம்பியைச் சீதைக்குக் காவலாக வைத்து இராமன் அவர்களோடு போரிட்டுக்கொன்றான். அது கண்டு சூர்ப்பனகை கரனிடம் நிகழ்ந்தது கூற, கரன் தூடணனென்ற சேனாதிபதியைப் போர்க்குப் புறப்பட ஏவித்தானும் தேரேறிச் சென்றான். பல தீய நிமித்தங்கள் தோன்றினும் அவன் மனம் கலங்கவில்லை.

சண்டை தொடங்கிற்று. இராமன் எதிரிகளின் போர்க் கருவிளால் எல்லா அவயவங்களும் பிளக்கப்பட்டும் வருத்தமடையவில்லை. அவன் நெருங்கிவந்த அரக்கர் பலரையும் அம்பெய்து கொன்றான். அதுகண்டு தூடணன் ஐயாயிரம் வீரரை ஏவினன். இராமன் அவர்களைக் கொன்றதோடு தூடணனையும் பொருது கொன்றான். கரன் பன்னிரு தலைவரையும் பதினாயிரம் வீரரையும் ஏவ அவர்களும் மடிந்தார்கள். திரிசிரசு என்ற தலைவனும் மடிந்தான். கரன் சினந்து வந்து இராமனுடைய வில்லை முறித்துக் கவசத்தைப்பிளந்து அம்புகளால் உறுப்புக்களையெல்லாம் துளைத்தான். உடனே இராமன் அகத்தியன் தந்த வில்லையெடுத்துக் கரனுடைய வில்லையும் தேரையும் அழித்தான். அவன் கரனைப்பார்த்து "பாவியாகிய நீ பல துன்பங்களை முனிவர்களுக்குச் செய்

தாய். உங்களைக் கொல்லவே நான் மன்னவரால் காட்டுக்கு அனுப்பப்பட்டேன்'' என்றான். கரன் இராமனை இகழ்ந்து தடியால் எறிய அதை இராமன் அழித்தான். இராமன் வெறுங்கையனாய் நின்ற கரனை இகழ்ந்தான் பின் ஓர் அம்பெய்து அவனையும் கொன்றான். அங்கே முனிவர் கூடி இராமனை வாழ்த்தி ''இதற்காகவே உன்னைச் சரபங்கர் சுதீக்கணரிடமும் அவர் அகத்தியரிடமும் அனுப்பிக் கரனை அணுகச் செய்தனர். இதற்காகவே இந்திரன் அவர்களைக் கண்டனன். நாங்கள் நினைத்தது முடிந்தது'' என்றார்கள். சீதை இராமனைத் தழுவிக்கொண்டாள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இலக்குவன் கைகேசியை இகழ்கிறான். இவர்கள் இராமனுக்கு நாட்டைப் பரதன் கொடுத்த பின்னரும் கைகேசியிடம் பகைமை பாராட்டுவது அவர்களுடைய கீழ்மையையே உணர்த்தும். இராமன் பரதனைப் புகழ்கிறான். தனக்குறிய நாடு முழுதையும் கொடுத்த ஒருவனை இராமன் புகழ்வது வியப்பாகாது.

இராமனிடம் சூர்ப்பனகை அழகிய உருவுடன் வருகிறாள். அதைப்பற்றி மொழிபெயர்ப்பாளர் நரசிம்மாச்சாரியார் 1322-ம் பக்கத்தில் ''சூர்ப்பனகை நினைத்தபடி வடிவம் கொள்ள வல்லவளாகையால் இராமனுக்காக அழகிய உருவம் தரித்திருந்தாள். அவளைக் கவி (வால்மீகி) விகார ரூபமாக வர்ணிப்பது அவளது வாஸ்தவமான ரூபத்தை வர்ணிப்பதற்காக என்று தெரிகிறது'' என்று எழுதுகிறார் சூர்ப்பனகை உண்மையில் பேரழகுடையவளே. அவள் இராமாயணக் கதையில் தோன்றுவது அழகுடையவளாகவே. அவளை அழகற்றவளாக வால்மீகி கூறுவதெல்லாம் வகுப்புப் பகைமையாலேயாம். நினைத்த உருவங்களையெல்லாம் அவள் எடுத்தாளென்று புகல்வது தமது ஆசைதீர அவளை இகழ்வதற்கேயாம். மேலும் அவள், இராமன் மேலும் இலக்குவன் மேலும் ஆசை கொண்டு, வேண்டி அலைந்தாள் என்பதும் இராவணனாகிய தமிழ் மகனுக்கு இகழ்ச்சியுண்டாக்குவதற்கேயாம். இராவணன் சீதையை தூக்கிச் சென்று, பத்து மாதம் சிறை வைத்திருந்த இகழ்ச்சி ஆரியராகிய தமக்கு இவ்வாறு சூர்ப்பனகையை இகழ்ந்துரைத்தலால் தீரும் என்பது இவ்வாரியர்களுடைய கருத்துபோலும். அதனாலேயே இராவணன் தங்கையாகிய சூர்ப்பனகையை இவ்வளவு கேவலமாக வால்மீகி காட்டுகிறார் போலும்.

இராமன் சூர்ப்பனகையிடம் "இலக்குவன் மணமாகாதவன், பெண்கள் நலமறியாதவன். அதனால் அவனிடம் போ" என்று பொய் புகல்கிறான். இவன் பொய்மையாளர் அனைவருக்கும் தலைவனென்னுமாறு அவ்வளவு பெரும் பொய்யன் என்பதை நாம் முன்னரே பல இடங்களில் நிலைநாட்டிவந்தோம். ஈண்டும் இவன் பொய்மைக்கோர் எடுத்துக்காட்டமைந்தது. ஓர் பெண் தன்னை வலிய அழைக்கவருவளாயின் தனக்கு விருப்பமில்லாதபோது என்ன செய்யவேண்டும். அவளிடம் தன் விருப்பமில்லாமையைப் புகன்று அனுப்பிடுவதே ஒழுக்கமுடையார் செயலன்றோ? இராமன் தன் தம்பி மணமில்லாதவனெனப் பொய் புகன்று அவளை அவனிடம் அனுப்புகிறான். இந்த இடத்தில் மொழி பெயர்ப்பாளர், சீனிவாச ஐயங்காரும் ஆரணியகாண்டம் பக்கம் 47-ல் "உத்தம நாயகனுடைய லக்ஷணம் வாய்ந்த ராமன் இப்படிப் பரிகாசம் செய்வது நியாயமல்ல. லக்ஷ்மணனைத் தாழ்த்தி உண்மையில்லாத வார்த்தைகளை அவனைப்பற்றிச் சொல்லி சூர்ப்பனகையை ஏமாற்றுவதும் உசிதமல்ல" என்று எழுதுகிறார். நமது மொழி பெயர்ப்பாளர் மெய்யறிவு கொண்டவராதவின், வைணவராகிய ஐயங்காராயிருந்தும் இவ்வாறு பல இடங்களிலும் உண்மையை எடுத்துக் காட்டிப் பொய்மையைக் கடிகிறார். தமிழ் மக்களில் அறிவற்ற சிலர் நாம் உண்மைகளையெல்லாம் சத்தியமாக எடுத்துக் காட்டினாலும், நம்ப மறுக்கின்றனர். இவர் தம் அறியாமை என்னென்பது? இவர்களை இவ்வுண்மையுரைகளைக் கண்டேனும் தெளிவடையுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இராமன் உயர்குடிப்பிறப்பினனாயினன்றோ? பொய் புகலானாவான்.

இலக்குவன், சீதையைப்பற்றிக் கிழவியென்றும், சரிந்த வயிறுடையவளென்றும், தீய நடையுடையவளென்றும் சொல்லுகிறான். இது நாம் முன்னர் பூப்பெய்தி மணப்பருவமடைந்து பல ஆண்டுகள் சென்றபின்னரே, சிறுவனாகிய இராமன் வயதுக்கு மிக மூத்தவளாகிய சீதையை மணக்கிறான் என்று நிலை நாட்டிய உண்மையை மேலும் வலியுறுத்துகின்றது. இலக்குவனே சீதையைக் கிழவியென்றும், தீய நடையுடையவளென்றும் புகன்ற செய்தி பொய்யாமா? அன்றி இலக்குவன் பொய்யனாதல் வேண்டும். ஆனால் இலக்குவன் கூறியாங்கே சூர்ப்பனகையையும் இராமனிடம் சீதையைக் கிழவி

என்கின்றனள் ஆதலின் சீதை தோற்றத்தில் வயது முதிர்ந்த வளாகவே காணப்பட்டிருத்தல் வேண்டும்.

சீதையைச் சூர்ப்பனகை தாக்கவந்தபோது இராமன், "தம்பி! ஏன் இவளிடம் விளையாடுகிறாய்?" என்கிறான். நமது சீனிவாச ஐயங்கார் குறிப்பு கவனிக்கத்தக்கது. அவர் பக்கம் 48-ல் "தானே அப்படி ஏன் செய்தாரென்று விளங்க வில்லை" என்று குறிக்கிறார். தனக்கொரு நீதியும், பிற ருக்கொரு நீதியும் பேசும் இராமனைப் போலும் தீயவரும் உளராவரோ? மிகத்தளர்ந்த கிழவியாகிய தாடகையைக் கூசாது கொன்ற சுத்த வீரனென்று பாராட்டப்படும் இராமன் தன் தம்பியை நோக்கி "அவளை உருக்குலை" என்று கட் டளையிடுகிறான். இத்தகைய வீரர்கள் இவ்வுலகெங்கணு மே காணப்படுகிறார். அண்ணன் வாய் கூசாது கட்டளை இடத் தம்பி கைகூசாது சூர்ப்பனகையின் மூக்கையும் காது களையும் அறுத்துவிடுகிறான். இப்பாபிகளின் இழி செயல் களை என்னென்பது? அறிவாளிகளான தமிழ்ப்பெரியோர் களே! இத்தீயசெயல் பெண்களிடம் பிறந்த மக்களுக்கு ஏற் றதாமா? இவ்வாறு உருக்குலைத்து அவளை உலகில் சீரழிய விடுவதிலும் கொன்றிருத்தல் மிக மேலான செயலாமன்றோ? இராமனும் இலக்குவனும் பல மனைவியர்களிடமிருந்தவர் களென்றும், அந்நிய ஆடவர்களாகிய புரோகிதருடன் சேர்ந்த பெண்களாகிய வியபசாரிகள் பெற்ற பிள்ளைகளென்பதும் முன்னரே பல இடங்களில் நிலை நாட்டினோம். ஆதலின் இத் தகைய இழி பிறப்பாளராகிய ஒழுக்கங் கெட்ட இராமனும் இலக்குவனும் மிகச்சிறந்த அழகோடு தோன்றிய சூர்ப்பனகை அவள் வலிய வேண்டும்போது கூட மறுத்தனரென்பது அறி வுக்கு ஒவ்வாததாயிருக்கின்றது. உலக இயற்கைக்கு மாறா யுள்ளது. ஆதலின் இக்கதை ஆரியர்களாலும், நாம் முன் குறித்தபடி வேண்டுமென்று கட்டிவிட்டதாகவே இருத்தல் வேண்டும் என்பதற்கு என்னே தடையுளது?

இராமன் தூடணனையும், திரிசிரசையும் ஏனைய அரக் கரையும் கொன்று கரனோடு போரிடும்போது, அவனை நோக்கி, "அரக்கரைக் கொல்லவே நான் மன்னவரால் காட் டுக்கு அனுப்பப்பட்டேன்" என்று வாய் கூசாமல் பொய் பேசு கிறான். பொய்மையே ஓர் உருவினனாகிய இராமன் இவ் வாறு புகல்வது இயல்பேயாமன்றி வியப்பாகாது. இந்த இடத்தில் மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்காரும் பக்கம்

69-ல் "இப்படித் தசரதர் சொன்னதாகத் தெரியவில்லை" என்று குறிக்கிறார். தசரதன் அக்கிரமமாக உரிமையற்ற இராமனுக்குத் தனக்கிருந்த ஆண்மையல் காரணமாக முடி சூட்ட முனைந்து நின்றதும் அது தற்செயலாகக் கூனி செய்த முயற்சி காரணமாகக் கைகேசியால் தடைபட்டதும், மறுபடியும் இராமனை முடி சூடுமாறு தசரதன் அக்கிரமமாகப் பல தடவை தூண்டினதும், தன் சொல்லைக் கேளாமல் தந்திரசாலியாகிய இராமன் காடேகும்போது தசரதன் அவனைத் தடுக்குமாறு பின்னால் விழுந்தோடியதுமாகிய செயல்களையெல்லாம் உணர்ந்த அறிஞர் எவர்தான் இராமன் கானிடம் கூறிய இவ்வெறும் பேச்சைப் பொய் என்று கூறார்? அறிஞரே! சிந்தித்து உண்மையுணருங்கள். இவ்வுண்மைகளை உங்கள் உற்றார் உடன்பிறந்தார் நண்பரனைவரும் உணருமாறு எடுத்தியம்பியருளுங்கள். உங்களுக்கு இதுதான் மிகத் தலைசிறந்ததொரு அறச் செயலாக நின்று உற்றுழி உதவும்; இதனை மறவாதீர்கள்.

முனிவர்கள் இராமனை மெல்லமெல்லக் கரன் இருக்குமிடத்திற்கு அருகே தள்ளித்தள்ளி வாழச்செய்த உண்மையை அவர்களே இராமனிடம் கூறிவிடுகின்றனர். இவ்வாரிய முனிவர்கள் தாம் வாழ்வடைவான் செய்த சூழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். இவ்வளவு சூழ்ச்சிகளுக்கும் தலைவன் இந்திரனென்றும் கூறுகின்றனர். ஆதலின் இவ்விந்திரனென்பான் சுராபானமாகிய கட்குடியராகிய சுரர்களான ஆரியர் தலைவன் என்பதும் அவன் தமிழ் மக்களின் கேட்டைச் சூழ்ந்தனன் என்பதும் உண்மை மொழிகளேயாம்.

இராமனைவிட வயது முதிர்ந்தவளும் இலக்குவன் மொழிப்படி கிழவியுமாகிய சீதை இராமனைப்பலரும் காணப் பலமுறை வலிய அணைத்துக்கொள்கின்றனள். கிழவிகளுக்குச் சிறுவரிடம் விருப்பு மிகுதியாம்போலும்! இக்காலத்தில் நாடகமேடைகளிலேயே இத்தகைய தழுவுஞ் செய்கைகளைப் பெண்கள் சிலரிடம் காண்கின்றோம். மேலும் சிறுவர் வயது முதிர்ந்த பெண்களை மணத்தல் இக்காலத்திலும் சிலரிடம் காணப்படுகிறது. முன்னர் கவி பாடும் திறமை வாய்ந்த ஓர் அறிவுடைய ஆங்கிலப் பெண்மகளாகிய கிழவி ஓர் ஆங்கிலப் புலவனைச் சிறுவனாயிருந்தும் மணந்தனள் என்ற வரலாறு காணப்படுகிறது. தற்காலத்திலுங்கூட ஜெர்மனியை அரசாண்டிருந்த கெய்சருடைய தங்கையாகிய கிழவி ஒருத்தி ஒரு வாலிபனை மணந்த செய்தி உலகறியப் பல பத்திரிகைக

ளிலும் சில மாதங்களின் முன் வெளிவந்திருந்ததன்றோ? இனி கம்பரது புரளியை ஆராய்வோம்.

வால்மீகி கூற்றுக்கு மாறாகக் கம்பர் சடாயு பிரிந்தபின்னரே, இராமனாதியர் கோதாவரியை அடைந்து பஞ்சவடியை குறுகிக் குடிசை கட்டியிருந்தனரெனச் சொல்லுகிறார். அவர்கள் சூர்ப்பனகையைக் கண்ட அன்று நீராடச் சென்றதையும், இலக்குவன் கைகேசியை இகழ்ந்ததையும், பரதனை இராமன் புகழ்ந்ததையும் அவர் மொழியாது விடுத்தார். கம்பர் சூர்ப்பனகையினுடைய பேரழகை மிக விரிவாக வாய்குளிரப் பாடுகிறார். சூர்ப்பனகை தோன்றி, இராமனை யாரென வினவியதாகவும், அதற்கு அவன் தன் வரலாறு புகன்று அவளை யாரென வினவியதாகவும் வால்மீகி கூற, கம்பர் இராமனைக்கண்டு நாணி நின்ற அவளை நோக்கி நீ யாரென வினவ, அவள் தன் வரலாறு உரைத்தனளென மொழிந்தார்.

இங்கே, அறிஞரை ஒன்று சிந்திக்கவேண்டுகின்றோம். தனது அழகற்ற அரக்க உருவுடன் சென்றால், இராமன் விரும்பானெனத் தன் உருவமாற்றி அழகிய உருவுடன் சென்ற அறிவாளியாகிய சூர்ப்பனகை தன்னை யாரெனக்கேட்டபோது இராவணன் தங்கை என்று மொழிந்ததாகக் கதை வருகிறது. இது இயற்கைக்கு மாறாக உள்ளது. வேறு ஆரியப் பெயர் எதனையேனும் சாற்றி அதனை ஏமாற்ற அவள் துணிந்திருப்பாளேயொழிய, தனது உண்மை வரலாற்றை அவள் மொழிந்திராள். இராவணன் தங்கையென்று சொன்னால் இராமன் பயந்து தன்னைச் சேருவான் என நம்பி, அவள் மொழிந்திருப்பளோ என்னின் அதுவும் இயற்கைக்கு மாறேயாம், இராவணன் தன் தங்கையைக் கற்பழித்த உண்மை உணருமேல் கொல்வனெனவே அஞ்சி, இராமன் தன்னைச் சேரானென அறிந்து அவள் அறிவாளியாகையால் உண்மையை மொழிந்திராள். ஆதலின் சூர்ப்பனகையைப் பற்றிய இக்கதையெல்லாம் வேண்டுமென்று தமிழ் மக்களை இழிவு படுத்த ஆரியர் கட்டிய கதையேயாகும். நிற்க,

வால்மீகிசொல்வதெல்லாம் தன்னிடம் வந்த சூர்ப்பனகையை இராமன் தன் தம்பியிடம் பொய் சொல்லி அனுப்பினதும் இலக்குவன் சீதையை இகழ்ந்து அவளைத் திரும்பவும் இராமனிடம் அனுப்பினதும், அவள் சீதையைத் தாக்கச் சென்றபோது இராமன் அவளை உருக்குலைக்குமாறு தம்பியை ஏவி

னதும், அவன் அக்கட்டளைப்படி அவளுடைய காதுகளையும், மூக்கையும் அறுத்ததுமேயாம். இதனால் இராமன் மிக மிகக் கொடும்பாதகனாகின்றனன். இவ்வுண்மைகளை மறைத்து கதையை வேறுவிதமாக எழுதினாலே இராமனை நல்லவனைப் போல தமிழ் உலகினர்க்குக் காட்டி அவர்களை ஏமாற்றலாம். அதனால், கம்பர் இக்கதையைப் பின்வருமாறு மாற்றி எழுதுகிறார். இவைகளையெல்லாம் அறிஞர் சிந்தித்து உண்மையுணருமாறு வேண்டிக்கொள்கின்றோம். இராமன் சூர்ப்பனகை இராவணனுடைய தங்கை என்பதைக் கேட்டு "இராவணன் தங்கையாயின் இவ்வழகிய உருவேது? மேலும் துணையின்றி எவ்வாறு வந்தாய்? என்று வினவினன். அவள்தான் தீயவர்களாகிய இராவணாதியரை வெறுத்துத்தள்ளி, நல்லுருப் பெற்று ஆரிய முனிவருடன் உறைவதாகப் புகன்றனள். அச்செய்யுள் வருமாறு:—

"வீரன் அஃதுரைத்தலோடும் மெய்யிலாள்,
[விமல! யான் அச்
சீரியர் அல்லார் மாட்டுச் சேர்கிலேன் தேவர்பாலும்
ஆரிய முனிவர்பாலும் அடைந்தனன்
[இறைவ! ஈண்டோர்
காரியமுண்மை நின்னைக் காணியவந்தேன் என்றாள்"

பின் அவள் காதல் உணர்ந்த இராமன் "நீ அந்தணன் மகள், நான் அரசன், ஆதலின் குலம் ஒவ்வாது. நீ அரக்கி, நான் மனிதன், ஆதலின் உன்னை மணத்தல் ஒவ்வாது. உன்னுடைய தமையன் வந்து கொடுத்தால் கொள்வேன்" என்கிறான். சூர்ப்பனகை "என் தாய் அரசன் மகள் நான் தவத்தால் அரக்கத் தன்மை போக்கினேன். நாம் கந்தர்வ மணம் செய்தால் பின் என் தமையன் இசைவான் என்று மறுமொழி கூறினாள். அப்போது சீதை வர, சூர்ப்பனகை வெகுண்டு "இவள் ஓர் அரக்கி, இவளை வெறுத்துத்தள்ளி, என்னை மண" என்று அவளை அதட்டினாள். உடனே இராமன் "நீ போய்விடு, இல்லையானால் என் தம்பிமுனிவான்ஆதலின் போ" எனலும், அவள் "இக்குரூபியை விரும்பி என்னை இகழ்வதேன்? என்னை மணக்க மன்மதனும் தவம் புரிகின்றனன்" என்றாள். உடனே இராமன் சீதையோடும் குடிசைக்குள்ளே போய்விட்டான். ஞாயிறு மேற்குக்கடலிலே மறைந்தான். இருள் சூழ்ந்தது, இரவெல்லாம் சூர்ப்பனகை மதியாலும், தென்றலாலும் மிகவாடி இராமனையே நினைந்து வருந்தியிருந்தாள்.

மேலே கண்ட வரலாறு சூர்ப்பனகையை மிகவும் இழிவு படுத்திப் பொய்யளாக்குவதாக உளது. இராமன் சூர்ப்பன கையிடம் தன் தம்பி மணமிலனாகி மங்கையரின் இன்பமுண ரானெனப் பல பொய்யுரை புகன்றவையெல்லாம் கம்பர் மறைத் துச் சூர்ப்பனகை உள்ளதைத் தெரிவித்ததெல்லாம் மாற்றி, அவள் தான் அரக்கரை வெறுத்தமை புகன்றனளென அவள் மேல் பொய்மை ஏற்றுகிறார். கம்பர் இராமனாதியரும் முனி வரும், தேவரும் ஒரே வகுப்பினரென்பதையும் இராவணாதி யர் வேறு வகையினர் என்பதையும் உணர்ந்தேயிருந்தார். சூர்ப்பனகை கூற்றாக "தேவர்பாலும், முனிவர்பாலும் அடைந்த தனன்" என்று கம்பர் சொல்லுகிறார். இதனால், ஆரியரைப் பலபடப் புகழ்ந்து தமிழ் மக்களைத் தாழ்த்துவதே தமது கொள்கையாகக் கொண்டவர் கம்பரென்பதும், ஆரியர் தமிழ ரென்ற உணர்ச்சியில்லாதவராக கம்பர் இல்லை யென்பதும், வெள்ளிடை விலங்கலே.

இராமனுக்கும் சூர்ப்பனகைக்கும் நடந்ததாகக் கூறப் பெறும் வாக்கு வாதங்களெல்லாம் கம்பருடைய கற்பனைக ளாகிய பொய்யுரைகளே. இப்படியும் ஒருவர் தமிழ் மக்களி டைத்தோன்றினாரே! இவர் வாலியின் தம்பி சுக்கிரீவனை யும், இராவணன் தம்பி விபீஷணனையும் எவ்வாற்றாலும் ஒப்பர் என்பதில் என்ன தடை?

இராமன் சூர்ப்பனகையை வெளியே விட்டு விட்டுச் சீதை யுடன் குடிசையுட் சென்றானென்பதும் சூர்ப்பனகை இரவெல் லாம் வெளியிலிருந்து தவித்தாளென்பதும் கம்பருடைய பொய்யுரைகளே. மேலும் கம்பர் புரளியைத் தொடர்ந்து செல்லுவோம்.

விடிந்ததும் இராமன் வெளியே சென்றான். சீதை தனித்திருக்கிறாளென எண்ணி சூர்ப்பனகை அவளிடம் செல்ல இலக்குவன் அவளைப்பிடித்து கூந்தலைப்பற்றி "மூக் கும் காதும் முலைக் கண்களும்" அறுத்தான். சூர்ப்பனகை பலவாறு புலம்பி அழுது அங்கே வந்த இராமனிடம் தெரிவி த்தாள். அவன் நடந்தவற்றைக் குறிப்பாலுணர்ந்துகொண்டு அவளை "நீ யார்?" என்று கேட்டான். அவள் "உனக்கு என்னைத் தெரியவில்லையா?" என்று கூறி தான் இராவ ணன் தங்கையென்கிறாள், இராமன் "இங்கேன் வந்தா"யெ னவும், அவள் நான் "நேற்றும் வரவில்லையா?" என்ற னள். இராமன் "தம்பி! நீ இவ்வாறு செய்யக் காரணமெ

ன்னை?'' என வினவினன். இலக்குவன் நடந்தது கூறினன். சூர்ப்பனகை ''மாற்றவளைக்கண்டால் மனம்வெகுளாதோ?'' என்றனள். இராமன் அவளை ''ஓடிப்போ'' என அவள் ''என்னை ஏற்றால் பிழைப்பீர். இல்லையானால் இராவணன் உங்களைக் கொல்வான். நீங்கள் இவளை உருக்குலைத்தால் பிறர் இவளை விரும்பார் நம்மிடமே இருப்பாளென்று உருக்குலைத்தீர் ஆதலின் என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்.'' என்றனள். இராமன் தன் வரலாறு கூறி ''அரக்கரைக்கொண்டுவா அவரைக்கொல்வேன்'' என்றனன். அவள் ,,அப்படியாயின் நீங்கள் என்னைச் சேர்த்துக்கொண்டால் அரக்கருடைய உளவெல்லாம் உங்களுக்குச்சொல்லுவேன்'' என்றாள். அப்போது இலக்குவன் ''இவளைக்கொல்லாது விட்டால் இன்னும் துன்புறுத்துவாள்'' என்ன, இராமனும் ''இவள் போகாளேல் அவ்வாறே இவளைக்கொல்'! என்றனன். உடனே சூர்ப்பனகை ''உங்களைக்கொல்லக் கரனை அழைத்து வருகிறேன்'' என்று ஓடினாள். இது கம்பர் சொல்லும் வரலாறு.

இராமனே நேரில் திருவாய் திறந்து சூர்ப்பனகையை உருக் குலைக்க ஏவியிருக்க, அக்கதையை மாற்றி இராமனை நல்லவனாக எண்ணிக் கம்பர் மேலே கண்டவாறு கதையை மாற்றியிருக்கிறார். சூர்ப்பனகை சில நாழிகை நேரமே அவர்கள் முன் இருந்தனளாகக் கம்பர் அவள் இரண்டு நாள் இருந்தனள் என்கிறார். இரவெல்லாம் அவள் காமுற்று வருந்தியிருந்தமை கூற அவருக்கெழுந்த ஆசையில் இவ்வாறு கதையை மாற்றினர்போலும்! அவள் மறுநாள் சீதையைப் பின் தொடர்ந்ததாகவும் இலக்குவன் உடனே அவளைப்பற்றி மூக்கையும், காதுகளையும், முலைகளையும் அறுத்தனன். என்றும் கம்பர் கூறுகிறார். அவள் மூக்கையும், காதுகளையுமே அறுத்தான் என்று வால்மீகி கூற, கம்பர் அவளுடைய முலைகளையும் அறுத்தனனென நெஞ்சம் கூசாது நினைத்து வாய் கூசாது பாடிக் கை கூசாது எழுதியிருக்கின்றனரே! வால்மீகி கூறியதையே கூறியிருப்பின் இவர்கள்மேல் பிழை வராது. வால்மீகி கூறாததான இத்தீய செயலையும் இலக்குவன் செய்தனனெனக்கூறி அவனைத் தீயவனாக்கியதோடு, சூர்ப்பனகையையும் மிக இழிவு படுத்துகிறார். என்னே இவரது தீயமதி! என்னே இவர் தம் கீழ்மை? ஒரு பெண்ணாகிய சூர்ப்பனகையை தமிழ்ப் பேரரசனாகிய இராவணனின் தங்கையை இழிவுபடுத்தவேண்டுமென்று ஆரியர் கட்டிய

கதையாகிய இதிலே மேலும் இழிவுபடுத்தக்கூடிய இச்செயலைக் கூறினாரே கம்பர்? இவரை என் செய்வது? இவரையும் கல்வியில் பெரியவரென்று இப்பித்துடைய உலகம் கூறுகின்றதே? மேலும் அவள் கீழே அறுந்துகிடந்த முலைகளைக் கையாலெடுத்துப் பார்த்து அழுதனனென்று இப்பொய்க் கதைக்கும் மேல் பொய்க்கதை கூறுகின்றனன். புன்மதிக் கம்பன் "நிலத்தினில் இணைத்தடங் கொங்கை பற்றும் பார்க்கும் மெய் வியர்க்கும்" என்று கூறுகின்றனன்.

ஒழுக்கமுடையவனென்றும் ஆரியர் போற்றும் இலக்குவன் உண்மையவனேல் சினம் பற்றிக் காதையும் மூக்கையும் அறுத்தாலும் ஓர்பெண்ணினுடைய தொடற்கரும் உறுப்பைத் தொடலாமா? அதிலும் அதனை அறுக்கலாமா? ஒரு பெண்ணைத் தொடுதலே தீமையான ஒழுக்கமாயிருக்க, இவ்விலக்குவன் இவ்வாறு மனதாலும் நினைக்கக்கூடாத செயலைச் செய்தனனே. இவனையும் இளையாழ்வார் என்று சிலர் போற்றுகின்றனரே? கம்பனுக்கு இவ்வாறு எழுதுவதால் இலக்குவனுக்கு மிகத் தீயபட்டம் கிடைக்குமென்று தெரியுமோ தெரியாதோ? தெரிந்தாலும் தனக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரண்டு கண்ணும் போகவேண்டும் என்று எண்ணும் புல்லியனைப் போல் கம்பன் இக்கதை கட்டினன் போலும்!

பின் சூர்ப்பனகை அங்கே வந்த இராமனிடம் தன்னை இலக்குவன் செய்த கேட்டைக் கூறியதாகவும் அவன் நடந்ததை ஊகித்தறிந்துகொண்டு தெரியாதவனைப் போலப் பாசாங்கு செய்து, அவளையும் இன்னாளென அறியாததுபோல் நடந்து தம்பியிடம் நடந்ததென்னவென்று வினாவுகிறான். இது இராமனை நல்லவனாகக் காட்டக் கட்டிய கதையேனும் அவனையறியாமலே இராமனைத் தீயவனென உலகினர் அறியுமாறு பாடியிருக்கிறான். எவ்வாறெனில், சூர்ப்பனகையை முந்தின நாளில்தான் கண்டு நெடுநேரம் பேசிய ராமன் மறுநாட்காலையில் அவளை முன்பின் அறியாதவனைப்போல் பாசாங்கு செய்கிறான். இவ்வாறு இராமனைப் பாசாங்குக்காரனெனவாவது காட்டினனே கம்பன்? சூர்ப்பனகையைப் பற்றிக் கட்டிய புதுக்கதையாகிய அவள் உருக்குலைந்தபின்னும் நயத்தாலும், பயத்தாலும் இராமனைச் சேர்த்துகொள்ளவேண்டினளென்ற கதை அறிவுக்கும், உலகியலுக்கும் பொருந்தாததாயுள்ளது. மேலும், அது கம்பனுடைய புன்மதியை நிலை நிறுத்துவதாகவும் உள்ளது. கடைசியில் இலக்குவன் சூர்ப்பனகையைக் கொல்லத் துணிந்து வேண்ட,

இராமனும் இசைகிறான் என்று கம்பன் காட்டிய கதையும் அவன் மனமாரப் பொய்த்ததால் அவன் மனம் அவனைச் சுட மெய்மறந்து எழுதியதாகவே உள்ளது. பெண் கொலை புரிவதில் இராமனும் இலக்குவனும் கைதேர்ந்தவரல்லரோ? அதனாலே இக்கொலைபாதகரிருவரும் அவளைக் கொல்லத் துணிகின்றனரென்று தன்னையறியாமலே கம்பன் கூறினன் போலும்! நிற்க, அதன்மேல் நடந்ததைப் பற்றிக் கம்பன் கூற்றைக் காண்போம்.

வால்மீகி பொதுவாகச் சீதை காரணமாகத் தன்னை உருக்குலைத்தனரெனச் சூர்ப்பனகை கரனிடம் கூறியதாகக் கூற, கம்பன் தான் சீதையை இராவணனிடம் கொண்டுபோமாறு தூக்கச் சென்றபோது உருக்குலைத்தனரெனச் சொல்லியதாக எழுதுகின்றான். கரன் போருக்குப் போன வழியில் பல தீய நிமித்தங்கள் தோன்றின, அவைகளை அவன் கவனிக்கவில்லை என்றுமட்டும் வால்மீகி மொழிய, கம்பன் கரனை நோக்கி அவன் போர் தொடங்கும் எல்லையில் அகம்பனென்ற அறிவாளன் தீ நிமித்தங்களைக் கூறிப் போரிடாது தடுத்தனனெனப் புகன்றனன்.

முதலில் தூடணனும், பின் பன்னிரு தலைவரும், அதன் பின் திரிசிரசும் மடிந்தனரென வால்மீகி கூற, கம்பன் முதலில் பதினான்கு (பன்னிருவரைப் பதினால்வரென்கின்றனன்.) தலைவரும், பின் திரிசிரசும், அதன்பின்னரே தூடணனும் மடிந்தனரென மாற்றிப் புகன்றனன். தனது வில் முறிந்தவுடன் அகத்தியன் தந்த வில்லால் போரிட்டனனென வால்மீகி நவில, கம்பன், தனது கையை ராமன் நீட்ட வருணன் முன் தந்த வில்லைத் தந்தனனெவும் அதனால் அவன் பொருதனனெவும் புதுக்கதை கட்டுகின்றனன்.

கடைசியில் இராமன் பின்வாங்குமாறு கரன் ஓடிவந்ததைக் கம்பன் சொல்லவில்லை. இதைப்பற்றி மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 72-ல் "கரன் அவ்வளவு நெருங்கி வருவதை இராமன் எதிர்பார்த்து அதற்குத் தகுந்த உபாயம் செய்யாதிருந்தது ஜாக்கிரதைக் குறைவென்றே தோன்றுகிறது" என்றெழுதுகிறார். இச்செய்தியை மறைத்ததைப் போலவே இராமனிடம் முனிவர் நவின்றதையும் சீதை அவனைப் பலர் காணத் தழுவியதையும் கம்பன் மறைத்தனன் இராமனாதியர்க்கிழுக்காவதை மறைப்பதைக் கம்பன் மறப்பதேயில்லை.

மூன்றாம் அத்தியாயம்.

அகம்பனன் என்பவன் ஓடிப்போய் இராவண னைக்கண்டு கரனாதியார் அழிவைப் புகன்றான். விவர மறிந்த இராவணன் உடனே போய் இராமனைக் கொன்று வருகிறதாகப் புறப்பட்டான். அகம்பனன் அவனைத்தடுத்து இராமனை அவ்வாறு சுலபமாய் வெல்லமுடியாதெனச் சொல்லி இராமனுடைய மனைவியாகிய சீதையைத் தூக்கிவந்துவிட் டால் இராமன் அவளிடமுள்ள அன்பால் மடிவான் என்று சொன்னான். அதற்காக இராவணன் தனியே போய் தாட கையின் மகனாகிய மாரீசனை அடைந்து செய்தியையறிவிக்க, அவன் இராவணனைத் தடுத்து அனுப்பினான். அதனால் இராவணன் திரும்பித் தன் நகரையடைந்திருந்தான்.

அச்சமயம்அங்கேசூர்ப்பனகைவந்தாள். இராவணன்எல் லாவிதமான அரசஅங்கங்களிலும்நிரம்பப்பெற்றவனாய் பேரழ குடையதிருமேனியையுடையவனாய்விளங்கினான். அவன்மிக வும்கல்லவன். பிராமணர்கள் வேதமந்திரங்களால் யாகத்தைச் செய்து சோமரசத்தைக் குடிக்கும் சமயத்தில் அவைகளை அழிப்பவன். தேவதைகளுக்கு அவர்கள் கொடுக்கும் யாகத் தை நாசம்பண்ணி அவர்களைக் கொல்பவன். சூர்ப்பனகை இராமன் கரனாதியரைக் கொன்றுவிட்டானென்று கூற இரா வணன் "இராமன் யார்? அவனைப்பற்றிய செய்திகளைச் சொல்" என்றான். அவனையனுகிச்சூர்ப்பனகைகூறுகிறாள், "அண்ணா! ஒற்றரால் செய்தியறிந்துகொள்ள முடியாத நீயும் அரசனா? நமது புகழ்க்குடி கெட்டது. தண்டகா ரண்யத்தில் இராமன், இலக்குவன் என்ற வீரர்கள் வந்திருக் கிறார்கள். அவர்கள் முனிவர்களுக்கு வேண்டியவர்களாய் நம்மையெல்லாம் கொல்லத்துணிந்து, முதலில் கரனாதியரைக் கொன்றுவிட்டார்கள். அவர்களுடைய மனைவி மிக அழகி, அவளை உனக்காகத் தூக்கிவரப்போனேன். அதற்காக என்னை அவர்கள் மானபங்கம் செய்துவிட்டார்கள். வேண் டியதை விரைவில் செய்" என்றாள்.

இராவணன், சீதையைத் தூக்கிவருவதே நலமென எண் ணியொருவருக்கும் தெரியாமல் தேரேறி மறுபடியும் மாரீ சனைக் காணப்புறப்பட்டான். அவன் போகும் வழியில் ஒரு

பெரிய ஆலமரம் இருந்தது. பல முனிவர்களுக்கு இருப்பிடமாகிய அம்மரத்தின் ஒரு கிளை முறிந்திருந்தது அதற்குக் காரணம். முன்னொரு காலத்தில் கருடன் தின்பதற்காக ஒரு பெரிய யானையையும், ஆமையையும் எடுத்துக் கொண்டு அக்கிளையில் உட்கார்ந்தது. அக்கிளையின் கீழ் மாஷர்கள், அஜர்கள், புகை குடிக்கும் முனிவர்கள் முதலிய பலர் வாழ்வதுண்டு. கருடன் அக்கிளையையும் தூக்கிக்கொண்டு போய் யானையையும் தின்றுவிட்டு அக்கிளையை வேடர்கள் இருந்த ஊர் ஒன்றில் எறிந்து அவர்களை அழித்தது. அவைகளைத் தின்றதால் அது இருமடங்கு பலமான உடலைப்பெற்று விண்ணுலகடைந்து அமுதத்தை எடுத்துவந்தது. இவ்வாறாகக் கருடனால் கிளை முறிந்த அந்த ஆலமரத்தைப் பார்த்துக் கொண்டு ராவணன் மாரீசனையடைந்தான். மாரீசன் அவனை வரவேற்று, "இவ்வளவு விரைவில் திரும்பிவந்ததேன்?" என்று வினவினான். இவ்வரலாற்றை ஆராய்வோம்

ஒப்புயர்வற்றவனாகிய இராவணனைச் சாதாரணமான ஒருவனைப் போலக் காட்டவேண்டியே அவன் அகம்பனன் சொன்னபோதும் பின் சூர்ப்பனகை சொன்னபோதும் மாரீசனிடம் போகிறான் என்று எழுதப்பெற்றிருக்கிறது. இதனால் அவன் தனக்கு இயற்கையான அறிவில்லாதவனைப் போல் காட்டப்பெற்றான்.

அவனைப் பற்றிச் சொல்லுமிடத்து அவன் பேரழகன், வல்லவன் என்று கூறி விட்டு வால்மீகி முனிவர் அவன் "பிராமணர்கள் வேதமந்திரங்களால் யாகத்தைச் செய்து சோமரசத்தைக் குடிக்கப்போகும் சமயத்தில் அவைகளை அழிப்பவன். தேவதைகளுக்கு அவர்கள் கொடுக்கும் அவிர்ப்பாகத்தை நாசம் பண்ணி அவர்களைக் கொல்பவன்" என்று எழுதுகிறார். இது நாம் முன் பாலகாண்ட அயோத்தியா காண்ட ஆராய்ச்சிகளில் இடையிடையே குறித்து வந்த செய்திகளையெல்லாம் வலியுறுத்தும். சுரர்கள் என்பவர்களே ஆரியர்கள் அதாவது சுராபானம் பண்ணுகிறவர்கள். அசுரர்கள் என்பவர்கள் தமிழ்மக்கள், அதாவது சுராபானம் பண்ணாதவர்கள். சுரர்களாகிய ஆரியர்கள் காட்டுமிருகங்களைப் போல ஒருவரை யொருவர் அடித்துத் தின்று கொண்டும், காட்டு மிருகங்களைக் கொன்று தின்று கொண்டும் சுரை என்ற கொடியிலிருந்து கள் இறக்கி அதைக் குடித்துக்கொண்டும் திரிந்தார்கள். அவர் இந்திய நாட்டுக்கு வடக்கேயிருந்த

வர்கள். அவர்கள் இந்தியாவில் புகுந்து குடியேறினவுடனே தமிழ் மக்களிடத்திலே இருந்த புலாலுண்ணாமை கள்ளுண்ணாமைகளாகிய சிறந்த குணங்களைக்கண்டு அவர்களுக்கு அசுரர்கள் என்று பெயர் வைத்து அழைத்ததோடு, தாம் செய்து வந்த புலாலுண்ணல் கள்ளுண்ணல் ஆகிய தீய பழக்கங்களைத் தெய்வத்தின் பெயரால் செய்யத்தலைப்பட்டார்கள். அவைகளுக்கு யாகங்கள் என்று பெயரிட்டுக் கொண்டு பல வகைப்பட்ட மிருகங்களையும் கொண்டு வந்து சேர்த்து வெட்டி நெய்க்கொப்பரைகளிலே போட்டு அவித்து எல்லோரும் கூடியாடித் தின்று விட்டு சுரைக்கள்ளாகிய சுராவையும் குடித்தார்கள். அவர்கள் மனிதனைத்தின்ன எண்ணினால் நரமேதம் என்ற யாகம் செய்தார்கள். குதிரையைத்தின்ன எண்ணினால் அசுவமேதம் செய்தார்கள். இவ்வாறாக ஒவ்வொரு யாகமும் செய்தார்கள். இதனால் ஒவ்வொரு யாகத்திலும் மற்ற மிருகங்களும் அளவில்லாமல் கொலைசெய்யப் பெற்றன. ஆரியர்கள் ஒழுக்கமற்றவர்களாய் காட்டுமிருகங்களைப் போலவே அலைந்தார்கள் என்றோம். அவர்கள் ஆணும் பெண்ணும் கூடும் செயல்களில் ஒழுக்கமற்றவர்களாய் வெட்ட வெளிகளிலேயே பலரும் காண அச்செயல் புரிந்து வந்தார்கள். மிருகங்களுக்கு இதுவே செயலாவதன்றோ; [redacted]

ஆரியர்கள் தமிழ் மக்களைக் கண்ட போது ஆண் பெண் சேர்க்கையில் சற்றுஒதுக்கம்இருக்க வேண்டுமென்ற உணர்ச்சி உண்டாயிற்று. இதனால் சிலர் முன்னைய அறிவற்ற செயலை மறக்க மனமில்லாதவர்களானார்கள். அவர்களில் சிலர் அச்செயலுக்கும் தெய்வீகம்கற்பிக்கத் தொடங்கினார்கள். அதற்காக அவர்கள் பலரும் காணவேண்டுமென்று உயரமாகப்பரண்கள் அமைத்து அவைகளின் மேலே ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கு முன்னிலையில் இன்பம் அனுபவித்தார்கள். சில நாட்களின் பின்னர் அதிலும் கொஞ்சம் நாணம் தோன்றி மணமுறைகள் ஏற்பட்டு விதவைகள் மறுமணம் கூடாதென்ற ஏற்பாடுகள் தோன்றிய பின்னர் அவர்கள் இன்பநுகர்ச்சியில் பேராவலுடையவர்களாக இருப்பவர்கள் விதவைகளும் மணமாகாத விடலைகளும் ஆதலின் அவர்களைச் சேர்த்துப் பரணில் பல்லாயிர மக்கள் முன்னிலையில் கூட்டுறவுக்கு விட்டுக்காண வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள். இந்த யாகத்திற்கு பௌண்டரீகயாகமென்று பெயர் வைத்தார்கள். இவ்வேள்வியில் பரணின் கீழே நெய்விட்டு நெருப்பை வளர்த்திருக்கும்.

அத்தீயிலே பரணில் கூடுகிறவர்களுடைய சுக்கில சுரோணி தங்கள் விழவேண்டும், என்னே அறிவீனம்? அக்கினி தேவ னுக்கு விதவை விடலைகளின் சுக்கில சுரோணிதங்களைத் தின்னுவதில் மிகவும் விருப்பம் போலும்? அக்கினி தேவனு டைய உணவுமிகவும் பாராட்டத்தக்கதே! இந்த யாகங்களைப் பற்றி எழுதவே நமது கைகூசுகின்றது; எண்ண நெஞ்சம் துணுக்குறுகின்றது. இவ்வாறாக இவைகளைச் செய்து மகி ழ்ந்த மக்களின் அறிவையும் நாகரீகத்தையும் என்னென்பது? இன்னமும் அவர்கள் இத்தகைய யாகங்களை விட்டபாடில் லையே! நரமேதம் இக்காலத்தில் ஏட்டில்தான் இருக்கிறதே ஒழிய நடைமுறையில் இல்லை. ஏனெனில் அது செய்பவர் கள் தூக்கிலிடப் பெறுவார்கள் என்று ஆங்கிலச்சட்டமிருக் கிறது. அதனால் அது நின்றுபோய்விட்டது. குதிரை முத லான மிருகங்களைத் தின்னும் யாகமும் காணப்பெறவில்லை. ஏனெனில் அம்மிருக உணவு உண்பவர்கள் உலகிலில்லை. ஆடு களைக் காயடித்துக் கொன்று தின்னும் யாகங்கள் மட்டும் அளவிறந்தவை நடக்கின்றன. ஏனெனில் ஆட்டுப்புலால் உண்போர் பெரும்பாலோர் உளராதல்பற்றிப் போலும்!

சில ஆண்டுகளின் முன்னர் கல்லிடைக்குறிச்சி கும்ப கோணம் முதலிய இடங்களிலே பௌண்டரீக யாகம் நடை பெற்றதாம்! அறிவிற்சிறந்து நாடு முன்னேறும் இக்காலத்தி லேயே இவ்வாறு வெறுக்கத் தகுந்த செயல்கள் நடைபெறு மேல் முன்னர் பண்டைக்காலங்களில் எத்தகைய இழிசெயல் கள் நடைபெற்றிருக்கவேண்டும்?

மேலே விவரித்த இழி செயல்களைக்கண்ட பேரறிஞர்க ளாகிய தமிழ் மக்கள் வெறுத்தார்கள். அச்செயல்கள் நடை பெறக்கூடாதென நல்லறிவு கூறினார்கள். கேட்காது நடை பெறும் இடங்களில் சென்று தடை செய்தார்கள். அதிலும் முரண்பட்டவர்களைக் கொன்றார்கள். தமிழ் மன்னர்களும் இத்தடைச் செயல்களை முன் நின்று செய்தார்கள். இதுபற் றியே ஆரியர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் அடிக்கடி சச்சர வுகள் நிகழ்ந்தன. இச்சச்சரவுகளிலே யாகத்தை நடத்தும் ஆரிய ரிஷிகள் தமிழ் மக்களைப் பார்த்து பலவாறு கோபத் தால் சீறி வைதார்கள். "ஏ இந்திரா! இவர்கள் எங்களைத் தடுக்கிறார்களே, இவர்களை உன் வச்சிராயுதத்தால் வெட்டு. ஏ அக்கினி! இவர்களைக் கொன்றுவிடு" என்று பலவாறு வைத வசவுகளும், அத்தெய்வங்களை அவர்கள் புகழ்ந்த புக

ழுரைகளும், வெறுக்கத்தகுந்த யாகங்களுந்தான் வேதங்கள் என்னப்படும். இவைகளைத் தவிர இருக், யஜுர், சாமம், அதர்வணம் என்று சொல்லப்பெறும் வேதங்களில் வேறொன்றும் இல்லை. இவைகளிலுள்ள வாக்கியங்கள் பல காலங்களிலிருந்த பல ரிஷிகளாலே செய்யப்பட்டவை. இவைகள் சமஸ்கிருத பாஷையிலே இருப்பதனால் அதை அறியாத தமிழ் மக்களிடை இவ்வேதங்கள் கடவுளாலேயே செய்யப்பெற்றவை என்று பொய் புகன்றார்கள். இக்காலத்தில் உண்மையுணர்ந்தோர் கேட்கும் வினாக்களுக்கு இவ்வாரியப் பார்ப்பனர்கள் “வேதங்கள் ரிஷிவாக்கே யாயினும் ரிஷிகள் தெய்வத்தை நேரில் கண்டு தெய்வத்தன்மையை அடைந்தவர்கள் அதனால் அவர் வாக்கு தெய்வ வாக்கு என்பதற்கு என்ன தடை?” என்று தங்கள் பொய்யுரைக்கு மேலும் பொய் புகன்று மழுப்புகிறார்கள். ஆட்டையும் மாட்டையும் அடித்துத்தின்றுகொண்டு பௌண்டரீக யாகம் செய்துகொண்டு சுராபானம் செய்து வெறியாட்டாடித்திரிந்த இந்த ரிஷிகளா தெய்வத்தன்மை பொருந்தியவர்கள்? உலகம் இப்போது நன்கு விழித்துக் கொண்டது. இனி இம்மாதிரியான பொய்மைகள் நிற்கமாட்டா.

சிறிது காலத்தின்பின் தமிழ் மக்களிற் சிலர் வடமொழி கற்று வல்லவராய் வந்தபோதுதான், ஆரியரல்லாதாரில் வேதங்களைக் கற்பவர்கள் நாக்கை அறுத்தல் வேண்டும், கேட்ட செவியில் ஈயத்தைக் காச்சி ஊற்றுதல் வேண்டும் என்று இத்தகைய சட்டங்களை ஏற்படுத்தி அவர்களை ஆரியர்கள் துன்புறுத்தத் தொடங்கினார்கள். ஏனெனில் அவர்களுடைய ஆபாசங்கள் பொதிந்த வேதத்தின் புன்மையெல்லாம் புலனாய்விடுமல்லவா? தமிழ் மக்கள் சட்டங்களை மறைத்து அரசரைக் கைவசப்படுத்தி, தமது மநு நீதியை நிலைநாட்டத் தலைப்பட்டார்கள் ஆரியர்கள்.

ஆரியருள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், என்ற நான்கு வகுப்புக்கள் ஏற்பட்டிருந்தன. அதிலும் அவர்களுள் கற்றறிந்தவர்களாகிய பார்ப்பனர்கள் அரசர்களாக இருந்த க்ஷத்திரியரைக் கைவசப்படுத்திக்கொண்டு வைசியர்களையும், சூத்திரர்களையும் நசுக்கிவந்தார்கள். அவர்களுக்கென ஏற்பட்ட சட்ட நூலே மநுநீதி நூல். அதில் ஒரே குற்றத்தைச் செய்த பார்ப்பனனுக்கு ஒருவித தண்டனை, க்ஷத்திரியனுக்கு ஒருவிதம் இவ்வாறாக ஏனைய வகுப்புகளுக்கும் ஒவ்வொரு விதம். இவ்வாறு ஒரு குலத்துக்கு ஒரு

நீதி போதிப்பது அந்நூல். அதனை மிகவும் ஒழுங்கான நூல் என அரசர்களைக் கைவசப்படுத்தி ஏற்பாடு செய்தார்கள். இக்காலத்தின் சட்டங்களிற் பெரும்பகுதிகூட ஆரியர் சட்டங்களை அடிப்படையாகக்கொண்டுள்ளன என்றால் அவர்களுடைய தந்திரம் எவ்வாற்றலது? பிற்காலத்திய 'தமிழ் புலவர்களும் அதனைக்கொண்டு தாம் எழுதும் பாடல்களில் அரசரைப்பற்றி எழுதவேண்டிவந்தால் அவ்வரசர் மநுநீதி தவறாதவர் என்று எழுதத் தொடங்கினார். அறிவின்மை பல்லாற்றாலும் பரவும். அறிவு அவ்வாறு பரவுவது கடினம். தமிழ் மக்களுடைய சட்டதிட்டங்களின் நேர்மையும் மேன்மையும் எவ்வளவு உயர்ந்தன? அம்மேன்மைகளை வேண்டுமாயின் அதில் ஒரு பகுதியாகிய திருவள்ளுவர் நீதி நூலில் விளங்கக் காணலாம். அதனாலே புலவர் சுந்தரம் பிள்ளையும்,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற
நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒரு குலத்துக்கொரு
நீதி" என்றார்.

ஆரியர்கள் தமிழ் மக்களோடு பழகத்தொடங்கியபோது தான் புலாலுண்ணல் தவறென உணர்ந்தார்கள். அதனாலேயே தென்னாட்டுப்பார்ப்பனர் யாககாலங்களிற் தவிர ஏனைய காலங்களில் புலாலுண்ணாமல் இருக்கின்றனர். வடநாட்டு பார்ப்பனரனைவரும் புலாலுண்ணுகின்றனர். அவர்கள் பண்டைக் காலத்தில் தமிழ் மக்களோடு நெருங்கியபோது தமிழ் மக்களால் வெறுக்கப்படுவதை உணர்ந்து, தங்களில் சில வல்லவர்களை முனிவர்களாகவனுப்பி அங்கங்கே தங்கித் தமது பழக்கவழக்கங்களைப் பல வழிகளிலும் பரப்புமாறு ஏவினர். அவர்கள் அங்கங்கே போய்த் தங்கி யாகங்களியற்றி அவைகளால் தெய்வ அருள் வருகிறதெனத் தமிழ் மக்களை ஏமாற்றத் தொடங்கினர். அக்காலத்திலேதான் தமிழ் மன்னர்கள் அவர்களைப் பலவற்றாலும் துன்புறுத்தி அவர்கள் செய்யும் யாகங்களைத் தடைப்படுத்த முயன்றார்கள். அவர்களில் ஒருவனே இராவணேச்சுரன் என்ற தமிழரசன். அவன் மாரீசன் முதலிய வீரர்களை அனுப்பி வேண்டிய தடைச்செயல்களைப்புரிந்து வந்தான். இதனையே விசுவாமித்திர முனிவன் தசரதனிடம் வந்து மாரீசனைப் பற்றிக் கூறியபோது ஆரியனாகிய தசரதன் நடுநடுங்கி இராவணனு

டைய பெயரைக் கேட்டுப் புலம்புகிறான். அவ்வளவு கிலி யிருந்திருக்கிறது இவ்வாரிய மன்னர் நெஞ்சில். இராவணன் முதலிய தமிழ் வேந்தர்கள் இவ்வாறு ஆரியர்களைத் தடுத்து இடையூறு செய்தது சரியா என்னில், அது மிகவும் சரியே. கொலையிற் கொடியாரை வேந்தன் ஒறுத்தல் பயிர்த்தொழிலாளி தனது வயலிலுள்ள பயிர்களைக் கெடுக்கும் களைகளைப்பிடுங்கி எறிவதைப்போலும்.

ஆரியர்கள் கூட்டங்கூட்டமாக இந்தியாவில் வந்து தங்கினரேனும் அவர்களிற் பெரும் பகுதியினர் வடநாடுகளில் தங்கி விட்டனர். தென்னாடுகளில் அவர்களிற் சிலரே, அதிலும் பார்ப்பனரே வந்து சேர்ந்தார்கள். அதனாலேயே தமிழ் நாட்டில் ஆரிய வகுப்பினரில் ஏனைய மூன்று வகுப்புக்களும் காணப்படாமல் பார்ப்பன வகுப்பு மட்டும் காணப்படுகிறது. மேலும் வட நாடுகளிலும் மற்றைய வகுப்புக்கள் பிரிந்திராமல் இருக்கிறது. ஏனெனில் அந்நிய நாட்டுக்கு வருபவர்கள் தம்முள் இருக்கிற வேறுபாடுகளை மறந்திருந்தால் மட்டுமே வாழமுடியும். உதாரணமாக இக்காலத்தில் பிறநாடுகளுக்குப் போயிருக்கும் இந்தியர்கள் தம்முள் இந்தியாவிலிருந்த வகுப்புணர்ச்சியை மறந்து ஒன்றுபட்டு வாழ்வதைக் குறிப்பிடலாம்.

ஒன்றுபட்ட தாங்களெல்லோரும் பார்ப்பனர்கள் என்று கூறிக்கொண்டு பண்டை மக்களை யெல்லாம் சூத்திரர்கள் என அழைக்கத்தொடங்கினர். உலகத்தில் காணப்படும் மக்களனைவரும் படைப்பவனான பிர்மாவினிடத்திலே தோன்றினவர்கள் என்றும், அவர்களுள் பார்ப்பனர்களே அவனுடைய முகத்திலிருந்து தோன்றியவர்களென்றும், க்ஷத்திரியர் தோளிலிருந்தும், வைசியர் இடுப்பிலிருந்தும், சூத்திரர் காலிலிருந்தும் பிறந்தவர்களென்றும் எழுதிவைத்து மற்றவர்களையெல்லாம் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களென்று நம்புமாறு செய்து நசுக்கத்தொடங்கினார்கள்.

இவ்வாறாக ஆரிய மக்கள் தமிழ் மக்களிடை அநேக தீய பழக்கவழக்கங்களைத் தோற்றுவித்தனர். அதனால் தமிழ் மக்களில் சிலர் சிறுதெய்வங்களின் வழிபாட்டைமேற்கொண்டு அவைகளுக்கு ஆடுமாடுகளை வெட்டித்தின்று, கள்ளைப் படைத்துக் குடித்து பலவகைப்பட்ட வகுப்புகளாகப் பிரிந்து ஒற்றுமையற்று நிற்பாராயினர். அவர்களுள் சூத்திரர்கள் என்று பார்ப்பனராலே அழைக்கப் பெறுவோர் சிலர் அறிவு

வரைப்பெற்று 'எங்களை எவ்வாறு சூத்திரர் எனலாம்?' என வினவினால் நீங்கள் சூத்திரர்கள் இல்லை, சற்சூத்திரர்கள் என்பார்கள்; தமிழ் மக்களில் வியாபாரிகளை வைசியர்கள் என்றழைத்து அமர்த்து பணம் பெறுவாராயினர். சற்சூத்திரர்களுள் மேலும் முரண்படுவோர் 'சூத்திரராவது, சற்சூத்திரராவது?' என்றால், இல்லை நீங்கள் வைசியர்கள் என்பார்கள். அவர்களல்லரோ வைசியர்கள் என்றால் இல்லை நீங்களும் வைசியர்கள் தான் நீங்கள் பூவைசியர்கள், அவர்கள் கோவைசியர்கள் என்பார்கள். தமிழ் மக்களிற் சிலர் பணம் பெற்ற மக்களாய் செல்வவான்களானபோது அவர்களை நீங்கள் க்ஷத்திரியர்கள் என்று சொல்லித் தம்மைப்போலப் பூணூலும் போடச்செய்வார்கள். விரிக்கிற்பெருகும் இவ்வாறெல்லாம் தமிழ் மக்களிடைச் செய்து வந்த புரளிகள் பல. அப்புரளிகளெல்லாம் தமது நலம் குறித்தனவாகவும் பிறர் தீது குறித்தனவாகவுமே இருக்கும். இவர்கள் பிறரிடமிருந்து பணம் பெறும்போதெல்லாம் அவர்கள் தங்கள் காலில் வீழ்ந்து வணங்கிக்கொடுக்கவேண்டுமென்றும், இல்லையானால் பயனில்லையென்றும் கூறி ஏமாற்றினார்கள். இவ்வாறாக இவர்கள் இந்தியா முழுவதிலுமே மக்களிடைச்சுயமரியாதை உணர்ச்சியை ஒழிந்து போமாறு செய்து அடிமை யுணர்ச்சியே மிகுந்து நிற்கும் படி செய்து விட்டார்கள். இந்திய நாடு இக்காலத்திலிருக்கும் மிகவும் கேவலமான அடிமை நிலைமைக்கு இவ்வாரிய மக்கள் நாட்டிலே சுய நலங்கருதிப் பரப்பிவந்த அறியாமையும், குருட்டு நம்பிக்கையுமே காரணமென்று கூறுவது மிகையாகாது. நிற்க,

மேலே கண்ட காரணங்களினாலே ஆரியராகிய வால்மீகியாலே கெட்டவனென்று சொல்லப்படுகிற இராவணன் கரனாதியர் அழிவை அகம்பனனால் அறிகிறான். ஆனால் அவன் சூர்ப்பனகையிடத்தில் முன் தெரியாதவனைப்போல இராமன் யார்? என வினாவுகிறானென்று வால்மீகி கூறுவது வியப்பே! இராவணன் மாரீசனை இரண்டாமுறை காணப்போனபோது வால்மீகி கருடனுடைய கதையைக் கூறுகிறார்.

கருடன் ஒரு பெரிய யானையையும், ஆமையையும் தூக்கித்தின்றதாம்! இது விண்ணுலகத்துக்குப்போய் அமுதத்தைத் தூக்கி வந்ததாம்! இக்கருடன் திருமாலின் சிறந்த ஊர்தியாம்! கருடனைப்பற்றி இக்கதையை அறிஞர்யாரே மதிப்பர்? ஆரியர் தம் வரலாறுகள் மிக அழகுடையன. உலகத்

திலுள்ள உயிர்ப்பிராணிகளையெல்லாம் கடவுள் மனிதனுக்காகவே படைத்தார் என்கின்றதன்றோ அவர்களுடைய மனு நீதி நூல்.

இதனை அயோத்தியா காண்டத்தில் எடுத்துக்காட்டியுள்ளோம். உலகத்தையெல்லாம் காக்கும் கடவுளாகிய திருமாலின் ஊர்திக்குப் பசியெடுத்து உயிர்களை வதைத்ததென்ப துவியப்பே! இக்கருடனின் ஏனைய செயல்களையும் ஆராய்வோம். கருடன் தனது பாரத்தைத் தாங்காது ஒடிந்த கிளை, யெங்கே கீழே தவம் செய்கிற முனிவர்மேல் விழுந்துவிடுமோ என மனமிரங்கியதாய் அக்கிளையைத் தூக்கி சென்றதாம். இவ்வளவு அருள் நிரம்பிய சிந்தையுடைய கருடன் அக்கிளையை வேடர்கள் வாழ்ந்த ஊரில் போட்டு அவ்வூரையும் அதில் வாழ்ந்த வேடர்களையும் அழித்ததாம். இவ்வளவு இழிந்த மதியுடைய கருடனை மக்கள் கும்பிடுகின்றனரே! கடவுளைத் தான் கும்பிடவேண்டும். கடவுளுடைய வாகனத்தையும் கும்பிடவேண்டுமோ? இவ்வாரியர்களுடைய கருட வாகனத்தின் பெருமையைப் பாருங்கள்! இக்கருடனை யானை, ஆமை முதலிய உயிர்களைக் கொல்லாமலிருக்கும்படி செய்ய வல்லமையற்ற கடவுள் உலகத்தையெல்லாம் காக்கும் கடவுளாம்! ஆரியர் தம் தெய்வங்களுக்கு அமைந்திருக்கும் குண நலங்கள் மிக அழகியனவே! இவர்களுடைய இவ்வறிவற்ற பேச்சை நம்பிக்கொண்டு தமிழ் மக்களிற் சிலரும் கருடனைப் பற்றித் தெய்வ வழிபாடு புரிவதோடு, இக்கருடனைப் போல உருவினதாகத் திரியும் வெண்கழுத்துப் பருந்தைக் கண்டு கைகூப்பித் தொழுவதும் அலகில் அடிப்பதும் பார்க்கும் அறிஞர்களுக்கு வியப்பைத் தருகிறது.

இக்கருடன் முனிவர்களை மட்டும் உயிர் என்றும், வேடர்களைக் கல் என்றும் எண்ணியது போலும். முனிவர்கள் கருடனுக்குச் செய்த நன்மை என்ன? வேடர்கள் செய்த தீமையென்ன? இவ்வேடர்கள் அது உண்ணும் சோற்றில் மண்ணையா வாரிப்போட்டார்கள்? என்ன அக்கிரமங்கள்? இவ்வக்கிரமங்களைக் கூறும் நூல் தெய்வ நூல். இவ்வக்கிரமங்களை இத்தெய்வ நூல்களிலிருந்து எடுத்துக் காட்டுகிறவர்கள் கெட்டவர்கள் மேன்மைத் தமிழ் மக்களே! இனியாவது உண்மையை உணர்ந்து நன்மையைக் கடைப்பிடியுங்கள். உங்கள் உயர்ந்த சிந்தையில் இன்னும் மயக்கமும், இவ்வற்பத்தனமான வழிப்பாடுகளும் பொருந்தியிருக்கவேண்டாம். இனியாவது விழித்

துக்கொண்டு உங்கள் முன்னோர்கள் கொண்ட செவ்விய வாழ்க்கையைக் கைப்பற்ற முந்துங்கள். ஒன்றுபடுங்கள். நீங்கள் என்று இத்தெய்வ வழிபாடுகளை ஒழித்து உங்கள் சிந்தையை நல்லாராய்ச்சிக்கு இடமாக்கிக் கொள்ளுகின்றீர்களோ அன்றே பெருமையை அடைவீர்கள். இனி கம்பருடைய புரளியைக் காணலாம்.

அகம்பனன் இராவணனைக் கண்டதும், கரனாதியர் அழிவைக்கூறியதும், இராவணன் அகம்பனன் சொற்படி சீதையைத் தூக்கி வரத்துணிந்து மாரீசனிடம் சென்றதும், மாரீசன் இராவணனைத்தடுத்து மறுபடியும் இலங்கைக்கு அனுப்பியதும் ஆகிய செய்திகளையெல்லாம் கம்பர் மறைத்து விட்டார். சூர்ப்பனகை தூண்டுதலால் மாரீசனிடம் அவன் இரண்டா முறை சென்றதையே அவன் முதன் முறைசென்றது போலக் காட்டுகிறார்.

மேலே கண்ட வரலாற்றைக் கம்பர் ஏன் மறைத்தார்? என்றால், அவருடைய எண்ணப்படி இராவணனைத் தீயவனாக, காமுகனாகக் காட்டவேண்டியே. அகம்பனன் வரலாற்றைக் கூறினால், இராவணன் சீதையைத் தூக்கி வந்ததற்கு உண்மையான காரணம் உலகினருக்குத் தெரிந்துவிடும். அதாவது இராவணன் எவ்வாறாவது இராமனை வெல்லத் துணிகிறான். அவனுக்கு வீரமே முதன்மையாகத் தோன்றுகிறது. கரனாதியர் இறந்தனர் என்று அகம்பனன் கூறவே, இராவணன் உடனே இராமனைக் கொல்லப்புறப்படுகிறான். ஆனால் அகம்பனன் அவனைத் தடுத்து இராமனை வெல்வதற்குச் சுலபமான வழி கூறுகிறான். அதாவது, சீதையைத் தந்திரமாகத் தூக்கி வந்துவிட்டால் அவள் மேல் பேராசை வைத்தவனாகிய இராமன் அவளை நினைந்து நினைந்து உருகி இறந்து விடுவான் என்கிறான். அகம்பனன் சொன்னதற்கு இராவணன் இணங்கி மாரீசனிடம் போகிறான். இதனால் சீதையைத்தூக்கி வருவதற்காக இராவணன் புறப்பட்டது அவளுடைய இன்பத்தைத் தான் நுகர்வதற்காக அன்று. தனது தம்பியாகிய கரனையும், அவன் சேனையையும் கொன்ற பகைவனாகிய இராமனைத் தந்திரமாகக் கொல்வதற்காகவே என்ற உண்மை புலனாகிறது. பண்டைக்கால மன்னவர் போர் முறையும் இதுவேயாம். மன்னர் போர் தொடங்கவேண்டினால் மாற்றாருடைய பசு நிரை கவர்தல், பெண்களைத் தூக்கிச் செல்லுதல் முதலிய செயல்களைப் புரிவர், இம்முறைப்

படியே இராவணன் தனது பகைவனாகிய இராமனுடைய மனைவியைத் தூக்கிவரப் புறப்பட்டான். இவ்வுண்மையை உலகினர் அறிந்தால் இராவணனை இகழுமாறெங்ஙனம்? உண்மை வீரனாகிய தமிழ் மன்னன் இராவணனை உலகம் புகழ்ந்துரைக்கும். தனது உடன் பிறந்தாளைத் தொட்டு மானபங்கம் செய்ததற்கு இராவணன் உண்மையில் தீயவனாக இருந்திருப்பானேல், சீதையைக் கண்டதுண்டமாக வெட்டியிருப்பான், அல்லது அவளுடைய மூக்கை அறுத்திருப்பான். இராவணனுடைய நோக்கம் அதுவன்று. இராமனைக் கண்டிக்க வேண்டுமென்று அவனுடைய நோக்கமே ஒழிய, சீதைக்குக் கேடு சூழவேண்டுமென்று அவனுடைய நோக்கமன்று. நல்லறிஞனாகிய இராவணன் மாரீசன் கூறிய நன்மதியைக் கேட்டுச் சீதையைத்தூக்கிவரும் எண்ணத்தைக் கைவிட்டு இலங்கைக்கு வந்து விடுகிறான். ஆனால் அவன் தன் தங்கையை நேரில் கண்டபோது கொண்ட சினத்தால் எப்படியாவது சீதையைத் தூக்கிவந்து விடவேண்டுமென்று மறுபடியும் மாரீசனை அடைகிறான். இவ்வுண்மைகளையெல்லாம் மறைத்து இராவணனைக் காமுகனாகக்காட்டிச் சீதையை மணந்து இன்பம் நுகரவே அவன் சென்றானெனக் கூறி, உலகினர் அவனை மிகவும் தீயவனென எண்ணும்படி செய்வதற்காகவே கம்பருடைய தீயமதி இவ்வரலாற்றை மறைக்கும்படி அவரைத்தூண்டிற்று.

நல்லவனாகிய இராவணன் சூர்ப்பனகையைக்கண்டவுடன் மறுபடியும் மாரீசனையடைந்துசீதையைத் தூக்கிவரத் துணிவானேன் என்னில், எவனாவது தனது கூடப்பிறந்த தங்கையை உறுப்பறுத்து மானக்கேடுசெய்த ஒருவனைத்தண்டிக்கத் துணியாதிருப்பானா? பேடியினுடைய மனங்கூட இத்தகைய தீச்செயல் கண்டால் வீரத்தால் துடிக்குமே, அப்படியிருக்க ராவணன் என் செய்வான் இராவணன் செய்யத்துணிந்தது இராமனை மடிப்பதற்கேயாதலின் அறிஞர் செய்யும் செயலேயாம். ஒரு பெண்ணைப் பெண்ணென்றும் பாராமல் உறுப்புகளைச் சிதைக்க ஏவினனே இராமன்! இத்தகைய கொடியாரை ஒறுத்தல் வேந்தன் கடனாகிறது. இதனால் இராமனை இரவணன் மடிக்க முயன்றது செய்தற்குரிய கடமையே,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்."

என்பது தமிழ் மறை.

இராவணன் இரண்டாமுறை மாரீசனைக் காணப் புறப் பட்டபோது வால்மீகி முனிவர் கூறும் கருடனுடைய வரலாற் றையும் கம்பர் கூறாது மறைத்தார். இதற்குக் காரணம் கருடனுடைய தீய செயல்களை அறிந்தார் அதனை இகழ் வாராதலின். வால்மீகி முனிவர் அவ்வரலாற்றில் ஆலமரத் தின் கீழ் மாஷர்கள், அஜர்கள், புகை குடிக்கும் முனிவர்கள் முதலியோர் இருந்தனரெனக் கூறுகிறார். இது அறிஞராகிய ஆராய்ச்சியாளராலே சிந்திக்கத்தக்கது. இக்காலத்திலும் பரதேசிகள் அவரவர்களுடைய செயல்களினாலே பெயர் பெறுகிறார்கள். சிலகாலத்திற்கு முன் கழுகு மலையிலே ஒரு பரதேசி இருந்தார். அவர் மிளகாய் வற்றலையே அதிக மாகத் தின்பது வழக்கம். அதனால் உலகினர் அவரை மிள காய் வற்றல் பரதேசி என்று அழைத்தனர். வேறோர் ஊரில் ஒருவர் மௌனமாக இருந்தார். அதனால் அவர் மௌனச் சாமியார் என்று அழைக்கப் பெற்றனர். நீண்ட சடை வளர் ந்திருந்த ஒருவர் சடைப்பரதேசி எனப்பெற்றார். இவ்வாறே ஆரிய முனிவரும் மாஷர்களென்றும், அஜர்களென்றும், புகை குடிக்கும் முனிவர்களென்றும் பெயர் பெற்றனர். மாஷம் என்பது உளுந்து; உளுந்து தின்பவர்கள் மாஷர் எனப்பெயர் பெற்றனர்போலும். அன்றியும் மாடு தின்போர் என்பவர் மாடரெனப்பெயர் பெற்று மாடர் என்பதை ஆரியர் மாஷ ரென்றனரோ? அஜர்கள் ஆடு தின்பவர்கள். அஜம் என்பது ஆட்டுக்கடா. புகை குடிக்கும் முனி வர் என்பவர் புகையிலைச் சுருட்டு, கஞ்சா இவைகளின் புகை களை அடிக்கடி குடிப்பதனால் இப்பெயர் பெற்றனர். இவ் வாறாக இவ்வாரிய முனிவர் பெற்ற பெயர்கள் மிக அழகியன வாகவே அமைந்துள்ளன. அன்றி அவர்களுடைய பெயர் களுக்குக் காரணமான செயல்களும் மிக அழகியனவே! இவ் விதி செயல் மாக்களை மிக மேலார் போல எண்ணிச் சிலர் பாராட்டுகின்றனரே! அந்தோ! பரிதாபம்! உண்மை தெரிந்து உலகம் நல்வழிப்படுமாக. இனி, கம்பர் இராவணனைத் தீய காமுனாகக் காட்டுவதற்கு எவ்வாறு கதையை மாற்றுகிறார் என்பதை ஆராய்வோம்.

கம்பருக்கு இராவணனைப்போலவே, சூர்ப்பனகையை யும் காமுகியாகக் காட்ட வேண்டும். அதனாலேயே அவர் முன்னர் இராமன் அவளை உருக்குலைத்தும் அவளை விட்டு

ஏகேனென அரக்கர்களைத் தாண்டி நின்றதாகக் கூறினார். அதற்கேற்ப அவள் இராவணன் முன் வந்து வீழ்ந்து புரண்டு இராமனையும் இலக்குவனையும் உருவிரித்துரைத்துப்பேரும் கூறினாள் என்கிறார் கம்பர். இராவணன் வினாவ கரன் மடிந்ததும் சீதையைத் தூக்கச்சென்றதும் கூறி சூர்ப்பனகை சீதையின் பேரழகை விரித்துரைத்தனளாம்; அதனால் இராவணன் சீதையின்மேல் காமுற்று கரன் மடிந்ததையும் தன் தங்கை உருக்குலைந்ததையும் மறந்து சீதையையே எண்ணி ஏங்கினான் என்று தாம் நினைத்ததை முடிக்கக் கூறுகிறார் கம்பர். இதன் மேல் கம்பர் கூறுவன வியப்பாக உள்ளன. மேலும் அவை அறிவுடைய மேன் மக்களால் பொருத்தமற்றன என்று விலக்கித் தள்ளும் தகைமையன. அன்றி அவை சிறுவர்களாலும் எள்ளி நகையாடும் தன்மையன. அவற்றைக் கூறுதும்.

இயற்கையிலேயே மிகவும் காமுகராகிய கம்பர் தமக்கு எங்கெங்கே சந்தர்ப்பம் நேருகிறதோ அங்கங்கெல்லாம் காமுகர் நிலையை விவரிக்கத் தொடங்கிவிடுகிறார். சந்தர்ப்பமில்லாத இவ்விடத்தில் கூட இராவணன் காமுற்றுக் கலங்கிய செய்திகளைப்பற்றி ஒன்றல்ல இரண்டல்ல, 85-கவிகள் பாடுகிறார். முன்னரும் சூர்ப்பனகை இராமனை நினைந்து இரவெல்லாம் கலங்கினளெனக் கூறியவிடத்து இவர் மன நிலை விளக்கினோம். மேலும், அயோத்தியா காண்டத்தில் இராமன் காடேகும்போது ஆண்மக்களே அவனைத் தொடர்ந்தனர் என வால்மீகி கூறினராக, பெண் மக்களும் தொடர்ந்தனரென கம்பர் கதை கட்டிக்கொண்டு ஊரையடுத்துள்ள சோலையில் இராமனைச் சூழ்ந்து அப்பபெண்கள் தூங்கினரெனக் கூறுமிடம் அயோத்தியாகாண்டம் ஐந்தாவதுதைலமாட்டுப்படலம். அப்போது இராமனைச் சூழ்ந்து பலரும் படுத்திருக்க ஏனையர் படுத்திருக்கும் நிறையைப்பற்றி ஓர் கவி கூடப் பாடாமல் பெண்கள் தூங்கியதைப்பற்றி எட்டுக் கவிகள் பாடுகிறார். அவ்வெட்டுக் கவிகளிலும் ஐந்திடங்களில் அப்பெண்களுடைய முலையைப் பேர் கூறி விவரிக்கிறார். அதில் ஓரிடத்தில் "மகவு முலை வருட இளமகளிர்கள் துயின்றார்" என்கிறார் குழந்தைகள் அவர்களுடைய கொங்கையைத் தடவின என்று கூறுவதில் இவ்விழிதகைமையரான கம்பருக்கு ஒரு மகிழ்ச்சி. அதனாலேயே இத்தீய சிந்தைக் கம்பர் வால்மீகி கூற்றுக்கு மாறாக இலக்குவன் சூர்ப்பனகையின் கொங்கையை அரிந்தானெனப் பொய் கூறியதோடு நில்லாமல் "இணைத்தடங்

கொள்கை பற்றும் பார்க்கும்'' என்று தமது கேவலமான புத்திக்கேற்பக் கூறினார்.

இத்தகைய இழிதகைமையரான கம்பர் சூர்ப்பனகை சீதையின் அழகைக் கூறியவுடன் இராவணன் சீதையின்மேல் காமுற்று தனது மாளிகையை அடைந்தான் என்று கூறுகிறார். அரண்மனையிலிருந்து காமநோய் முதிர்ந்து ஓர் சோலையை அடைந்து பருவ காலங்களை ஒன்றன்பின் ஒன்றாக வரவழைத்து விரகத்தால் வருந்தி, அவைகளை ஒருங்கே ஒழித்து, பின் தண்மதியையும், பின் இரவியையும், பின் இளம் பிறையையும், பின் இருளையும் வரவழைத்து அவைகளால் காமம் முதிர்ந்து சீதையை உருவெளித் தோற்றத்திலே கண்டு வருந்தினானாம். நேரில் பாராத ஒரு பெண்ணுக்கு உருவெளித்தோற்றமேது? இது வியப்பே! மேலும் ஒருவன் ஒரு பெண்ணை விரும்புவானேல் உடனே அவன் அவளை அடைய முயல்வானே ஒழியக் காமுற்று வருந்தியிரான். எல்லாம் வல்லவனாகிய இராவணன் சீதையை அடைய முயலாமல் இவ்வாறு வருந்தி யிருந்தனன் என்பது உலக இயற்கைக்கு மாறாக உள்ளது; அத்துடன் அறிஞர் ஒப்புமாறும் இல்லை. பின்னர் கம்பர் கூறுவது அறிஞர் வெறுக்கத் தகுந்தவாறுள்ளது.

இராவணன் தான் காணும் உருவெளித் தோற்றத்தை உண்மையென நம்பி தனது தங்கையை அழைத்து அவள் சீதையை நேரிற்கண்டவளாதலால் அவளிடம் அது தானா சீதை என்று வினவுகிறானெனவும், சூர்ப்பனகை அது இராமனென்று தன் மன நிலைப்படி கூறினளெனவும், இராவணன் நான் காணும் பெண்ணுருவை நீ ஆணுருவென்ற தென்னையென அவள் நீ காண்பது உருவெளித் தோற்றமென்று புகன்றனளெனவும், பின் இராவணன் நீ இராமனைக் கண்டதென்னையென அவள் தனது காமத்தை மறைத்து, என்று இராமன் எனக்குத் தீர்வரும் இன்னல் செய்தான் அந்நாள் முதல் நான் அவனை அச்சத்தால் காண்கிறேன் என்று சொல்லினளெனவும் கம்பர் கூறுகிறார். இக்கதையை ஆராயின் இவர் இராவணனையும் சூர்ப்பனகையையும் இழிவு படுத்தவே இவ்வாறு கதை கட்டியவராவர். எவனாவது தனது தங்கையை யழைத்து இவ்வாறு வினவுவானா? அவள் இவ்வாறு

மறு மொழி கூறுவாளா? கம்பர் இவ்வாறு பழகிய கயவர் போலும்! அன்றேல் ஓர் பெண்ணாகிய சூர்பனகையை இழிவு படுத்த இவ்வாறு எழுதுவாரா! இக்கதை உண்மையில் வால் மீகியால் கூறப்பட்டதேல் ஆரியராகிய அவர் வேண்டுமென்று இழிவுபடுத்திக் கூறினரென்பது ஆகும். தமிழ் மகனாகிய கம்பர் இவ்வாறு கூறியது அவருடைய சிறுமைக்குடிப்பழக் கத்தையே புலப்படுத்துவதாகும். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது; பன்றி பசித்தால் மலமே உண்ணும். ஆரிய மக்க ளாகிய பார்ப்பனரை மகிழ்வித்துப் பணம் பெற்று வாழும் அற்ப வாழ்வுக்காகவா கம்பர் இது செய்தல் வேண்டும்?

பின்னர் சூர்ப்பனகை இராவணனைச் சீதைபாற் சென்று தூக்கி வர ஏவினாளாக, அவன் ஓர் சந்திரகாந்தமண்டபத்தை தெய்வத் தச்சனால் இயற்றுவித்து அதிற் போயிருந்து தென் றலால் வாடிக் காற்றைப் பிணித்து அமைச்சரை யழைத்து ஆராய்ந்து சீதையைக் கவர மாரீசரிடம் சென்றனனெனப் பாடுகிறார் கம்பர். இவையனைத்தும் இவருடைய கட்டுக் கதையே என்பதை அறிஞர் உணராதிரார்.

———)o(———

நான்காம் அத்தியாயம்.

———)o(———

இராவணன், மாரீசனை நோக்கி, "இராமன் என்பவன் கரனையும் அவன் சேனைகளையும் கொன்றுவிட்டான். அவனுடைய தகப்பன் கோபமடைந்து அவனைக் காட்டிற்குத் துரத்தினான். மனைவியுடன் இந்தக் கொடிய காட்டில் வாழ்பவன் எவ்வளவு காலம் பிழைத்திருப்பான்? அவன் ஒரு காரணமுமின்றி பலக்கொழுப்பால் எனது தங்கையை உருக்குலைத்தான். ஆதலால் அவனுடைய மனைவியைத் தூக்கிவரப்போகிறேன. நீ பொன் மானாகப் போய் இராமனையும் இலக்குமணனையும் நெடுந்தூரம் சீதை ஏவலால் அழைத்துச் சென்றால், நான் அவளைத் தூக்கிவருவேன். இராமன் சீதையை விட்டுப்பிரிந்து மனம் குன்றி எண்ணம் நிறைவேறப்பெற்ற என்னால் கொல்லப்படுவான்" என்றனன்.

மாரீசன், இராவணனை நோக்கி "இராமனிடமிருந்து சீதையைத் தூக்கிவர உன்னால் முடியாது. இராமன் தனது தந்தையின் வாக்கை நிறைவேற்றவே காட்டுக்கு வந்தான். ஆதலின் உனது மந்திரிகளுடன் உன் வலியும் மாற்றான் வலியும் சிந்தித்துத் தக்கதைச் செய். பதினாயிர யானைகளின் பலமுடைய நான் முன் கோசிக முனிவனுடைய வேள்வியை அழிக்க, அவன் தசரதனிடம் சென்று அவனுடை மகனாகிய இராமனை இராமனாலேயே அரக்கரை அழிக்கமுடியுமென அழைத்துவந்து சேர, இராமன் என்னை அம்பால் அடித்துக் கடலில் தள்ளினான். பின் அவன் தண்டகாரணியத்தில் முனி வேடத்துடன் வந்தபோது கொல்லமாட்டானென எண்ணியே மான் வேடத்துடன் அவனைக் கொல்லப்போனேன். அவன் மூன்று அம்புகளை எய்தான். நான் ஓடி ஒளித்துத் தப்பினேன். என்னுடன் வந்த இருவர் மடிந்தனர். அது முதல் அவன் பெயரைக் கேட்டாலும் நடுங்கி முனி உருவுடன் வாழ்கிறேன். பழிவாங்க எண்ணினால் நீ ராமனுடன் போர் செய். அதற்காக அவன் மனைவியை எடுத்துவர எண்ணாதே. உனக்கோ பல உத்தம மனைவியர் இருக்கின்றனர். நான் வந்தால் சாவது நிச்சயம் அதனால் உன்னுடன் வர மாட்டேன்" என்றான்.

இராவணன் சினங்கொண்டு, "அற்பப்பெண்ணான கைகேசிக்குப் பயந்து நாடு துறந்து காடு வந்த இராமனுடன் போரிடல் எனக்குத் தக்கதன்று. அவனுடைய உயிரை வாங்குவதைவிட அவன் மனைவியை எடுத்து வருவதே அவனுக்குத் தக்க தண்டனை. நீ, நான் கூறியபடி மானாகப்போய் சீதையை மருட்டி இராமனை வெகுதூரம் அழைத்துச்சென்று இராமன் குரலால் "சீதே! இலக்குமா!" என்று கத்தினால் சீதை இலக்குவனையும் இராமனுக்குத் துணையாக அனுப்புவாள். அப்போது அவளை எடுத்து வருவேன். இது நீ செய்யவில்லையென்றால், உன்னைக் கொல்லுவேன் என்றான். மாரீசன் மறுபடியும் தடுத்துக்கூறினான். பின் ராவணனுக்காக அஞ்சி இசைந்தான். இராவணன் அவனைத் தன் தேரிலேற்றிப் போய் இராமன் குடிலை அடைந்து வந்த காரியத்தை விரைவில் முடி" என்றான்.

மாரீசன் மாய மானுருக்கொண்டு அலைந்தான். அவனைச் சீதை கண்டு, இராமனையும் அழைத்தாள். இலக்குவனையும் அழைத்தாள். இலக்குவன் "அது

மாரீசனாகிய அரக்கனே மான் அன்று'' என்றான். சீதை அதை எப்படியாவது தனக்குப் பிடித்துத்தர வேண்டினாள். இராமன், "தம்பீ! இது அழகானது. அரசர் வேட்டையாடுவது விளையாட்டுக்காகவும் புலாலுக்காகவுமே. இதனை அவசியம் பிடிக்கவேண்டும். இது மாரீசனாக இருந்தாலும் கொடியவனாகிய அவனைக் கொல்வது இன்றியமையாதது. ஆதலின் நான் பிடிக்கப்போகிறேன். நீ சீதையைப் பாதுகாத்திரு.'' என்று கூறி அதைத் துரத்தினான். மாரீசன் அவனை வெகுதூரம் ஏமாற்றி அழைத்துச் சென்றான். கடைசியில் இராமன்ஓர்அம்பை எய்தான். அது மாரீசன்மேல்பட, அவன் சீதே! இலக்குமனா'' என்று இராமன் குரலில் கூவிஇறந்து விழுந்தான். இராமன் அது கண்டு என்ன நிகழுமே என அஞ்சி வேறொரு மானை அடித்து அதன் மாமிசத்தை எடுத்துக்கொண்டு குடிசையை நோக்கி வேகமாக வந்தான். இவ் வரலாற்றை ஆராய்வோம்.

இராமனைத் தசரதன் கோபத்தால் காட்டுக்குத் துரத்தினான் என்று கூறுமிடத்து மொழிபெயர்ப்பாசிரியர் சீனிவாசய்யங்கார் பக்கம் 92ல் இது இராவணனுக்கு எப்படித் தெரியும என்று குறிக்கிறார். பின் மாரீசன் தந்தை சொல்லை நிறைவேற்றவே இராமன் காடு போந்தனன் என்னுமிடத்தில், பக்கம் 91ல அவர் "காட்டிலிருந்த மாரீசனுக்கு அயோத்தியில் நடந்த வரலாறும் இராமனுடைய உண்மை உருவமும் எப்படித் தெரிந்தது?'' என்று குறித்துள்ளார். பின் கோசிக முனிவன் தசரதனிடம் சென்று இராமனாலேயே அரக்கரை அழிக்க முடியும் எனக்கூறி அவனை அழைத்து வந்தான் என்று கூறுமிடத்தும், அவர் பக்கம் 94ல் "இது மாரீசனுக்கு எப்படித் தெரியும்?'' என்று குறிக்கின்றார். இவைகளை நோக்குமிடத்து, இவை இராமனுடைய ஏற்றம் கூற வால்மீகி குறித்தன வென்பது வெளிப்படையாம்.

மேலே கண்ட வரலாற்றானும் இராவணன் இராமனைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தாலேயே சீதையை எடுத்துவரத்துணிகிறானே யொழிய, அவள் மீது காமங் கொண்டன்று என்ற உண்மை தெளிவாகின்றது. இராவணன் மாரீசன் பேச்சால் எங்கும் சீதைமேல் காமங் கொண்ட செய்தி காணப்பெறவேயில்லை. இது நாம் முன்னைக் கட்டுரையில் விவரித்த உண்மைகளை வலியுறுத்துவதாகும்.

இராமன் அரசர் வேட்டையாடுவதுபுலாலுண்ணவேஎன்று கூறுகிறான் இது நாம் முன் இராமன் எக்காலத்திலும் புலாலை மகிழ்ந்துண்பவன் என்று நிலைநாட்டிய உண்மையை வலியுறுத்துவதாகும். இதற்கேற்ப, இராமன் மாரீசனைக் கொன்றவுடன் வேறொரு மானை அடித்துக் கொன்று அதன் புலாலைஎடுத்துக்கொண்டுவந்தான்என்றசெய்திகாணப்படுகின்றது; இவ்வாறு புலாலை மகிழ்ந்து உண்டு தூக்கித்திரிந்த இவனையும் கடவுளென்று சிலர் கும்பிடுகின்றனரே! இராமன் பெயரை மந்திரம்போல் எண்ணுகின்றனரே! இனி, கம்பர் போக்கைக் காணலாம்.

இராவணன் தான் வந்தது கூற மாரீசன் மறுத்துரைக்க, இராவணன் சினந்துரைக்க, மாரீசன் மறுபடி மறுத்துரைத்து இணங்குகிறானென வால்மீகி கூற, கம்பர் மாரீசன் மறுபடிமறுத்துரைக்க, இராவணன் மறுபடிசினந்துரைக்க, மாரீசன் இணங்குகிறான் என்றார். மேலும் கம்பர் தமது கருத்தை நிலைநிறுத்த எண்ணி மாரீசன் வாக்காக ஓரிடத்தில் ''வேதனைசெய் காமவிடம் மேலிட மெலிந்தாய்'' என்று கூறுகிறார். வேறிடங்களில் இராவணன் பேச்சிலும், மாரீசன் பேச்சிலும் இதனைக் காட்டாத கம்பர் ஓரிடத்தில் மட்டும் மெள்ளத் தமது தீய சிந்தைக்கேற்ப இவ்வாறு கூறுகிறார். வால்மீகி ஆரணிய காண்டம் 38ம் சருக்கத்தில் மாரீசன் வாக்காக ''நீ சீதையை எடுத்துவர முயல்வது பாவமாம். உனக்கோ பல உத்தம மனைவியர் உளர்'' என்று கூறுவதிலிருந்து வேண்டுமானால் இராவணன் சீதையைக் காமம்பற்றி எடுத்து வர முயன்றானென்று ஊகிக்கக் கொஞ்சம் இடமிருக்கிறது. அது வெளிப்படையாக இல்லை. ஆனால் பின் அக்கூற்றுக்கு இராவணன் கூறும் மறுமொழியிலிருந்து அவன் சீதையை எடுத்துவரத் துணிந்தது காமம் பற்றியன்று, இராவணனைத் தண்டிக்கவே என்பது வெளிப்படையாக இருக்கிறது. இதனால் இராவணன் அப்போது காம எண்ணமில்லாதிருந்தான் என்பது தெரிகிறது

முதலிலேயே இராவணன் மாரீனை மாயமானாக வேண்டுமென்று கூறியிருக்க, கடைசியில் சீதையைத் தூக்கிவர இசைந்தபின், மாரீசனுக்கு இராவணன் இது கூறுவதாகக்கம்பர் கூறுகிறார். மாரீசன் இசைந்தவுடன் அவனைத் தன்தேரிலேற்றிக்கொண்டு சென்று இராமன் குடிசலையடைந்து செல்லனகிறானெனவால்மீகிகூற, கம்பர், இவர்கள் வேறு வேறு நெறிபற்றிச் சென்றனர் என்று கூறுகிறார்.

"அன்னது செய்வேனென்னா மாரீசன் அமைந்து போனான், மின்னும்வேல் அரக்கர்கோனும் வேறொரு நெறி யிற் போனான்."

சீதை மானைக் கண்டவுடன் இராமனையும் இலக்குவ னையும் அழைத்ததாகவும், அவர்கள் அங்கே வந்ததாகவும், வால்மீகி கூற, கம்பர், சீதை மானைக் கண்டவுடன் இராம னிடம் வந்து கூறியதாகவும், இராமன் அதனைப் பார்க்க விரும்பியதாகவும், இலக்குவன்மாயமானெனத் தடுத்ததாகவும் சீதை அது போய்விடுமே எனப் புலம்பியதாகவும், உடனே இராமன் அதைப்பார்க்க வெளி வந்ததாகவும் புதுக்கதை புனைகிறார். பின்னரும் வால்மீகி மானைப் பிடிக்க இராமன் துணிய, அது மாரீசனே எனக்கூறி இலக்குவன் தடுக்க இரா மன் எவ்வாறாயினும்அதனைப்பற்றுவனெனச்சென்றானெனக் கூறுகிறார். கம்பரோ இராமன் அம்மானின் அழகைக் கூற இலக்குவன் பராமுகமாக இருக்க, சீதை அதைப்பற்றித் தர இராமனை வேண்ட, இராமன் உடன்பட, இலக்குவன் தடுக்க இராமன் அதனைப் பிடித்தலில் குற்றமில்லை என்ன, இலக்கு வன் ஆராயாது போதல் தகுதியன்று என்று கூற, இராமன் அதனை மறுக்க, இலக்குவன் தானே அதைப் பற்றுவதாகக் கூற, சீதை "நாயக! நீயே பற்றி நல்கலைபோலும்" என்று கண்ணீர் சிந்திப்புலந்துபோக, அதுகண்ட ராமன தம்பியைக் காத்திருக்கக் கூறி மானைத் தொடர்ந்தனன் என எழுது கிறார். கடைசியாகவே இலக்குமணன் மானைத் தொடரும் இராமனை நோக்கி 'அம்மான் மாரீசனே' எனக்கூறினதாகக் கம்பர் நவின்றார். இவ்வாறெல்லாம் புதுக்கதைகளைத் தம் மனம் போனவாறெல்லாம் புனைந்துரைக்கும் கம்பர் இவ் விடத்திலும் இராமன் ஓர் மானைக் கொன்று அதன் புலாலை சுமந்துகொண்டு விரைந்து சென்ற கதையை மறைத்தனர். இவ்வுண்மைகளையெல்லாம் உணர்ந்த உலகம் தம்மைக் கம் பர் ஏமாற்றி தீய வழிப்படுத்தி ராமனைத் தெய்வம்போல் காட்டியமையை நினைக்கும்போதெல்லாம் அவரை இகழாது என் செய்யும்.

ஐந்தாவது அத்தியாயம்.

இராமனைப் போல் கதறின மாரீசனுடைய ஒலியைக் கேட்டு, சீதை "இலக்குவா! உடனே சேன்று இராமனைக் காப்பாற்று" என்றாள். அவனோ இராமன் கட்டளையை நினைந்து அசையவில்லை. அதனால் சீதை சினங்கொண்டு, "சண்டாளா! என்னைக் கைப்பற்ற விரும்பி எங்களைப் பின்பற்றி இராமனுடைய சாவை எதிர்பார்த்திருக்கின்றாயோ?" என்று அலறினாள். இலக்குவன் "இராமனைக் கொல்ல முடியாது. இது அரக்கர் மாயை, கவலைப் படாதே" என்றனன். சீதை, "பாவி! என்மேல் ஆசைவைத்தே நீ இவ்வாறு பேசுகிறாய், வஞ்சகா! நீ என்னைக் காப்பாற்ற வந்தாயோ? அல்லது பரதன் உன்னை அனுப்பினானோ? உன் எண்ணம் பலிக்காது, இதோ உயிரைவிடுவேன்" என்றாள். இலக்குவன் "சீதை! நீ இப்படி பேசுவது ஆச்சரியமல்ல. பெண்கள் ஆண் மக்களுடைய மனதைக் கொடிய சொற்களால் பிளப்பதும், நண்பரைப் பகையாக்குவதும் இயல்பே! ஆனாலும் உன்னுடையப் பேச்சைக்கேட்டு என மனம் பதறுகிறது நல்லவனாகிய ஜனகனுக்கு நீ எங்கிருந்து பிறந்தாய்? என்னிடத்திலும் சந்தேகித்து இப்படிப்பட்ட கொடிய பாவத்தை என் தலைமேல் சுமத்தின உன்னைச்சுடவேண்டும். சீ! சீ! இப்படிப்பட்ட நீ இப்பொழுதே இறந்தால் உலகம் நலம்பெறும். நீயும் ஒரு பெண்ணா? இதோ இராமனிடம் போகிறேன்." என்று புறப்பட்டான். அவன, "உன்னைக் கடினமாகப்பேசினேன் என்று கவலைப்படாதே! இப்போது தோன்றும் தீய நிமித்தங்களால் இனிநாங்கள் உன்னைப்பார்ப்போமா என ஐயுறுகிறேன்" என்று தயங்கினான். அப்போது சீதை "இராமனைத்தவிர மற்றொருவனைத் தொடுவேனோ? இதோவுயிரைவிடுகிறேன்" என்று இரண்டு கைகளாலும் வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதாள். இலக்குவன் கூடுமானவரையில் அவளைத் தேற்றினான். சீதையோ "பாவி! வஞ்சகா! இப்படியாவது இன்னும் சற்று நேரம் இங்கிருக்கலாமென்று எண்ணுகிறாயோ?" என்று கதறி அவனிடம் பேசவில்லை. இலக்குவன் "இவளைத் தனியேவிட்டுப் போகிறோமே" என்று கவலை கொண்டு போனான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இதனால் இலக்குவனும் சீதையும் எந்நிலையில் பழகியிருந்தனர் என்ற உண்மை புலனாகிறது. சீதை இலக்குவனை நோக்கி இராமனிடம் போகச்சொன்னபோது அவன் இராமனுடைய கட்டளையை நினைத்து போகாலிருப்பதைப் பார்த்தவுடனே அவனிடம் ஐயுறுகிறாள். தன்னைக் கைப்பற்றவே அவன் துணிந்ததாக எண்ணுகிறாள். இதனால் அவள் இலக்குவனை எப்போதும் ஐயக்கண் கொண்டே நோக்கி வந்திருக்கவேண்டும். அவனுடைய நடையும் அவ்வாறிருந்திருக்கவேண்டும். சீதை இலக்குவனோடு நெடுநாள் இணை பிரியாமல் பழகுகிறாள். ஆதலின் அவனுடைய நடை ஐயத்துக்கு இடம் தராதிருந்து அவளுடைய முன்னிலையில் அவன் ஒழுக்கந் தவறாதவனாகவே நடந்து வந்திருந்தால் அவள் இச்சமயம் அவனிடம் திடீரென ஐயுறவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. ஆகையால் அவன் பல முறை அவள் ஐயப்படத் தகுந்த நிலையில் நடந்துவந்திருக்கிறானென்பது வெளிப்படை. உடனே இலக்குவன் இராமனுடைய பெருமைகளைச் சொல்லி அவளைத்தேற்ற முயல்கிறான். ஆனால் அது அவளுக்கு முன்னிலையிலும் அதிக ஐயத்தையே உண்டுபண்ணுகிறது. அவள் ஒரு வேளை பரதன் அவளைக் கைப்பற்றிக் கற்பழிக்க அவனை அனுப்பியிருக்கிறானோ என்று கூட ஐயுறுகிறாள். பரதன் தனக்குரிய நாட்டையே இராமனுக்குக் கொடுத்துப் போயிருந்துங்கூட அவள் அவனைப்பற்றி ஐயுறுகிறாள்.

சீதை இராமனுடைய ஆற்றலை அறியாதவளல்லள்; அவன் கரனையும், தூஷணனையும், அவனைச் சேர்ந்த படை வீரரையும் அழித்த திறலைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்து அவனைப் பலர் காணத் தழுவிக்கொண்டனள். அப்படியிருக்க, அவள் இராமன் பெரிய ஆபத்திலே இருக்கிறானென்று எண்ணி இலக்குவனைப் போகச் சொன்னதும் போகாது நின்ற இலக்குவனை அவள் வாயார வைததும், அவ்வசை மொழிகளைக் கேட்ட இலக்குவன் அவளுக்கு இராமனுடைய ஆற்றல் கூறித் தேற்ற முயன்றதும், அவள் இலக்குவனோடு பரதனையும் அப்போது ஐயுற்றதுமாகிய நிகழ்ச்சிகளை நினைக்க அவை வியப்பாகவே உள்ளன.

இலக்குவன் அப்போது சினமடைகிறான். அதனால் அவன் சீதையை நோக்கி, “நீ சனகனுக்கு மகளாக எப்படிப் பிறந்தாய்? உன்னைச் சுடவேண்டும். சீ! சீ! நீ இறந்தால் உலகம் நலம் பெறும்” என்று அவளை மிகக் கடிந்துரைப்ப

தை நோக்கினால் அவன் குற்ற மற்றவன் போலக் காணப்படுகிறான். ஆனால் அவன் அவ்வாறு வைது பின் அவளைத் தேற்ற முயன்று தாமதிக்கிறான் இதைக்கண்டபோது சீதைக்கு அவன் மேலுள்ள ஐயம் நிலைபெறுகிறது. அதனால் அவள் "இதோ உயிரை விடுகிறேன்" என்று கதறி இரண்டுகைகளாலும் வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதாள். இதைக்கண்டேனும் இலக்குவன் அவ்விடத்தை விட்டு அகன்றிருப்பானேயானால் அறிவுடையவனே. இதுவரை ஐயுறவு தராத நிலையிலிருந்த அவன் செயல் இதன் பின் யாவருக்கும் ஐயப்பாட்டைத் தோற்றுவிக்கின்றது. அவன் பின்னரும் அவள் முன் நின்றுகொண்டு அவளைத் தேற்ற முயல்கிறான். அதனால் அவள் பின்னும் அதிக ஐயமும் சினமும் கொண்டு "இப்படியாவது இன்னும் சற்றுநேரம் என்முன் நிற்கலாமென எண்ணுகிறாயோ? பாவி!!" என்று கதறுகிறாள். பின் அவள் அவனிடம் பேசவே இல்லை. அதன் பின்னரே இலக்குவன் அவளை விட்டுப் பிரிந்து போகிறான்.

பொதுவாக அறிவற்ற மக்கள் கூட இந்நிலையில் நடந்து கொள்ள மாட்டார்களே. தெய்வத்தின் அவதாரமானவள் சீதை! தெய்வத்தின் தோற்றமானவன் இலக்குவன்! இவர்களுடைய இழிந்த மன நிலையைப்பாருங்கள்! தெய்வத்துக்குப் பிறப்பேது? இறப்பேது? தெய்வத்தின் தோற்றமாகச் சீதை இருந்தால் அவள் இராமனுடைய ஆற்றலைக்கண்டும் காணாதவளைப் போல இழிந்த மக்களினும் கேடுகெட்டு தன்னுடன் நெடுநாள் பழகியவனாகிய இலக்குவனோடு தன்னைக்கற்பழிப்பானென ஐயுற்று இவ்வாறு பேசுவாளா? என்ன! இவ்வாரியர் மாமாயம்? இத்தகைய இழிந்த நிலையிலுள்ள சீதையைச் சில பண்டிதர்கள் "எங்கள் தாய் சீதை" என்று புலம்பி மக்களை ஏமாற்ற முயல்கின்றனரே! இவர்களுக்கு அவள் தாய் என்பதில் என்ன தடை? இவர்களுடைய தாயாகிய உலக மாதா சீதையம்மன் தனது கணவன் ஒலிபோன்ற பேச்சைக் கேட்டு மயங்கி இலக்குவன் துணை போகாமல் நின்றதால் தனது இரண்டு கைகளினாலும் வயிற்றிலடித்துக்கொண்டு கதறினாள். இவர்கள் தங்களுடைய தாயாரின் உண்மை நிலைமையை வால்மீகியைப் படித்து அறிஞர் தெரிந்து உலகத்தாருக்கு அறிவித்து உண்மையை வெளிப்படுத்துகின்றார்களே என்று தமது வயிற்றிலடித்துக்கொண்டு நீலிக்கண்ணீர் வடித்து மாமாயம் பண்ணி உலகத்தைப் பழைய மயக்கத்திலேயே மீண்டும் அழுத்திக் கம்பரைப் போல ஆரியர் பொருள் வலை

யில் சிக்கி அலைகின்றனர். இவர்கள் உண்மையுணர்ந்தவர்களேனும் பொய்ம்மையைப் பரப்புவதிலேயே துணிந்துழைக்கின்றனர். இவர்கள் மெய்ம்மையைப் பரப்ப முன்வருவது எந்நாளோ? இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

சீதை இலக்குவனை இராமனிடம் போகச்சொன்னால், அவன் இராமனாற்றல் கூறி அவளைத் தேற்றினாள். அதனால் அவள் அவன் மீது சினங்கொண்டு தீயினில் விழுவதாகக்கூறினாள். அப்பாடல்கள் வருமாறு:—

"என்றவன் கூற்றும் எடுத்த சீற்றத்தள்
கொன்றன இன்னலன் கொதிக்கும் உள்ளத்தள்
நின்றநின் நிலையிது நெறியிற்றன்றென
வன்றறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள்"
"ஒருபகல் பழகினார் உயிரை ஈவரால்
பெருவகன் உலைவுறு பெற்றி கேட்டு நீ
வெருவலை நின்றனை வேறென்யான் இனி
எரியிடை வீழ்ந்துயிர் இறப்பல் ஈண்டெனா"

இப்பாடல்களில் சீதை இலக்குவனை ஐயுற்றாள் என்பது கூடக் கூறப்படவில்லை. "வயிர்த்துக்கூறுவாள்" என்றே காணப்படுகிறது. அதாவது சினங்கொண்டு கூறுவாள். (வயிர்த்து சினங்கொண்டு) இதனால் அவள் அயிர்த்தலில்லாது வயிர்த்து இலக்குவனை நோக்கி, "நீபோகமல் நின்றனை ஆதலின் யான எரியிடை வீழ்ந்து இறப்பல" என்று கூறினள் எனவே கம்பர் கூறுகிறார். இலக்குவன் நின்ற நிலை கண்டு அவன் தன் மீது காமுற்றுத் தன்னைக் கைப்பற்றி இன்பம் நுகரவே நின்றான் என அயிர்த்து அவனைச் சீதை பலவாறு தூற்றினதையும், அவன அவளை நோக்கி நீ கொடியசண்டாளி உன்னை நெருப்பில் போட்டுச்சுடவேண்டும். நீசெத்தால்உலகம் நலம்பெறும் என்றுபலவாறு கடிந்து இகழ்ந்துரைத்ததையும், பின் சீதை வயிற்றிலடித்துக் கொண்டு இலக்குவனைப் பலவாறு தூற்றினதோடு பரதன் அவனை அனுப்பினானோ என்று கூறிப் பரதனையும் ஐயுற்றதையும், அதன் மேலும் இலக்குவன் பல முறைபேசித் தாமதித்து அவள் முன் நின்று அவளுடைய மனதைப் புண்படுத்தியதையும், அதனால் சீதை "இப்படிப் பேசிப் பேசியாவது என் முன் என்னைப் பார்த்துக் கொண்டு நிற்கலாமென நினைக்கிறாயா! பாவி!" என்று தூற்றி அழுது பின் அவனோடு பேச்

சொழிந்திருந்ததையும் கம்பர் முற்றிலும் மறைத்து முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைத்தவரானார். இவருடைய நோக்கமெல்லாம் சீதையையும் இலக்குவனையும் உலகினர் முன் குற்றமற்றவர்களாகக் காட்டவேண்டும் என்பதே. சீதையும் இலக்குவனும் காமம்பற்றி வாதிட்ட செய்திகளை உணர்ந்தால் உலகத்தார் அவர்களைப் பற்றி யாது நினைப்பார்? அவர்களை மிகவும் இழிவாக நினையாமல் வேறுயாது நினைப்பார்? ஆகலின் அவ்விழி செயல்களையெல்லாம் மறைத்துச் சீதை இலக்குவனை இராமனுக்குத் துணைபுரியப்போகச் சொன்னாள் அவன் இராமன் பெருமை கூறி மறுத்தான். அதனால் அவள் சினங்கொண்டு போகிறாயா? இல்லையா? இல்லையானால் இறப்பேன் எனக் கடிந்துரைத்தாள், உடனே அவன் போனான் என்ற அளவில் கதையைச் சுருக்கமாகக் கம்பர் கூறியிருக்கிறார்.

இலக்குவன் சீதையைக்காக்கச் சடாயு இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு இராமனிடம் சென்றனர் என்று கூறுகிறார் கம்பர். இது வால்மீகி கூறாததே. மேலே நான் எடுத்துக் காட்டிய இழிவான செயல்களையும் பிறவற்றையும் பிறர் உணருதல் கூடாதென்றே முன் ஆரிய மக்கள் பிறவகுப்பினரை வடமொழி கற்றல் கூடாதெனப் பல வாறு துன்புறுத்தி வந்தனர். இவற்றையெல்லாம் காட்டிலும் அவர்கள் கடுமையாகக் கண்டித்தது வேதப் பயிற்சியையே, ஏனெனில் அவர்களுடைய ஏமாற்றுதல்களுக்கெல்லாம் உயிர் நிலைபோலுள்ள வேதத்தில் உள்ள ஆபாசங்களையெல்லாம் பிறர் உணர்ந்து மயக்க மொழிந்து தெளிவடைவார்களன்றோ? தெளிவடைந்த பின்னர் ஆரியர்களுடைய மயக்குரைகளுக்குச் செவி கொடார்களன்றோ? இனியேனும் தமிழ் மக்கள் ஆரியர்களுடைய போலி உரைகளில் மயங்காதும் கம்பரைப்போன்ற கோடரிக் காம்புகளின் வயிற்றுப் பிழைப்பு வஞ்சக உரைகளில் மயங்காதும் உண்மை யுணர்ந்து தெளிந்து நல்வழிப்படவேண்டிக் கொள்கின்றோம்.

———)o(———

ஆறாவது அத்தியாயம்.

:o.

இலக்குவன் போனவுடனே இராவணேசுவரன் அழகான கல்லாடையுடுத்து துறவியைப்போல உருத்தாங்கி சீதையைக் கண்டான். எல்லா உலகங்களும் நடுங்கும்படியான புகழும், அழகும், நடத்தையுமுடைய இராவணனைக் கண்டு எல்லாம் நடுங்கின. அவள்மேல் அவன் காமங் கொண்டான். அவன் சீதையை நோக்கிப் "பெண்ணே! நீ யார்? கட்டழகியே! உன் கொங்கைகள் உயர்ந்து பருத்து நெருங்கி வட்டமிட்டுப் பனம்பழங்களைப் போல் மிக மனக்கவர்ச்சியுடன் தங்க மாலைகளால் அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றன. உன் துடைகள் யானைத் துதிக்கைகளைப்போல் இருக்கின்றன. பெண்ணே! உன்னைக் கண்டு மயங்காதவர்கள் யார்? இக்காட்டில் நீ தனியே வாழ்வானேன்? வேகமான வெள்ளம் கரைகளை அறுப்பதுபோல் உன் லீலைகளும், சேட்டைகளும் என் மனத்தை அறுக்கின்றனவே உன் முலைகள் ஒன்றோடொன்று நெருங்கியிருக்கின்றன. ஆசைப்படத் தகுந்தவளே! உன் வலாற்றைக் கூறு" என வினவினான்.

சீதை அவனை உபசரித்து உணவுண்ண வேண்டிய பின், "நான் ராமனுடைய மனைவி. எனக்கு மணமான பின் பன்னிரண்டாண்டுகள் அயோத்தியில் வாழ்ந்தேன் பதின்மூன்றாவது ஆண்டிலேயே தசரதர் கைகேயிக்குத் தந்த வாக்கால் கட்டுப்பட்டு எங்களைக் காட்டுக்கனுப்பினார் காட்டுக்குப் போகும்போது இராமருக்கு இருபத்தைந்துவயது, எனக்குப் பதினேழுவயது. தாங்கள் யாரென்பதை எனக்குக் கூறவேண்டும்" எனக்கேட்டாள். இராவணன் "நான் அரக்கர் தலைவன் இராமணேசுவரன் பேரழகியான உன்னைக்கண்ட பிறகு என்மனைவிகளிடத்தில் மனஞ் செல்லவில்லை. நீ எனக்கு மனைவியானால் நன்மை யடைவாய்" என்றான். சீதை "தீயனே! உன் கெடுமதியால் இவ்வாறு கூறினாய். நீ எனக்குத் தகுந்தவனா? இத்தீய எண்ணத்தை விட்டுவிடு என்றனள். அதைக் கேட்டு இராவணன் சினத்தால் புருவத்தை நெரித்து "பெண்ணே! நானும் குபேரனும் ஒரு தந்தைக்குப் பிறந்தவர்கள்; நான் குபேரனோடு சண்டையிட்டேன் குபேரன்தோற்றோடிக்கயிலைமலையில்வாழ்கிறான், நினைத்த

இடம் போகும் விமானத்தை நான் கைப்பற்றிக் கொண்டேன். நீ என்னுடன் மிக அழகிய இலங்கைக்குவந்தால் மனித வாழ்வை மறந்துவிடுவாய், கைகேசியாகிய பெண்ணுக்குப் பயந்து காட்டில் வாழுகிற பேடியாகிய இராமனால் உனக்கென்ன பலன்? அவன் என் சுண்டுவிரலுக்குக் காணுவனா? உன் நல்லகாலத்தால் உன்னை வலிய வந்தடைந்த என்னைக்கூடி நன்மையடைவாயாக" என்றனன், சீதை சினந்து, "குபேரனுடைய தம்பியாகிய நீ இப்படித் தீய எண்ணம் கொள்ளலாமா? தீயவனே! என்னை உன்னால் கைப்பற்ற முடியாது." என்று அவனை நிந்தித்தாள்.

இராவணனுக்குச் சினம் மூண்டெழுந்தது. அதனால் அவன் தன் இயற்கை உருவை எடுத்துக்கொண்டு, "பெண்ணே! காலனுக்கும் காலனான என்னை நீ அவமானம் செய்கிறாயா? பித்துப் பிடித்தவளே! உன் மயக்கத்தை விட்டு என்னை மணந்துகொள் புத்தியற்றவனாகிய இராமனிடம் எதைக்கண்டு நீ மயங்குகிறாய்?" என்று கூறி சீதையுடைய தலைமயிரை இடது கையிலும் அவளுடைய துடைகளை வலது கையிலும் சேர்த்துப்பிடித்து எடுத்துத்தேரி லேறினான். அவன அவளைத் துடைகளைப் பிடித்துத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான். அவள் திமிறினாள் அவன் அவளை நன்றாகப் பிடித்துக் கொண்டு தேரை நடத்தினான். சீதை நடுங்கி "இலக்குவா! இராவணன் கரதூஷணர்களுடைய வதத்திற்காகப் பழி வாங்க நினைத்து என்னை தூக்கிப் போகின்றானே! இப்போதாவது கைகேசி மகிழ்ச்சியடையாதிராள்; மரங்களே! நீங்கள் நான் இராவணனால் தூக்கிப்போகப்படுவதை இராமனிடம் தெரிவியுங்கள்" என்று புலம்பிக்கொண்டு போகும்போது சடாயுவைக் கண்டாள். அவள் அதைப் பார்த்து "நண்பரே உம்மால் வீரனாகிய இராவணனைத் தடுக்க முடியாது. அதனால் இச்செய்தியை இராமனிடம் தெரிவியும்" என்று வேண்டிக்கொண்டாள். இதைக்கேட்ட சடாயு இராவணன் சீதையைத் தூக்கிப்போவதைப்பார்த்தது. இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராவணன் சீதையைக்கண்ட பிற்பாடுதான் அவளிடம் மையல் கொண்டதாக வால்மீகி கூறுகிறார். உண்மை எப்படியிருந்தாலும் இது இயற்கைக்கு மாறுமாறில்லை. அவன் அவளை நோக்கி "பெண்ணே! உன் கொங்கைகள் பருத்துப் பனம் பழங்களைப்போலுள்ளன.

உன் துடைகள் அழகு மிக்கன; உன் முலைகள் நெருங்கியிருக்கின்றன உன்லீலைகள் என்மனத்தையறுக்கின்றன;' என்றுகூறுகிறான். அவனை உபசரித்து அவள் உணவுண்ணச் சொல்லுகிறாள். அவளுடைய கொங்கைகளை இரண்டிடங்களில் விவரித்துத் தன் காமத்தை வெளிப்படுத்திய இராவணனைச் சீதை உணவுண்ணவேண்டுகிறாள். என்ற இவ்வரலாறு பொய்யாக இருக்கவேண்டும்; இல்லையானால் இராவணனுடைய பேச்சுக்கு அவள் இணங்கியவளாக இருக்கவேண்டும். ஏனெனில் கொங்கைகளையும் துடையும் விவரித்துக் காமம் பகர்ந்த ஒருவனிடம் சினங்கொள்ளாது அவனை உணவருந்தும்படி வேண்டும் பெண்ணும் இருப்பாளோ?

சீதை "எனக்கு மணமானபின் பன்னிரண்டாண்டுகள் அயோத்தியில் வாழ்ந்தேன். காட்டுக்குப் போகும்போது இராமனுக்கு இருபத்தைந்து வயது. எனக்குப் பதினேழு வயது என்று கூறுகிறாள். இதனால் அவர்களுக்கு மணமாகும்போது இராமனுக்குப் பதின்மூன்று வயதும், சீதைக்கு ஐந்து வயதும் ஆதல்வேண்டும். முன் பாலகாண்டத்தில் அச்சமயம் இராமனுக்குப் பதினாறு வயதென்று தெரிகிறது. பதினாறுக்கும் பதின்மூன்றுக்கும் அதிக வேறுபாடு இல்லையாயினும், சீதையினுடைய வயது ஐந்தென்பது எவ்வாறு பொருந்தும். இது பெரும் பொய்யாகவே இருக்கிறது. பாலகாண்ட ஆராய்ச்சியில் சீதைக்கு அப்போது இருபத்தைந்து வயதாவது இருத்தல் வேண்டும் எனவும், ஏனென்றால் அவள் மணப்பருவம் அடைந்தபின் அதாவது ஏறத்தாழப் பதினைந்து வயதானபின் அவளுக்கு ஜனகன் சுயம்வரம் வைத்தனன் எனவும், பல ஆண்டுகள் வரை மணமக்கள் ஒருவரும் வந்திலராய் கடைசியில் இராமன் வந்தனனெவும், அதனால் அவளுக்கு இருபத்தைந்து வயதாவது ஆயிருத்தல்வேண்டுமெனவும் மிகத்தெளிவாகப் பல ஆதாரங்களுடன் நிலை நாட்டியுள்ளோம். பின்னரும் பல இடங்களில் வந்துள்ள வரலாற்றால் அவள் இராமனுக்கு மூத்தவளாகவே காணப்படுகிறாள் என அங்கங்கே எடுத்துக்காட்டியுள்ளோம்.

இவ்வாறிருக்க இங்கே தன் மண நாளில் தனக்கு வயது ஐந்து எனச் சீதை கூறுவது முழுப்பொய்யாவதோடு இயற்கைக்கும் மாறாகவே உள்ளது ஒன்றும் அறியாப்பருவமாகிய ஐந்து வயதில் ஜனகன் சீதையை மணமுடித்துத்தந்தனன் என்

பது உண்மைக்கு மாறாதலால், இவ்விடத்திய சீதையின் கூற்று இடை சொருகலென்றே நிலை நாட்டலாம்! இளமை மணத்தை நிலைநாட்ட வந்த பிற்காலத்திய ஆரிய மக்கள் இந்நூலிடையிலேயே சொருகி நூல்முழுதும் கற்றறியா மக்களைச் சீதையும் ஐந்து வயதில் மணம் பெற்றாள் என்று கூறி ஏமாற்றி, ஆதலின் நாமும் நம் மக்களை மிக இளம்பருவத்திலேயே வணமுடித்துத்தருதல் வேண்டுமென்று சொல்லித் தம் கூற்றை நிலை நாட்டுவான் தொடங்கினர்போலும்! என்னே இவ்விழிதகையர் வஞ்சம்! உண்மை காணுமிடத்து உலகம் இவர்களை இகழுமென இவர்கள் அறியாரோ? ஆனால் இவ் விளமை மணம் தமிழ் மக்களிடைப் பரவாதிருந்தது நல்ல காலமே! தமிழ் மக்கள் இன்னும் இளமை மணம் கொள்ளாது பருவ மணமே கொண்டு வருகின்றனர். நூலிடைத் தம் கோள் சொருகிப் பொய்ப்பட்ட இவ்விழி தகையர் கொலை பாதகத்துக்கும் அஞ்சார்!

பண்டைக் காலத்து முகமதியர்கள் இந்தியாவில் படையெடுத்து வந்தபோது அவர்கள் மணமாகாத இளம் பெண்களைத் தூக்கிச்சென்று மணந்து கொண்டனரென்றும், அதற்கு அஞ்சியே இந்தியர் மிகஇளம் பருவத்திலேயே பெண்களுக்கு மணமுடித்துத் தாலி கட்டி விட்டனர் என்றும், அதுவே பழக்கமாயது என்றும் இளமை மணத்துக்குக் காரணம் கூறுவர் சிலர், இது பொருந்தாக் காரணமே. எவ்வாறெனில், தீச்செயல் புரியத் துணிந்தாருக்கு மணமானபெண்ணென்றும், மணமாகாத பெண்ணென்றும் வேறுபாடேது? கட்டிய தாலியை அறுத்தெறிந்து மணந்து கொள்ளுவதற்கு எவ்வளவு நேரம் செல்லும்? மேலும், உண்மை அவ்வாறாயினும் இக் காலத்துக்கு அவ்விளமை மணம் என்?

சீதை இராவணனுடைய வேண்டுதலை முதன் முதல் மறுத்துரைத்த போதே இராவணன் சினங்கொண்டான் என்பது உலக இயற்கைக்கு மாறாக உள்ளது. ஒருவன் முதலிலேயே அவளிடம் தனது சினம் காட்டு மாறில்லை. காமத்துக்கு இடையூறும் செய்யும் பிறரிடம அவனது சினம் செல்லுமே ஒழிய அப்பெண்ணிடம் சினம் தோன்றாது. வேண்டுமாயின் அப்பெண் அவனுடைய வேண்டுதலுக்குக் கடைபோக இசையாளாயின் அவளிடம் வெறுப்புத் தோன்றும். இங்கே இராவணன் அவளை எவ்வாறாவது மணந்துகொள்ள நினைக்கிறான். அவன் அவளிடம் முதலிலேயே சினம் கொண்டானெ

ன்பது வேண்டுமென்று அவனைக்காமுகனாகக்காட்டஎண்ணி வால்மீகி எழுதினதாலே உலக இயற்கைக்கு மாறாக அவர் எழுதிவிட்டார் என்பதை விளக்குகின்றது. ஆதலின் இராவணன இவ்வாறு காமம் கொண்டு சீதையைத் தூக்கிச்சென்றான் என்ற வரலாறு பொய்யான வரலாறாக இருக்கவேண்டுமென்று அறிஞர் ஊகித்தறியத் தக்கதாக உள்ளது. ஆரியர் தம் புரட்டை என்னென்பது!

பின்னால் இராவணன் சீதையிடம் சினமூண்டெழுந்து அவளை அச்சுறுத்தத் தன் பேருருக்கொண்டனன். என்பது ஒருவேளை இருக்கலாம். அதிலும் அச்சினம் உண்மைச்சினம் ஆமாறு ஐயப்பாடே. இதனை அறிவாளிகள் சிந்தித்து உண்மையுணருமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

சீதையினுடையத் துடைகளைப் பிடித்துத் தூக்கி அவளைத்தனது மடியிலேவைத்து அமுக்கிக்கொண்டு இராவணன் போகும்போது அவள் இப்போதாவது கைகேசி மகிழ்ச்சி அவடயாகிறாள்'' என்று கூறுகிறாள். இது அவளுடைய கொடிய சிந்தையையே உணர்த்தும். மறுபடியும் மறுபடியும் இவர்கள் கைகேசியை நினைந்து இகழ்வானேன்? இனிக் கம்பர் புரளியை ஆராய்வாம்.

இராவணன் அழகான உடையுடுத்துச் சீதை முன் வந்து துறவியைப் போலத் தோன்றினார் என வால்மீகி கூற, கம்பர் அவன் மிகக் கிழவனாக கூனிய உடலுடன் கால் நடுங்கி வாய் குழறி சீதை முன் தோன்றினர் என்கிறார். சீதையை வசப்படுத்தவரும் இராவணன் அவள் முன் அழகிய மேனியுடன் தோன்றினானென வால்மீகி கூறுவதே பொருத்தமானது: எல்லா உலகங்களும் நடுங்கும்படியான புகழும் அழகும் நடத்தையுமுடைய இராவணனைக் கண்டு அக்காட்டிலிருந்த பொருள்களெல்லாம் நடுங்கின என்று வால்மீகி கூற, கம்பர் அவன் கிழவுருவோடு கால் நடுங்கி வந்து தோன்றினனென்பது வியப்பே!

இராவணன் சீதையை நோக்கி அவனுடைய கொங்கைகளை விவரித்த செய்திகளை யெல்லாம் மறைத்துவிட்டு கம்பர் அவனை ஒரு பேடி போலவும் ஏமாற்றுக் காரனாகவும் காட்டுகிறார். சீதை இராவணனை நோக்கி "நீர் யார்'' என வினவ அவன் தான்முனிவனாகிய அரக்கரூரில் வாழ்பவனென்று கூறித் தான் இராவணனெனக் கூறாமல் இராவணனுடைய பெருமைகளை விவரித்துரைத்ததாகவும், அதற்குச்

சீதை தீயாரைச் சேர்ந்தோரும் தீயவரே எனக்கூறி அரக்கரை விரைவில் இராமன் அழிப்பானெனக் கூறியதாகவும், அதற்கு இராவணன் மனிதனாகிய இராமனால் அரக்கரைக் கொல்லமுடியாதென்றதாகவும், சீதை விராதன், கரன் முதலியோர் கொல்லப்பட்டமை கூறி இராமனாற்றலை யுரைத்ததாகவும், அதற்கு இராவணன் இராவணனுக்கு அரிய தொன்றின்று எனச் சினந்து கூறியதாகவும், அதற்குச் சீதை இராவணனைச் சிறை வைத்த ஆயிரந்தலையனாகிய கார்த்தவீரியனென்ற மன்னனை சிறு பிள்ளையாகிய பரசுராமனன்றோ கொன்றனன் என்று கூறியதாகவும், அப்போது இராவணன் சினங்கொண்டு தனது இயற்கையுருவெடுக்க அது கண்டு சீதை முனிவனாக வந்த இவன் யாரென்று கலங்கியதாகவும் கம்பர் கூறுகிறார்.

இராவணனை சீதை யாரென்று வினவ முனிவ உருவுடனேயே அவன்தான் இராவணனென்று கூறி, அவளிடம் தூன் கொண்ட மையலை வெளியிட்டனெனக் கூறும் வால்மீகி கூற்று மாறாக, அவனைப் பொய்யனாகவும், வஞ்சகனாகவும் காட்ட விரும்பிய பொய்யராகிய கம்பர் அவன் மறைந்து பல கூறிக் கடைசியில் தன் உருக்காட்டினனென மொழிகின்றார். தன்னுருக் காட்டி அவளை வெருட்டித் தன் வயமாக்க எண்ணினன் இராவணனென வால்மீகி மொழிய, கம்பரோ அவன் ஒரு மனிதனால் அரக்கர் மடிவரென்ற பேச்சைச் சொல்லக் கேட்டுச் சினந்து அவன் தன் உருக்காட்டி இது பேசிய அவளைக் கொல்லாது பெண்ணாதலின் விடுத்ததாகப் புகன்று பின்னரே தன் காமம் மொழிகிறானென்றும், அதுகேட்டுச் சீதை அவனை நிந்தித்ததாகவும் பாடுகிறார். இராவணன் அது கேட்டு அவளுடைய காலில் வீழ்ந்து வணங்கித்தன்னைச் சேரும்படியாக இன்சொல் புகன்று வேண்டினனெனக் கம்பர் மொழிகின்றார். இது அவனை இழிவு படுத்தவே. தன்னைச்சேர மறுத்த சீதையை கூந்தலை ஒரு கையிலும், துடைகளை மற்றொரு கையிலும் பிடித்துத்தூக்கித்தனது மடியில் வைத்தனன் என்று வால்மீகி கூற, அதற்கு மாறாக அவளைத் தொடாமல் பூமியோடு பேர்த்துத் தேரில் வைத்தான் என்று கம்பர் சொல்வதோடு நில்லாமல், அவன் அவள் காலில் விழுந்தனனெனப் பொய்யுரைத்தது தகுதியாகுமா? இச்செய்தி மொழிந்தவர் வால்மீகியன்றோ? அதற்காக கம்பர்

சினம் காட்டவேண்டின் வால்மீகியினுடைய காலிலன்றோ போய் முட்டிக்கொள்ளவேண்டும். அதற்கு இராவணன் யாது செய்வான்? மேலும் கம்பர் தமது இழிதகைமைக்கேற்பச் சீதையை மண்ணோடு பேர்த்தெடுத்தனன் என்று முழுப்பூச ணிக்காயைச் சோற்றில் மறைக்கிறார். வால்மீகி துடையையும் கூந்தலையும் பிடித்துத் தூக்கி மடியில் வைத்துச் சென்றான் என்கிறார். இதை மறைக்க எண்ணிய கயவர் கம்பர் இரா வணனுக்கு முன்னர் ஓர் பெண் 'நீ பெண்களைத் தொட்டால் மண்டை வெடித்து மடிவாய் என சாபமிட்டதாக ஓர் புதுக் கதை கட்டிக்கொண்டு அதை நினைந்து அவன் அவளைத் தொடவில்லை என்று' பொய் புகல்கிறார்.

வால்மீகி இராமாயணத்திற்கு உரையெழுதிய ஒருவர் இராவணன் சீதையினுடைய நிழலையே பிடித்துத்தூக்கி மடி யில் வைத்துச் சென்றனன் என்று கூறுகிறார். அபிமானம் பற்றிய உரைகள் அறிவிலா உரைகளேயாம். நிழலுக்கு எவ் வாறு பேச்சுண்டு; நிழலை எவ்வாறு கைகளால் தூக்குவது என்று அவர் சிறிது கூட எண்ணிப்பாராமல் சிறு குழந்தை கள் கூட நகையாடத் தகுந்த அவ்வளவு அற்பமதியினராக அவர் ஆகின்றார். சிலர் மாயா சீதையையே அவன் தூக்கிப் போயினனென்பர். இதுவும் அறிவற்றார் கூற்றே. தொடு தற்காகா அந்தரங்க இடமாகிய துடைகளைக் கையாற்பற்றிப் போயினன் என்பதை மறைக்கக் கருதியகம்பர் மேலும், சடாயு தோன்றி அவளை இராவணன் தொடாமை கண்டு மகிழ்ந்து அவனோடு வாதாடத் தொடங்கிற்றென்று கூறுகிறார். சடாயு சீதையால் கண்டு அழைக்கப்பட்ட பின்னரே இராவணன் சீதையைத் தூக்கிப்போவதைக்கண்டதென வால்மீகி கூற, கம்பர் அதுதானே வலியக் கண்டு வந்த தென்கிறார். சீதை கைகேசியை இகழ்ந்து புலம்பிய செய்தியை மறைக்க எண்ணி அதை மறைத்ததோடு நில்லாமல் கம்பர் அவள் பரதனை நோக்கி 'மறு ஏதும் இல்லாத பரதா!' எனக் கூவினளெனவும் கூறி அவளை நல்லவளாகக் காட்டுகிறார்.

அழுது புலம்பிச் சென்ற சீதை தேரிலிருந்து கொண்டு இராவணனோடு "உன் தங்கையை மானபங்கம் செய்தவரைக் கொல்லாது என்னை வஞ்சித்துத் தூக்கிப் போகிறாய் நீ வீர னேல் நில்" என்று வாதாடியதாகவும் அவன் மனிதனோடு போரிடுவது தனக்குத் தகாதெனக் கூறியதோடு வஞ்சமே பலன் தருமென மறுமொழி பகர்ந்ததாகவும், சீதை அவனை

இகழ்ந்ததாகவும், கம்பர் பொய்யுரை ஆடுகிறார். வால்மீகியோ அவள் அவனுடைய மடியிலிருந்து திமிறியதாகவும் அதனால் அவன் அவளை அழுக்கிப்பிடித்துக்கொண்டு தேரைச் செலுத்தியதாகவும் கூறுகிறார்.

ஏழாவது அத்தியாயம்.

இக்கட்டுரைச் செய்திகளை வால்மீகி இராமாயணம் ஆரண்ய காண்டம் ஐம்பது முதல் ஐம்பத்தாறு முடிய உள்ள சருக்கங்களில் விரிவாகக் காண்க.

உடலிலுள்ள அலுப்பை நீக்கிக்கொள்வதற்காகக் கொஞ்சம் தூங்கிக்கொண்டிருந்த சடாயுவின் காதில் சீதை மொழி விழுந்தவுடனே விழித்துக்கொண்டு மரத்தடியிலிருந்தபடியே அது, "நான் ஜடாயு; பறவைக்கரசன். நீ செய்வது தகாத செயல்; அரசனாகிய நீ வேறொருவனுடைய மனைவியையை எடுத்து வரலாமா? ஆகையால் சீதையை விட்டுவிடு. இராமன் உனக்கு என்ன தீமை செய்தான்? உன்னை இராமன் கொல்லப் போகிறான். நான் பிறந்து அறுபதாயிரம் ஆண்டுகளாகின்றன. நீயோ வாலிபன்; நீ வீரனானால் இராமனுடன் சண்டை செய்து வென்று இவளை எடுத்துப்போ. இல்லையானால் என்னோடு சண்டை செய் ஓடாதே நில், என் உயிருள்ளவரையில் உன்னை விடமாட்டேன்" என்று சொல்லிற்று. இதைக்கேட்ட இராவணன் சினமிகுந்து இதன்மேல் பாய்ந்து போரிட்டான். ஜடாயு அவனுடைய வில்லை ஒடித்துத் தேரை நொறுக்கிற்று. அதனால் இராவணன் சீதையை மடியில் எடுத்துக்கொண்டு பூமியில் வந்து நின்றான். ஜடாயு சற்று சோர்ந்திருப்பதைக் கண்டு அவன் உடனே சீதையோடு விண்ணில் கிளம்பினான். ஜடாயு "திருட்டுத்தனமான செயல்களைச் செய்பவனே! கொஞ்சம் நின்றால் நீயும் கரனைப் போல் இறப்பாய்" என்று கூறி அவன் முதுகில் பாய்ந்து மூக்கால் குத்தி நகத்தால் கிழித்தது. அதனால் இராவணன் சினங்கொண்டு திரும்பி தனது இடது துடையில் சீதையை வைத்து அவளை ஒரு கையால் பிடித்துக்கொண்டு

மற்றொரு கையால் அதை அறைந்தான். ஜடாயு அவனுடைய பத்துக்கைகளைக் கடித்துத் துண்டித்தது. உடனே அக்கைகள். முளைத்துவிட்டன. இராவணன் சிறிது நேரம் சண்டை செய்து வாளால் அதனுடைய சிறகுகளையும் கால்களையும் வெட்டினான். அது குற்றுயிராகக் கீழேவிழுந்தது. சீதைஓடிப்போய் அதைக் கட்டிக்கொண்டு கதறினாள்.

சேலையும் அணிகளும் அலங்கோலமாகச் சிதற அதைக் கட்டிக்கொண்டு அழும் சீதையை நோக்கி இராவணன் ஓடிவந்து பிடித்திழுத்தான். அவள் செடிகளையும் மரங்களை பிடித்துக்கொண்டாள். அவன் "விடு, விடு" என்று அதட்டி அவளுடைய தலை மயிரைப் பிடித்திழுத்து அவளைக் கைப்பற்றி விண்ணிற் சென்றான். அவளுடைய ஆடைகள் காற்றால் அடிபட்டு அவன்மேல் புரண்டன. சீதை இராவணனுடைய மடியில் உட்கார்ந்திருக்கையில் முகம் வாடியிருந்தாள். சிவந்த நிறமுள்ள சீதை யானையின்மேல் கட்டப்பெற்றத் தங்கக் குழல் போல் இராவணன் மடியில் விளங்கினாள். சீதையின் நகைகள் கழன்று கீழே விழுந்தன. அவள் மார்பில் அணிந்திருந்த முத்து மாலையும் கீழே விழுந்தது. சீதை அவனை நோக்கி, "மாயையால் பொன்மானை அனுப்பி ஏமாற்றி என்னைத் தூக்கிவந்து சடாயுவையும் நீ கொன்றாய் என்னைத் திருடிப்போகிற உனக்கு வெட்கமில்லையா? என்னை விட்டுவிடு இல்லையானால் நீ என் கணவனால் கொல்லப்படுவாய். கரன் முதலிய அரக்கர்களை மாய்த்த இராமனுக்கு உன்னைக் கொல்லுவது ஒரு பொருட்டல்ல. பிறகு வருவதைப் பார்ப்போம் இப்போது கிடைக்கும் சுகமே பெரிதென்று நினைக்கிறாயோ? நீ சாவது திண்ணம்." என்று புலம்பினாள். அவள் அவன் மடியிற் கிடந்துகொண்டு பலமுறை திமிறியும் பலிக்கவில்லை. ஒரு மலைமேல் ஐந்து குரங்குகள் இருப்பதைக் கண்டு அவள் தனது மஞ்சள் பட்டு மேலாடையில் சில நகைகளை முடிந்து அவைகளுக்கு நடுவில் போட்டாள். இராவணன் அதைக் காணவில்லை. அக்குரங்குகள் அவளை இமை கொட்டாமல் பார்த்திருந்தன.

இராவணன் அவளைத் தன் மடியில் வைத்துக்கொண்டு சென்றான். அவளைத் தன் மடியில் வைத்தபடி அவன் பல தெருக்களையும் கடந்து தனது அரண்மனையை அடைந்தான். அவன் அங்கே சோகமும் மோகமும் கொண்டு கடைக்கண் கருத்திருக்கும் சீதையை வைத்தான். அவன் பல அரக்கிய

ரை நோக்கி "என் ஆணையின்றி ஆணாவது பெண்ணாவது இவளைப் பார்க்கப்படாது. இவளைப் பலவிதமாக இன்சொற் புகன்று மரியாதையாக நடத்தவேண்டியது" என்று கட்டளையிட்டு வெளியே வந்து எட்டு அரக்கரை அழைத்து வீரரே! நீங்கள் கரனிருந்த இடம் சென்று இராமனையும் அவன் தம்பியையும் கொல்லச் சமயம் பார்த்துக்கொண்டிருங்கள். அவர்களைக் கொன்றாலே எனக்குத் தூக்கம் வரும். அது வரை நீங்கள் அவர்கள் என்ன செய்கிறார்களென்பதை அடிக்கடி எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று ஆணை தந்து அனுப்பினான். அவ்வரக்க வீரர் அங்கே போயினர்.

இராவணன் பின் சீதைமேல் காம மிகுதியால் அவளைப் பார்க்க அரண்மனையினுள்ளே போனான். அவன் அவளை பல வந்தமாக அழைத்துப்போய் ஒப்பில்லாத தன் அரண்மனையையும் அதிலுள்ள ஆச்சரியங்களையும் காட்டினான். விசித்திரமாக அமைக்கப்பட்ட தங்கப் படிக்கட்டுகளில் இராவணன் சீதையுடன் ஏறினான். தன் மாளிகை முழுவதையும் காட்டி பின் அவளுக்குப் பலவித நீர் நிலைகள், தாமரைக் குளங்கள், பழமரங்கள் இவைகளெல்லாம் அவன் காட்டினான். பின் அவன் அவளை நோக்கி, "பெண்ணே! நீ என் பட்டமகிஷியாக அபிஷேகம் செய்யப்பட்டு என்னுடன் சகல போகங்களையும் அனுபவி. நீ செய்துள்ள பாவங்கள் உன்வனவாசத்துடன் தொலைந்தன. உன் புண்ணியத்தின் பலனாக என்னுடன் இந்த இலங்கையை அரசாள்க" என்று கூறினன். அவள் மனம் கலங்கிக் கண்ணீர் விட்டாள். அப்போது இராவணன் அவளை நோக்கி, "பெண்ணே நாணத்தை விட்டுவிடு நம்மிருவருக்கும் ஏற்பட்ட சேர்க்கை தெய்வகதியாய் ஏற்பட்டது. இது முனிவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதர்மமல்ல. என் வேண்டுதலுக்கு இணங்கு. உனனை நான் வணங்குகிறேன்." என்று கூறி சீதையை தனக்கு உரியவளாகவே எண்ணினான். சீதை இடையில் ஒரு துரும்பைப்போட்டு "நீ அழிந்துபோவாய் என்கணவன் உன்னைக்கொல்வான். நீ இந்த உடலைக்கட்டினாலும் கட்டிக்கொள், அன்றி வெட்டினாலும் வெட்டு" என்று கூறுகிறாள். இராவணன் "இன்னும் பன்னிரண்டு மாதங்களில் என் சொற்படிநடக்கவேண்டும் இல்லையானால் உனனை என் காலை உணவுக்கு வெட்டிவிடுவேன்" என்று கூறி பல அரக்கியரை உடனே அவளை அசோக வனத்துக்கு அழைத்துப்போய் நியாயத்தாலும் பயத்தாலும் அவளை வசப்படுத்தச் சொன்னான். அவர்கள் அவ்

வாறே சீதையோடு அசோக வனம் சேர்ந்த இவ்வரலாற்றை ஆராய்வோம்.

சடாயு சீதை புலம்பலைக் கேட்டு விழித்து இராவணன் அவளைத் தூக்கிப்போவதைக் கண்டும் ஓடி இராவணனுடன் சண்டையிட்டுத் தடுக்காமல் மரத்திலிருந்தபடியே அவனோடு பேசுகிறது. அதனுடைய சொற்களால் சினமடைந்த இராவணனே அதனுடன் சண்டைக்கு முந்துகிறான். அடி பொறுக்க மாட்டாமல் தான் அது மாறிச்சண்டையிட்டு இராவணனுடைய தேரையும் வில்லையும் அழித்தது. இதனால் சடாயுவினுடைய உண்மையுடைமை எந்த அளவில் இருக்கிறதென்பது விளங்குகிறது.

தேர் அழிந்தவுடன் இராவணன் சீதையைத்தனது மடியில் வைத்துக்கொண்டு கீழே குதிக்கிறான். பின்னரும் அவளை மடியில் எடுத்துக்கொண்டு விண்ணில் பாய்கிறான். பின்னரும் அவளைத்தனது மடியில் வைத்துக்கெண்டுதான் சடாயுவுடன் போரிடுகிறான். அவன் அவளைத்தனது இடது துடையில் வைத்துப் பிடித்துக்கொண்டு சண்டைசெய்கிறான். சடாயு கீழேவிழுந்தவுடன் சீதை ஓடிப்போய் அதைக்கட்டிக் கொண்டு சேலை அலங்கோலமாகக் கிடக்க அழுகிறாள். இதனால் அவள் இராவணனால் நன்றாக அணைத்துக் கொள்ளப்பெற்றே தூக்கிச் செல்லப் பெறுகிறாள் என்பதும், அவள் அதன் ஆடை அலங்கோலமாக இருப்பதையும் பாராமலே சடாயுவைக் கட்டிக்கொள்ளுகிறாள் என்பதும் தெரிகிறது. சடாயு ஓர் பறவை. அது கீழே விழுந்தவுடன் அவள் ஆணாகிய அதைக் கட்டிக்கொள்வானேன்? அழுவதற்குக் கட்டிக் கொண்டுதானா அழவேண்டும்? அது அறுபதினாயிரம் ஆண்டுகள் சென்ற கிழவனாக இருந்தாலும் ஆண்தானே? என்னே பாருங்கள்! சடாயு என்ற கழுகும் அறுபதினாயிரம் ஆண்டுகள் தசரதனைப் போல் உயிர் வாழ்ந்திருந்ததாம்! இதனைக்காட்டிலும் அறிஞர் எள்ளிநகையாடக்கூடிய புரட்டு வேறென்ன உள்ளது?

இராவணன் சீதையைப் பிடித்திழுக்க, அவள் மரங்களையும் செடிகளையும் பிடித்துக்கொண்டு முரண்டு செய்ய கடைசியாக அவன் அவளுடைய தலைமயிரைப் பிடித்திழுத்துக் கைப்பற்றிப் போகிறான். அவளுடைய ஆடைகள் அவன் மேலே புரண்டன. சீதை, "உன்னை இராமன் கொல்வது திண்ணம். ஆனால் பிறகு வருவதைப் பார்ப்போம். இப்

போது கிடைக்கும் சுகமே பெரிதென்று நினைக்கிறாயோ?'' என்று வினாவுகிறாள். இதனால் அவன் அவளை மார்புற அணைத்தே சென்றானென்பதும், தவறான செயலும் செய்திருப்பானென்பதும் ஊகிக்க இடமிருக்கிறது. இல்லையானால் சீதை அவனிடம் "இப்போது கிடைக்கும் சுகமே பெரிதென்று நினைக்கிறாயோ?'' என்று கேட்கவேண்டியதில்லை. அவள் தனது மேலாடையில் நகைகளை முடிந்து குரங்குகளினிடையே போட்டுவிட்டபடியால், மேலாடையின்றியே சென்றவளாவாள். சீதை இராவணனைச் சேர விருப்பமில்லாதவளாக இருந்தாலும் அவன் அவளை மார்பேர்டணைத்துத் தகாதன செய்தபோது அவளுக்குத் தன்னையறியாமல் காம உணர்ச்சி ஏற்பட்டது. அதனால் அவளுடைய நகைகள் கழன்று கீழே விழுந்தன. வால்மீகி முனிவர் "சோகமும் மோகமும் கொண்டுள்ள சீதையை இராவணன் தன் அரண்மனையில் வைத்தான்'' என்று மொழிகிறார். சோகம் துன்புறுத்தி அவளை அவன் எடுத்துப் போவதால் வந்தது போலும். அவளுக்கு மோகம் அவனுடைய தழுவுதலால் தன்னையறியாமல் விளைந்தது.

இராவணன் சீதையை தன்னுடன் அழைத்துப்போய் தன்னுடன் அரண்மனை வினோதங்களைக் காட்டி அவளுடன் மாடிகளிலும், சோலைகளிலும் உலாவியதாகத் தெரிய வருகிறது. சீதை பலவந்தமாக அழைத்துச் செல்லப்பெற்றாலும் அவனுடன் உலாவினாள் என்பதில் ஐயமில்லை.

சீதைக்குச் சம்மதமில்லாமலே அவன் அவளைச் சேர்ந்தனன். அதனாலேயே அவன், "பெண்ணே! நம்மிருவருக்கும் ஏற்பட்ட சேர்க்கை தெய்வ கதியால் ஏற்பட்டது. இது முனிவர்களால் ஒப்புக்கொள்ளப்பெற்றது; அதர்மம் அல்ல'' என்று கூறுகிறான். அவன் அவளைத் தனக்கு உரியவளாகவே எண்ணுகிறான் அவளும் நீ என்னைக் கட்டினாலும் கட்டிக்கொள். நான் உன்னை விரும்பேன்'' என்று மொழிந்தாள்

ஒருவன் ஒரு பெண்ணை அவளுடைய விருப்பமில்லாமல் தூக்கிச் சென்று அவளுடைய இன்பம் நுகர்ந்தாலும் அதனை ஆரியர்கள் ஒப்புக்கொண்டனர் போலும்! இதனாலேயே இராவணன் நம்மிருவருக்கும் ஏற்பட்ட சேர்க்கை முனிவர்களால் ஒப்புக்கொள்ளப் பெற்றது'' என்று மொழிகிறான். இதனை நிலை நாட்டுவதற்காக மொழிபெயர்ப்பாளர் திரு சீனிவாசய்யங்கார் இராவணன் இவ்வாறு சொல்லுமிடத்து ஆரண்ய

காண்ட மொழி பெயர்ப்பு பக்கம் 147-ல் "நாரதஸ்மிருதியைப் பார்க்க" என்று குறித்திருக்கிறார். நாரதஸ்மிருதியில் இதற்காதாரம் உள்ளது போலும்!

சீதைக்கு இராவணனிடத்தில் விருப்பமிருந்ததோ இல்லையோ அவன் அவளுடைய உடலின்பத்தை அடைந்தே வந்தான். அதனாலேயே இராமன், (உயுத்தகாண்ட சருக்கம் 117) "பெண்ணே! இராவணன் உன்னை மடியில் வைத்துக் கொண்டு போனான். பத்து மாதங்கள் வரையில் பிறனுடைய அதிகாரத்திற்கும், சக்திக்கும் கட்டுப்பட்டு வசித்த தன் மனைவியை எவனாவது சேர்த்துக்கொள்வானா? சகல விதத்திலும் அவனுடைய வசத்திலிருந்தாய். அவனுக்குச் சுவாதீனப்படாமலிருக்க முடியுமா?" என்று சீதையிடம் வினாவுகின்றனன். சீதை இராமனை நோக்கி, (உத்தரகாண்டம் சருக்கம் 118) என்னை "இராவணன் தொட்டெடுத்தான் என்கிறீர்கள். இது உண்மையே. நான் பெண், ஒண்டி, அனாதை அவனோ அரக்கன், அளவற்ற பலசாலி, கொடியன், ஆயுதபாணி, சகாயமுள்ளவன், நான் என்ன செய்யமுடியும்? என்னாலானவரையில் தடுத்தேன். எனக்கு எள்ளளவாவது அவனிடத்தில் ஆசையிருந்ததா? அது தெய்வம் செய்த அபராதம். என் தேசம் பிறருக்கு வசப்பட்டது. சுதந்தரமற்ற நான் என்ன செய்யமுடியும்? என் வசத்திலிருந்த இருதயம் அப்பொழுதும், இப்பொழுதும் தங்களிடத்திலேயே இருக்கிறது" என்று மொழிகிறாள். இதனால் சீதை ராவணனோடு உடற்சேர்க்கை உடையவளாகவே இருந்தாளென்பது நிலைபெறுகிறது. இதற்கு யாதொரு ஐயமுமில்லை. அவள் தனக்கு மனமில்லாமலே இராவணனால் அனுபவிக்கப் பெற்றதாகச் சொல்லுகிறாள். உண்மை எப்படியோ? இராவணன் பெருமை குன்றுவதற்காக இது ஆரியரால் கட்டப்பெற்ற வம்புரையாக இருக்கலாம். எப்படியெனில், தன்னைக் கைபிடித்த கணவன் தன்னைப் பார்த்து, "கள்ளக்கணவனுடன் கலந்தனையென ஐயுறுகிறேன்" என்று சொல்ல அவள், ஆம், நான் சோரம்போனது உண்மையே ஆனால் நான் மனப்பூர்வமாகச் சேரவில்லை" என்று அவள் தன் கணவனிடம் சொல்லுவாளா? இது இயற்கைக்குச் சற்று மாறாகத் தோற்றுகிறது. சீதை உண்மையில் இராவணனால் அனுபவிக்கப் பெற்றவளாயினும், அவள் பலரும் கேட்கத் தன்கணவனிடம் இவ்வாறு கூறியிருப்பாளா என்று அறிஞர்கள் சிந்திக்கவேண்டும். ஆனால் அவ்வாறு இராவணனுக்கும், சீதைக்கும் ஏற்

பட்ட சேர்க்கை ஆரியருக்கு உடன்பாடே. அதில் அநீதியில்லை என்று நாரதஸ்மிருதி முதலிய ஆரிய நூல்கள் சான்று பகர்கின்றன. அதனால் சீதை உண்மையைக் கூறினள் தனது கணவன் உடன்படுவான் என்பதோர் உறுதியால என்னின், அச்சேர்க்கை அக்காலத்திய மக்களால் ஒப்புக்கொள்ளப்பெறவில்லை என்பதற்குச்சீதையிடமிருந்த காம மிகுதியால் முதலில் அவளை ஏற்றுக்கொண்ட இராமன் பிறகு சில நாட்களில் குடிகளுடைய பழிப்புரை பொறுக்கமாட்டாமல் அவளைக் காட்டுக்கனுப்பி இரக்கமற்றவனாயினன் என்ற செய்தியே தகுந்த ஆதாரமாயிருக்கிறது. ஆதலின் இராவணன் மிகவும் கொடியவனென்று காட்டுவதற்காக ஆரிய வால்மீகி சீதையைக் கொண்டுபோய் அவன் அவளுடைய இணக்கமில்லாமலே அவளைக் கூடிவந்தனன், என்று கதை கட்டி எழுதி அதனால் சீதைக்கு வரும் இழுக்கையும் பாராமல் தன் கண்ணவிந்தாலும் பரவாயில்லை, அதனால் பகைவனுடைய கண்ணழிவதாயின் என்று கருதிய தீயவனைப் போல ஆயினர். இதனைப்பின்னால் இராவணனைப்பற்றித் தனித்து ஆராயுமிடத்து விவரமாக ஆராய்வாம். இனி கம்பருடைய புரளியைக் காண்பாம்.

கம்பர் இக்கட்டுரையில் நாம் குறித்துள்ள வரலாறு முழுவதையுமே மாற்றியும் பெரும்பான்மையை மறைத்தும் கூறுகிறார். ஜடாயு வலிய வந்து இராவணனுடன் போரிட்டதென்கிறார் அவர். இராவணன் தேர் நொறுங்கப் பெற்றுச் சீதையை மார்போடணைத்து மடியில் வைத்துத் தூக்கிப்போயினன் எனவும், அவன் சீதை கூந்தலைப் பிடித்திழுத்து விண்ணிற் சென்றனனெனவும் வால்மீகி கூறும் செய்திகளை மறைத்துத் தாம் சீதையை மண்ணோடு தூக்கினனென்று கட்டிய கதைக் கேற்ப அவன் மண்ணோடு பெயர்த்து வைத்திருந்த சீதையை தேரோடு தூக்கிச் சென்றனன் என்று கம்பர் கூறுகிறார். சிறகறுந்து விழுந்த சடாயுவின்மேல் சீதை விழுந்தழுததையும் அவர் மறைத்தார்.

ஜடாயு சீதையைத் தேற்றியதென்று கூறுமிடத்து கம்பர், ''முத்துக்கனபோல முகத்தாலி முலைக்கண்வீழத் தத்துற்று அயரேல்'' என்று கூறியதாகப் பாடுகிறார். இதன் பொருள் ''முத்துக்கள் சிந்துவதைப்போல் கண்ணீர் முகத்திலிருந்து உன் முலையிலே விழ நீ வருந்தாதே'' என்பது. இவ்வாறு சீதையை நோக்கி ஜடாயு கூறியிருப்பானேல் அவனுடைய

உள்ள நிலையும், ஒழுக்க நிலையும் எவ்வளவு இழிந்ததாக இருக்கவேண்டும்? ஜடாயு அவ்வாறு கூறவில்லை. ஆனால் கம்பர்தான் இவ்வாறு பாடுகிறார், என்றால் கம்பருடைய உள்ள நிலையும், ஒழுக்க நிலையும் மிக வலிதே! கம்பர் இவ்வாறு கொங்கைகளைப் பற்றி விவரிப்பதில் மிக விருப்பர் என்பது முன் கட்டுரைகளில் விவரமாகக் கூறினோம். நிற்க,

ஜடாயு இராவணன் ஓடுவதைக் கண்டு சிந்தை வருந்தி கைகேசியைக்கூட நொந்துகொண்ட தென்பது புதுக்கதை புனைகிறார் கம்பர். இராவணன் அவளைத் தேருடன் தூக்கிச் சென்றனன். அப்போது சீதை,.

"விண்ணிடை வெய்யவன் ஏகும் வேகத்தால்
கண்ணோடு மனமவை சுழன்ற கற்பினாள்
உண்ணிறை உணர்வழிந் தொன்றும் ஓர்ந்திலள்
மண்ணிடைத் தன்னையும் மறந்து சாம்பினாள்"

அதாவது கண்கள் சுழன்று மெய் மறந்து மயங்கிக் கிடந்தாள் என்று கூறுகிறார். சீதை தன் மேலாடையில் நகைகளை முடிந்து குரங்குகளிடை எறிந்ததையும், அவனை அவன் மடிமிசைத் தழுவித் தூக்கிச்சென்று அசோக வனத்திலே வைத்தனன் என்று மட்டும் கூறுகிறார். அசோக வனத்தில் வைக்குமுன் அவளைத்தனது அரண்மனையில் இராவணன் வைத்ததையும், அரக்கர் சிலரை இராமனுடைய செயல்களை ஆராய்ந்து அடிக்கடி யுணர்த்த அவன் ஏவியதையும், பின் அவன் அவளை அழைத்துப் போய்த் தனது அரண்மனை, மாடி சோலை முதலிய இடங்களில் உலவியதையும், பின்னர் அவளை வேண்டி அவள் மறுக்க அவளை அசோக வனத்திடை வைத்ததையும் கம்பர் மறைத்து விட்டார். ஈதெல்லாம் சீதையை இராவணன் தொடவே இல்லை, ஏனெனில் அவள் தெய்வக் கற்பினாள் என்று அறியா உலகுக்குக் காட்டி மயக்குவதற்காகவே, உடல் நலம் முழுதும் கவர்ந்த ஒருவனை அவன் தொடுதலும் செய்யவில்லை யென்று அவர் கூறியது உண்மை பற்றியோ? உண்மை பற்றியாயின் அவனைப் பலவாறு அவர் இகழ்ந்து தீயவனெனக் காட்டுவதேன்? ஆதலின் கம்பர் தீய சிந்தையினராகவே வால்மீகி கூறிய கதையை மறைத்தவராவர்.

——)o(——

எட்டாவது அத்தியாயம்.

இராமன், மாரீசனாகிய மானைக் கொன்றுவிட்டு வேறொரு மானைக்கொன்று அதன் புலாலை எடுத்துக் கொண்டு வரும்போது ஒரு நரி ஊளையிட்டது. அதைக் கேட்ட இராமன் திடுக்கிட்டுப் பயந்தான். "கரன் முதலியோரை நான் கொன்றதுமுதல் அரக்கர் எனக்குக்கேடு சூழச்சமயம் பார்த்திருக்கின்றனர். சீதைக்கு என்ன நேர்ந்ததோ?" என்று அவன் எண்ணினான். அவன் தன்முன்கவலையுடன்வந்த இலக்வனைக்கண்டு கவலை கொண்டு சினம் பொங்க, அடே! சீதையை தனியே விட்டு வந்தனையே! அவளுக்கு என்ன நேர்ந்ததோ? நான் மிகவும் சிரமப்பட்டு மாரீசனைக்கொன்றேன். அவன் உங்களை ஏமாற்றிவிட்டான். சீதையில்லாமல் நான் உயிர் வாழமாட்டேன். சீதை இறந்து, அவளைப் பிரிந்த துக்கத்தால் நானும் இறந்து நீ தனியே அயோத்திக்குப்போகும்போதாவது கைகேசி மகிழ்ச்சியடைவாளா? என் தாய் துன்பமடைவாளே, என் செய்வேன்? ஐயோ! கரனைச் சேர்ந்தவர்கள் இதற்குள் சீதையைக்கொன்று தின்றிருப்பார்கள்!" என்று புலம்பிக்கொண்டு தம்பியுடன் குடிசையை அடைந்தான். அவன் குடிசையுட் சென்று பார்த்ததும் தன் மனைவியைக் காணவில்லை. அவன் வெளியே வந்து அடக்கமுடியாத துக்கத்தால் "நீ இருக்கின்றாயென்றல்லவோ வந்தேன். நீ ஏன் அவளைத்தனியே விட்டு வந்தாய்?" என்றனன். இலக்குவன், நான் "எவ்வளவோ தேறுதல் கூறியும் அவள் என்னை நோக்கி 'நீ என்னைக் கைப்பற்ற நினைத்து நீயும் பரதனும் ஒன்றுகூடி இராமனைக்கொல்ல உடன்வந்தாய்போலும்' என்று பலவாறு இகழ்ந்தாள். அதனாலே பொருக்கமுடியாமல் வந்தேன்" என்றனன். இராமன் சீதையைப் பிரிந்ததால் புத்தி கலங்கி "எப்படியிருந்தாலும் நீ அவளை விட்டுவந்தது பிசகு. அறிவுள்ளவன் ஒரு பெண் சொன்ன சொல்லைப் பொருட் படுத்துவானா? என் கட்டளையை நீ மீறினாய். நீ வேறு எங்கேயாவது மறைந்திருந்து அவளைக் காப்பாற்றி இருக்கவேண்டும். மாரீசன் நான் விளையாட்டாக எய்த அம்பால் மடிந்தனன்" என்றனன்

குடிசையில் மான் தோல் முதலிய பொருள்கள் சிதறிக் கிடந்தன. இராமன், "ஐயோ! என் மனைவியை யாரோ

கொன்றுவிட்டான்" என்று அங்கிருந்த மரங்களையும், மிருகங்களையும் உயிருள்ளவைகளைப்போல வினாவிப் புலம்பினான். இராமன் அடிக்கடி கதறிக்கொண்டு காடுகளில் நெடுக ஓடினான்; காணாது மறுபடியும் தேடினான். மறுபடியும் அவன், "நான் என்ன செய்யப் போகிறேன்" என்று கதறினான். இலக்குவன் அவன் படும்பாடு கண்டு பொறுக்காமல், "அண்ணா! கவலைப்படவேண்டாம். சீதை காடுகளில் அலைவதில் விருப்பமுடையவள். அவள் எங்காவது வேடிக்கையாக அலைந்து கொண்டிருப்பாள். அவள் குளத்தில் ஆற்றில் நீராடியிருப்பாள். இல்லையானால் நாம் அவளைத் தேடிப் பிடிக்கட்டுமென்று எங்காவது ஒளிந்து கொண்டிருப்பாள். ஆதலின் இன்னும் தேடுவோம்" என்றனன். அதனால் இராமன் மனம் தேறி தம்பியுடன் தேடத் தொடங்கினான். தம்பி கூறியபடியே அவள் போகக்கூடிய இடங்களிலெல்லாம் அவன் தேடினான். அவன் அவளை அங்கெல்லாம் காணாமல் கதறினான். இலக்குவன் "சீதையைத் தூக்கிச் சென்றவனைக் கண்டு கொன்று மீட்பீர் எனத் தேற்றினான். இதனால் அவன் தெளியாமல் மூர்ச்சையடைந்து பெரு மூச்சு விட்டு நெடுநேரம் கழித்துத் தெளிந்து பழையபடியும் அலறிக் கண்ணீர் வடித்தான். தம்பி பலவாறு தேற்றியும் அவன் புலம்பினான்.

இராமன், "ஐயோ! சீதே! நீ இக்கதியடைந்தது கைகேசியின் எண்ணப்படி ஆயிற்று. நான் உயிரைவிட்டு விடுகிறேன். தம்பி! நீ அயோத்திக்குப் போய் பரதனை அரசாள நான் சொன்னதாகச் சொல்" என்று புலம்பி அழுது அலைந்தனன். இராமன் மறுபடியும் பெருமூச்சு விட்டு அழுது, "நான் முற்பிறப்பில் செய்த பாவத்தின் பயனாலேயே இவ்வாறு வருந்துகின்றேன். இக்காட்டில் நானும் சீதையும் அளவற்ற சுகத்தை அனுபவித்திருந்தோமே. நான் சீதை இடத்தில் வைத்திருந்த அன்பைப் போல உலகத்தில் ஒருவனும் ஒருபெண்ணிடத்தில் வைத்திருக்கமாட்டானென்றும், ரதிகேளிகளில் நான் மகா நிபுணனென்றும் கர்வமடைந்திருந்தேன். முன்பு அயோத்தியில் இருக்கும்போதுஎன் பெற்றோர்களுடன் வாழ்ந்தபடியால் கூச்சமில்லாமல் மனம் போனபடி என்னுடன் அனுபவிக்க முடியவில்லை.காட்டிற்குவந்தபின்எவருடைய நிர்ப்பந்தமுமில்லை. எங்கள் மனம் போனபடி யெல்லாம் அனுபவித்தோம். எந்த அரக்கர்கள் அவள் கழுத்தைக் கடித்துக் குடித்தார்களோ? கண்ணுக்கு மிகவும் இனிப்பை விளைப்ப

தும், மிக்கமேலானதுமாகிய செஞ்சந்தனத்திற்கே எப்பொழுதும் தகுந்தவைகளும் உருண்டு அழகாயிருப்பவைகளுமாகிய என் பிராண நாயகியின் முலைகள் இப்பொழுது அரக்கனால் உண்ண அறுக்கையில் இரத்தத்தால் நனைந்திருக்கும் அவளுடைய அழகை நினைக்க கவலை அதிகமாகிறதே. அடே! சூரியனே! அடே காற்றே! என்மனைவியை எடுத்துப்போனது யார்?'' என்று உணர்ச்சியற்றுப் புலம்பினான். இலக்குவன் தேற்றியும் அவன் புலம்பலை விடவில்லை.

இலக்குவன் இராமன் ஆணையால் ஆற்றின் கரையில் போய்த்தேடினான். இராமனும் தேடினான் காணவில்லை. சில மான்கள் தெற்கே ஓடி வழி காட்டின. அதனால் இலக்குவன் "தெற்கேதான் சீதையைத் தூக்கிப்போயிருக்க வேண்டுமென்றான்'' இராமனும் அதை ஒப்புக்கொண்டு தெற்கே நோக்கிப் போகையில் பூக்கள் உதிர்ந்து கிடந்தன; அதனாலும் இராமன் தெற்குத் திசையில் தான் சென்றிருக்கவேண்டுமென்று துணிந்து புலம்பிகொண்டு அங்கிருந்து மலையை நோக்கி, "நீ சீதையை எனக்குக் காட்டாயாயாயின் உன்னைப் பொடியாக்குவேன்'' என்றான். பின் அவன் "தம்பி! இந்த கோதாவரி ஆற்
உண்மையைக் கூறாவிட்டால் வற்றவைப்பேன்'' என்றனன்.
றையும் சற்று தூரத்தில் இராவணனுடைய அடிச் சுவடுகளையும், அவனால் பற்றப்பட்டபோது ஓடித் தத்தளித்த சீதையினுடைய அடிச்சுவடுகளையும் முறிந்த வில்லையும் அழிந்த தேரையும் இராமன் கண்டான்; இரத்தத் துளிகளும் காணப்பட்டன. அதனால் இராமன் அஞ்சி, "ஐயோ! சீதையை அரக்கர் கடித்துத்தின்று விட்டனர் போலும்! அவளுக்காக இரண்டு அரக்கர் இங்கே போரிட்டிருக்கின்றனர். இந்த வில், குடை, தேர்இவை யாருடையன? மாயங்கள் வல்ல கொடிய அரக்கர்களை யான் எனக்குப் பகையாக்கிக்கொண்டேன். சீதையை அவர்கள் தின்றே யிருப்பார்கள். அவளைத் தூக்கிப்போகும்போது ஒருவரும் தடுக்க வில்லையே? தேவர்கள் மனிதர்கள் யாவரையும் இதோகொன்றுஅழித்து விடுகிறேன். தம்பி! இப்போது தேவர்கள் சீதையை முகமலர்ச்சியுடன் கொண்டு வராவிடில் இந்த உலகம் முழுவதையும் அழித்து விடுவேன்,'' என்று கண்கள் சிவக்கக் கத்தினான். இலக்குவன், "அண்ணா தாங்கள் இவ்வாறு சினப்பது கூடாது. ஒருவனுக்காக உலகைத் துன்புறுத்த நினைக்கலாமா? நாம் நல்வழிபற்றித் தேடுவோம். காணவில்லை யென்றால் பின்னர் உமது மனம்போல் செய்யும்'' என்றனன்.

இராமன் அழுவதையும் மகாமோகத்தோடிருப்பதையும் உணர்ச்சியற்றவனைப்போல இருப்பதையும் இலக்குவன் கண்டு, "அண்ணா! இன்ப துன்பங்கள் யாருக்கும் இயல்பே. ஆதலின் தாங்கள் வருந்துவது அழகன்று. சீதையை எவன் தூக்கிப்போனாலென்ன? அல்லது அவள் செத்தால் என்ன? வீரராகிய தாம் கவலைப்படாதிரும். திருடனைக் கண்டு கண்டிக்கவேண்டும்" என்றனன். இராமன் இதை ஒப்புக்கொண்டான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராமன் ஒரு நரி ஊளையிட்டதைக் கேட்டு நடுக்கமடைந்தானாம்! தெய்வத்தின் தோற்றமாகிய இவ்விராமனின் வீரம் பாராட்டத்தக்கதே! "பெண் மகளுக்கும் இவ்வாண் மகனுக்கும் வேறுபாடு யாது? இவனும் ஒரு வீரனோ? எதற்கும் அஞ்சா நெஞ்சமுடையவனன்றோ வீரன்? அதனை தீய சகுணமென்று கண்டு இராமன் உடனே சீதைக்கு என்ன கேடு வந்ததோ என்று எண்ணுகின்றான். இலக்குவனைக் கண்டு அவனை மிகவும் கடிந்து பேசிச் சீதையைத் தனியே விட்டுவந்தது தவறு எனக் கண்டிக்கிறான்.

இராமன் கைகேசியைப்பற்றி இரண்டிடங்களில் "இப்போதாவது கைகேசி எண்ணம் ஈடேறி மகிழ்வாள்" என்று கூறுகிறான், இத்தீயவனாகிய இராமனுக்குக் கைகேசியிடம்கொண்ட பகைமை எவ்வாறு நீங்கும்? இந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்காருடைய குறிப்பு கவனிக்கத்தக்கது. அது பின் வருமாறு:—

(ஆரண்யகாண்டம், சுருக்கம் 58-ம் பக்கம் 152 பார்க்க)

"இராமன் கைகேசியைப்பற்றித் தான் கொண்டிருந்த இரகசியமான அபிப்பிராயம் இப்பொழுது வெளிப்படுகிறது. தான் காட்டில் மடிந்தால் பரதன் சுகப்படுவானென்றே வனத்திற்கு அனுப்பினாள் என்பது இராமனுடைய கருத்து. ஆனால் இதற்கு முன் எல்லாம் தெய்வச்செயலென்றும், அவளிடத்தில் குற்றமில்லையென்றும் பரதனையும், இலட்சுமணனையும் கண்டித்ததற்கும், இதற்கும் ஒத்திருக்கவில்லை. அப்படி வேண்டுமென்றே அவள் செய்திருந்தாலும், பொறுமையில் பூமிதேவிக்குச் சமமென்று வர்ணிக்கப்படும் இராமன் அவளை மன்னிக்காமல் அற்ப மனிதனைப்போல குரூரமாகச் சொல்லிக் காட்டுவது அழகல்ல" இதுவே நமது ஐயங்காருடைய குறிப்பு. நாம் முன் பல இடங்களில் குறித்தபடி இம்

மொழி பெயர்ப்பாளர் பெரும்பாலும் சரியாக மொழி பெயர்த் திருப்பதோடு தமது அபிப்பிராயங்களையும் அங்கங்கே குறி த்திருப்பது பாராட்டத்தக்கது. ஐயங்காராகிய இவர் இராம னுடைய இழிந்த குணங்களையும், அற்பத்தனங்களையும் கண்டு பொறுக்கமாட்டாமல் இவ்விடத்தில், "இராமன் அற்ப மனிதனே அவனுடைய செயல்கள் இழ்ச்சிக்கு இடமானவை களே" என்று எடுத்துக்காட்டுகிறார். இதை எந்த அறிஞர் தான் மறுக்கமுடியும்?

இராமன் தம்பியை நோக்கி "சீதை பேதைப் பெண்பால். நீ அறிவுடைய ஆண் மகன். ஆதலின் நீ அவளை அவளு டைய பேச்சுக்காகச் சினந்து தனியே விட்டு வந்தது தவறு" என்கிறான். இவ்விடத்திலும் நமது மொழிமெயர்ப்பாளச் ஐயங்கார் குறிப்பு கவனிக்கத்தக்கது. அவர் பக்கம் 155-ல், "இந்த உபதேசத்தை கைகேசி விஷயத்தில் தான் ஏன் காட் டக்கூடாது? இலக்குவனுடைய நிலையில் இராமன் இருந் தால் என்ன செய்திருப்பானோ தெரியவில்லை." என்று குறித் திருக்கிறார். இது மிகவும் பொருத்தமானதே. இராமன் தனக்கொரு வழக்கும், பிறருக்கொரு வழக்கும் பேசும் இழி செயலினனென்று முன்னரும் விளக்கினோம்.

இராமன் இலக்குவனை நோக்கி, "நீ சீதையிடத்தில் என் னிடம் வருவதாகச் சொல்லிவிட்டு, அங்கே எங்கேயாவது மறைந்திருந்து அவளைக் காப்பாற்றலாகாதா?" என்று வினாவுகிறான். மொழி பெயர்ப்பாளர் ஐயங்கார் இவ்விடத் தில் (பக்கம் 155) "இராமனிடத்திற்குப் போகிறேனென்று சீதையிடத்தில் சொல்லிவிட்டு அப்படிச் செய்யாமலிருப்பது பொய்யல்லவென்றும், சீதையை ஏமாற்றுவதாகாதென்றும் இராமன் நினைப்பது போல் தோன்றுகிறது" எனக் குறித் திருக்கிறார். இராமன் ஏமாற்றுக்காரனென்பதும், பொய்ய னென்பதும், பொய் சொல்ல பிறரைத்தூண்டுபவன் என்பதும் சுமந்திரனிடத்தில் அயோத்தியை விட்டுப் புறப்படும்போது பேசியது முதலிய, பல இடங்களில் விவரமாக எடுத்துக் காட் டினோம். அதற்கேற்ப ஈண்டும் இராமன் தன் தம்பியைத் தன் மனைவியிடமே பொய் புகன்று ஏமாற்றியிருக்குமாறு கூறுகிறான். இவ்வறிவீனனாகிய இராமனுடைய அற்பச்சிந் தையிலே இலக்குவன் பொய் புகன்று மறைந்திருப்பதைச் சீதை கண்டுவிட்டால் அவள் அவனைப்பற்றி என்ன நினைப் பாள், என்ன செய்திருப்பாளென்ற எண்ணமே தோன்றவில் லை.

இராமன் சருக்கம் 27-ல் மாரீசனை எவ்வளவோ சிரமப் பட்டுக் கொன்றேன் என்கிறான்; சருக்கம் 59-ல் விளையாட் டாக அம்பெய்து கொன்றேனென்கின்றான். இராமனுடைய பொய்த் தன்மை இங்கும் கவனிக்கற்பாலது. இதை நமது ஐயங்காரும் சருக்கம் 59-ம் பக்கம் 156-ல் "57 அத்தியாயத் தில் எவ்வளவோ சிரமப்பட்டு அவனைக் கொன்றேனென்று இராமன் சொன்னதைக் கவனிக்கவும்" எனக் குறித்திருக் கிறார்.

இராமன் சீதையை நினைந்து அழுது கண்ணீர் விட்டுக் கதறுகிறான். அவன் பட்டபாட்டையும், அழுத அழுகை யையும் விவரிப்பதற்கு வால்மீகிக்கு ஐம்பத்தேழு முதல், அறு பத்தாறு முடிய உள்ள பத்து அதிகாரங்களிலும் முடிய வில்லை. இராமன் சீதையைக்காண வில்லையென்றால் தன் உயி ரையும் விட்டுவிடுவதாகத் துணிகிறான். இலக்குவன் பலமுறை தேற்றியும் அவன் கவலை தீர்ந்தபாடில்லை; ஓயாமல் அழுது புலம்பினான். இராமன் மரங்களையும், மலைகளையும் உயிருள் ளனபோல வினவுகிறான். பல தடவை மூர்ச்சையடைகிறான். பெருமூச்சு விட்டுக்கதறுகிறான். தான் முற்பிறப்பில் செய்த பாவத்தின் பலனே இங்ஙனம் விளைந்ததென்று ஓலமிட்டான் இராமன். இராமனே இவ்வாறு அற்பனாக ஓலமிட அதை வால்மீகி எழுத சிலர் இன்னும் அவனைத்தெய்வமென்கின்றன ரே! இவ்வாறு ஓலமிட்டு அறிவிழந்து திண்டாடுவதுதான் தெ ய்வத்தின் தன்மையோ? இவ்வாறு முற்பிறப்பின் வினையை நினைந்து அழுவதுதான் தெய்வத்தின் தன்மையோ? அறிஞ ரே! சிந்தியுங்கள் சிந்தித்து இராமனைத்தமிழ் மக்களின் பகை வனாகிய ஓர் அற்ப மனிதனென்று தெளியுங்கள். உங்கள் உற் றார் உறவினர்களுக்கெல்லாம் இவ்வுண்மையை எடுத்துச்சொல் லிப் பரப்புங்கள்.

இராமன் சீதையிடத்தில் மோகம் மிக்கவன், அவளும் இராமனிடம் காம இன்பமனுபவிக்கவே அவனோடு காட்டு க்கு வந்தாளென்று நாம் முன் கட்டுரைகளில் பல இடங்களில் விளக்கி வந்த உண்மைகள் இங்கே மிகவும் வலியுறுகின்றன. இராமன் கொக்கோக நூலின்படி லீலைகள் புரிவதில் தான் நிபுணனென்றும், அயோத்தியில்தன்பெற்றோரிடையே அவை களை மனம் போனவாறு புரிய இடமில்லாமல் இருந்தானென் றும், காட்டிற்கு வந்தபின் கூச்சமில்லாமல் மனம் போனபடி யெல்லாம் காம லீலைகள் செய்து வந்ததாகவும் கூறுகிறான்.

இது மிகவும் உண்மையே! அயோத்தியில் இவன் தனி மாளிகையில் தானே சீதையுடன் வாழ்ந்தான்? பின் ஏன் மனம் போனவாறு நடக்க முடியவில்லை? என்றால் இவன்தான் தசரதனுடைய மனத்தை மகிழச் செய்வதிலே அவனுடனேயே இருக்க வேண்டியவனாக இருப்பானே? அதனால் இவன் கூறுவது உண்மை தான், இல்லையானால் தசரதன் தான் தீயின்முன் கைகேசிக்குச் செய்துகொடுத்த வாக்கையும் மாற்றத் துணிந்து இராமனை முடிசூட்டித்தன் பக்கத்திலேயே வைத்துக்கொள்ள முயல்வரனா?

இராமன் சீதையை நினைந்து புலம்பும்போது அரக்கர் அவளுடைய கழுத்தைக் கடித்து இரத்தத்தைக் குடித்திருப்பர் என எண்ணுவதோடு அவளுடைய உருண்டு பருத்து அழகாயிருக்கும் கொங்கைகளையும் அறுத்துத் தின்பார்களே என்று கதறுகிறான்! இதனால் இவன் சிந்தையின் இழிதகைமையைச் சிந்தியுங்கள்! இவ்வாறு காமப்பித்துக்கொண்ட இராமன் சூரியனையும், காற்றையும், மலையையும் வினாவி அவைகளை அதட்டி நொருக்கிவிடுவேன் என்கிறான்! ஆற்றை வற்றவைப்பேன் என்கிறான். உலகத்தையே அழிப்பேனென்கிறான்! ஒருவன் செய்த தீமைக்காகப் பலரையும் அழிப்பேனென்பது அறிவற்ற செயலென்று இலக்குவன் எடுத்துக்காட்ட ஒருவாறு அமைகிறான். இராமன் ''மாயங்கள் வல்ல அரக்கரோடு பகை தேடிக்கொண்டேன்'' என்று மிக வருந்துகிறான். இனி இலக்குவன் செயலை ஆராய்வோம்.

இலக்குவன் உண்மையில் சீதையைக்கைப்பற்றுமாறுதான் எண்ணியிருந்தானென்பதும், அதனாலேயே அவன் சீதை முன் அவள் ஐயுறுமாறு நடந்துகொண்டானென்பதும் முன் கட்டுரையில் ஆராயப்பெற்றது. அதற்கேற்பவே அவனுடைய பின் செயல்களும் உள்ளன. இலக்குவன் உண்மையில் தப்பான எண்ணம் இல்லாதவனானால் இராமனையடைந்தவுடன் தன் செயலையும் சீதையின் கொடிய பேச்சையும் கூறியிருப்பான். அவனுக்கு இராமனுடைய தன்மை தெரியும். தான் என்ன சொன்னாலும் அவன் நம்பானென்று கள்ளவிழி விழித்துக்கொண்டு நின்றான். பின்னரும் குடிசை, குளம் கூரையும் கூறவில்லை. அவன் சீதை அங்கே இருப்பாளென்றும் தன் இழிசெயலைக் கூறுவாளென்றும் எண்ணி அஞ்சிக் குடிசை வாசலிலேயே நிற்கிறான். இராமன் உள்ளே சென்று உள்ளே காணாமல் அலறிக்கொண்டு வெளியே வந்து வினாவி

யபோதுதான் அவன் கொஞ்சம் துணிவுடன் நிகழ்ந்ததைக் கூறுகிறான். இதை வலியுறுத்துமாறே இலக்குவனுடைய பின்னைய பேச்சும் இருக்கிறது. அதாவது சீதை காடுகளில் அலைவதில் விருப்பமுடையவள். அதனால் எங்காவது காட்டில் வேடிக்கையாக அலைந்துகொண்டிருப்பாள். அல்லது குளத்திலோ, ஆற்றிலே நீராடப் போயிருப்பாள். அல்லது நாம் அவளைத் தேடிப்பிடிக்கட்டுமென்று எங்காவது ஒழிந்து கொண்டிருப்பாள்'' என்று கூறுகிறான். இலக்குவனுக்குச் சீதை அப்போதிருந்த நிலை நன்றாகத் தெரியும். அவள் இராமன் அரக்கரால் கொல்லப்படும் நிலைமையில் இருந்து கதறினான் என்று உண்மையில் எண்ணிப் படாதபாடு பட்டு இலக்குவனை அனுப்ப முயல்கிறாள். அவள் தன்னைக் கைப்பற்ற நினைக்கிறானென்று உண்மையில் நம்பி தீயில் விழுவேன். எப்படியும் உயிரைப் போக்கிக்கொள்வேனென்று பல வாறு அழுதுவிடுகிறாள். இந்நிலையினளாகிய சீதைக்கு அப்போது காட்டில் உலாவப்போகவும் குளத்திலோ, ஆற்றிலோ நீர் விளையாடப்போகவும், ஒளிந்து விளையாடவும் மனம் போயிருக்குமோ? இதனை நன்கு அறிந்திருந்த இலக்குவன் இவ்வாறு பேசியது அவனுடைய வஞ்சக மனத்தையே மேலும் புலப்படுத்தும். இராமன் இதை மிதமிஞ்சிய கவலையால் அறியானாயினன். மேலும் இராமனுக்கு இலக்குவனை வஞ்சகனெனத்தெரிந்தாலும் வேறு துணையின்மை பற்றி அடக்க முடைமையே அவ்வேளையில் அறிவுடமை என்பதும் தெரியும்.

பின் இலக்குவன் ஆற்றங்கரையில் போய்ச் சீதையைத் தேடவும் துணிகிறான். சீதைக்கும் இலக்குவனுக்கும் நிகழ்ந்த மாறுபாட்டால் அவனை வேறுபிரிக்கும் வரையும் மறைந்திருப்போம் தனித்து இராமனிடம் தோன்றிச் செய்தி சொல்ல என்று சீதை மறைந்திருந்தாலும் இருக்கலாமென எண்ணிஒருவேளை இராமன் இலக்குவனைநோக்கி அவளைத் தேடத்தனித்து அனுப்பியிருந்தாலும் இருக்கலாம். எவ்வாறாலும் சீதையைக் காணமுடியாமற் போகவே இராமன் அறிவழிந்து அலறுகிறான். தம்பி பலவாறு சொல்லியும் கேட்கவில்லை. இலக்குவன் கடைசியாக இராமன் அழுவதையும் அவனிடம் மகா மோகத்தோடிருப்பதையும், உணர்ச்சி யற்றவனைப்போலவே இருப்பதையும் கண்டு ''சீதையை எவன் தூக்கிப்போனால் என்ன? அல்லது அவள் செத்தாலென்ன? வீராகிய நீர் கவலை யடையாதேயும்'' என்று கூறுகிறான்.

இதனால் அவனுடைய மனநிலை எவ்வளவு தீயதென்று உணரலாம். தனக்கு இசையாத சீதை இருக்தென்ன போயென்னஎன்று இவ்வாறு கூறினான் போலும்! இனி கம்பர் போக்கைக்காண்பாம்.

தன்னைச் சீதை வைததை இலக்குவன் குடிசையுட் சென்று மீண்ட இராமனிடம் கூறியதாக வால்மீகி கூற, அவன் இராமனைக் கண்டவுடனே கூறியதாகக் கம்பர் கூறுகிறார். "நீ போகவில்லையென்றால் நெருப்பில் விழுவேனென சீதை கூறிக் கானகத்தில் ஓடினதாக இலக்குவன் கூற்றால் கம்பர் கூறுகிறார் இது புதுக்கதையே.

இராமன் பட்டபாடுகளையெல்லாம் வால்மீகி பத்து அதிகாரங்களின் மேற்படக்கூற, கம்பர் அதனை இரண்டொரு கவிகளிலேயே கூறுகிறார். இராமன் புலம்பியபோது கூறிய இழிமதிச் சொற்களையெல்லாம் கம்பர் மறைத்தார். ஏனெனின் இராமனைத் தெய்வத்தன்மையிற் குறைத்ததாம் என எண்ணிப்போலும்! வில் முதலியவைகளெல்லாம் ஓரிடத்திலேயே முறிந்து கிடந்திருக்க வெகு தூரத்துக்கப்பால் அவை கிடந்ததாக கம்பர் கூறினார். இராமன் அறிவிழந்தவனாய் உலகத்தை அழிப்பேனென்று கூறிய செய்திகளையும், இலக்குவன் அவனுக்கு நல்லறிவு புகட்டியதையும் இவ்விடத்தில் கூறாது மறைத்ததோடு கம்பர் இலக்குவனுடைய செயல்களையும் மாற்றிக் கூறினார்.

ஒன்பதாவது அத்தியாயம்.

(சருக்கம் 67-முதல் 68-முடிய)

இராமன் இலக்குவன் சொன்னதை ஒப்புக்கொண்டு அவன் விரும்பியபடி அக்காடுகளில் தேடத் தோடங்குகையில் அப்போர்க்களத்திற்குச் சற்று தெற்கே மலைபோல இரத்தம் பெருகிக்கிடந்த ஜடாயுவைக் கண்டனன். உடனே இராமன், "கழுகுருக்கொண்டு காடெங்கும் திரியும் இவ்வரக்கனே சீதையைத்தின்றவன். இவன் சீதையைத்தின்றுவிட்டு இளைப்பாறு

கிறான்'' என்றுஜடாயுவின்மேல் பாய்ந்தான். ஜடாயு இரத்தத்தைக்கக்கிக்கொண்டு, ''சீதையையும் என் உயிரையும் இராவணன் கொண்டுபோய்விட்டான். சீதையை எடுத்துப் போவதைக்கண்டு நான் அவனோடும் போரிட நான் ஏய்த்த சமயம் பார்த்து அவன் என்னை வெட்டித்தள்ளிச் சீதையோடு விண்வழியே போனான், இராவணனால் நான் கொல்லப்பட்டிருக்கிறேன். நீயும் என்னைக் கொல்லவேண்டாம்'' என்று வேண்டிற்று. இராமன் அதுகேட்டு அதைக் கட்டிக்கொண்டு அழுதான். ''அவன், நாடிழந்தேன், உறவினரைப் பிரிந்தேன், நாட்டில் பிச்சையெடுத்தாவது பிழைக்கக்கூடாதா? அதுவும் இல்லாமல் காட்டுக்குத் துரத்தப்பட்டேன். இப்பறவையையும் கொன்றேன், நான் எங்கே போனாலும் என் தீவினையும் கூடவருகிறது'' என்று புலம்பி அதைத் தடவிக்கொடுத்தான். அவன், ''ஜடாயுவே! சீதை எங்கே!'' என்று கூறி மூச்சற்று வீழ்ந்தான். பின் தெளிந்து இராமன், ''என் பொருட்டு உயிரிழந்த ஜடாயுவே விவரமாக நடந்ததைக் கூறும். இராவணன் ஏன் சீதையைத் தூக்கிப்போனான்; நான் அவனுக்கு என்ன குற்றம் செய்தேன்? அவன் பலம் என்ன? அவன் செயல் யாது? அவன் வாழ்வது எவ்விடத்தில்?'' என வினாவினான்.

சடாயு, ''மாயையால், பெருங்காற்றும் பெருமழையும் உண்டுபண்ணி அரக்கர் தலைவனாகிய இராவணன் சீதையைத் தூக்கிப்போனான். அவன் என்னை வெட்டிவிட்டுத் தெற்கே போனான். என் கண்கள் சுழல்கின்றன. நான் இதோ இறக்கப்போகின்றேன். நீ சீதையை அடைவாய்!!'' என்று கூறிற்று. அப்போது சடாயுவின் வாயிலிருந்து இரத்தத்துடன் மாமிசம் விழுந்தது. சடாயு ''விச்ரவசின் மகன், குபேரனுடைய தம்பி'' எனச் சொல்லிக்கொண்டே உயிரைவிட்டது. இராமன் ''சொல்லும் சொல்லும்,'' என்று வேண்டினான். அது கால்களைப் பரப்பிக்கொண்டு தலையைக் கீழே போட்டு உயிரை விட்டது. இராமன் ''ஐயோ! பல தலைமுறையாக பறவைகளுக்கெல்லாம் அரசனாகக்கிடைத்த அரசாட்சியைவிட்டு எனக்காக இது உயிரைவிட்டது. இதனை நாம் தந்தையாகக் கொண்டதால் பிரேதக்கிரியைகளைச்செய்வோம்'' என்றனன். இலக்குவன் விறகடுக்கினான். இராமன் அதில் ஜடாயுவைத் தூக்கிவைத்து எரித்தனன். பிறகு அவர்கள் காட்டிற்குட் போய் கொழுத்த பெரிய மான்களை அடித்துக்கொண்டு வந்து தண்ணீர் இரைத்தார்கள். பின் அவர்கள் தருப்பைகளைப்

பரப்பி மாமிசத்தைப் பிண்டங்களாகப் பிடித்துவைத்தார்கள். அதனால் ஜடாயு மேலான பதவியை அடைந்தது. இராமனும் இலக்குவனும் சீதையைத்தேடிப் போனார்கள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

ஜடாயு இராவணனால் அடிக்கப்பட்டு இரத்தத்தைக் கக்கிக்கொண்டு கிடப்பதைக் கண்டு இராமன் அதை கழுகு உருக்கொண்டு இதுவரை தன்னை எமாற்றி இப்போது சீதையைக் கொன்ற அரக்கனாகவே எண்ணி அதன்மேல் கொல்லப்பாய்கிறான். இவனுக்காகத் தன் உயிரையும் கொடுத்த ஜடாயுவை இந்நன்றி கெட்ட இராமன் இவ்வாறு கொல்லத் துணிகின்றனனே! இவனுடைய இழி செயல் இருந்தவாறு மிக அழகிது! இந்நன்றிகெட்ட நரனையும் தெய்வம்போல் வணங்குகின்றனரே சிலர்! அவர்கள் இதை நன்கு படித்துணர்ந்து தங்கள் குற்றத்தைத் தெரிந்து நல்வழிப்படுவார்களாக.

இராமன் தூரத்துப் பார்வைக்கு ஜடாயுவை அடையாளம் கண்டு உணராமல் இவ்வாறு ஐயுற்றுப் பாய்ந்தான் என்றால் இவன் கண் அவ்வளவு குறுகிய நோக்கமுடையதா? நெடுநாளாகப் பழகிய ஜடாயுவை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் அரக்கனோ என ஐயுற்றான் எனின், இவனோடு புதுப் பழக்கம் செய்பவர்கள் பாடு இன்னும் ஆபத்தாகவன்றோ முடியும்போலிருக்கின்றது! இராமன் அற்பபுத்தியுள்ளவனாக இருக்கவேண்டும், இல்லையேல் கண் சரியாகத் தெரியாதவனாக இருக்கவேண்டும். எவ்வாற்றானும் இவனைத் தெய்வ நிலையினன் என்பது அறியாமையன்றோ?

இராமன் ஜடாயுவின் அருகில் போய் மீண்டும் அதைத் தனக்கு வேண்டியது என்று உணராமல் கொல்ல முயல்கிறான். ஏனெனில் இராமன் சடாயுவை இதுவரை தன்னோடு பழகி ஏமாற்றி வந்ததோடு சீதையைக் கொன்று தின்னச் சமயம் பார்த்திருந்த ஓர் அரக்கனாகவே துணிகிறான். அதனால் அவன அதன் அருகிற் போய், "கழுதுருக்கொண்டு இக்காடெங்கு திரிந்து வந்த இவ்வரக்கனே சீதையைத் தின்று இளைப்பாறுகிறான்." என்று கொல்ல யத்தனிக்கிறான் என்னே பரிதாபம்! சடாயுவே இவனுக்காக உயிரைக் கொடுத்திருக்கிறது அது மிகவும் பயந்து, "அப்பா! நான் இராவணனால் கொல்லப்பட்டுச் சாகும்நிலையில் கிடக்கிறேன், என்னை நீயும் கொல்லவேண்டாம்" என்று பரிதாபமாகக் கத்திற்று.

இப்படியும் இராமனைப் போல அற்பபுத்தியுடைய கொலை பாதகரும் உண்டோ? இக்கொலை பாதகனையும் நம்பி உயிரிழந்ததே ஜடாயு! இராமன் மாடுபறிகொடுத்தவர்களுக்குச் செடியெல்லாம் கண் என்பது போல தனக்காக உயிரையும் கொடுத்த ஜடாயுவைத்தன்பகைவனாகவே கொண்டனன். ஆனால், கொஞ்சமாவது பகுத்தறிவுடையவர் இவனைப்போல நடப்பார்களா? ஆதலின் சாதாரண மனிதரோடேனும் இணைவிட முடியாத இழிமதியாளனாகிய இராமனைச் சிலர் தெய்வத்தோடு ஒப்பிட்டு வணங்குவது அறியாமையேயாம்.

ஜடாயு தன்னைக் கொன்று இராவணன் சீதையைக் கொண்டு போய் விட்டான் என்று கூறிய பிறகு இராமன் தன்னுடைய தவறான எண்ணத்தை உணர்கிறான். அவன், "ஐயோ! சடாயுவும் என் பொருட்டு உயிர்விட்டதே! என வருந்தி, சடாயுவே! சீதை எங்கே?" என அலறி வீழ்கிறான். இதனால் சடாயு செத்தது அவனுக்கு அதிக வருத்தத்தைத் தரவில்லை. சீதை பிரிந்ததற்காகவே அவன் அதிகமாக வருந்தியவனாவன் என அறியலாம். தன் பொருட்டுச் சண்டையிட்டுக் குற்றுயிராகக் கிடக்கும் சடாயுவுக்கு உயிர்தர அவன் ஒரு சிறிதும் முயன்றானில்லை. அது இரத்தத்தைக் கக்கிக்கொண்டு சாகும் நிலையில் இருக்கிறது. இத் தீயவனாகிய கல்நெஞ்சன் இராமன், "சடாயுவே! ஐயோ என் மனைவியை இராவணன் தூக்கிப்போய் விட்டானே! நான் அவனுக்கு என்ன குற்றம் செய்தேன்? இராவணன் எத்தகையவன் கூறும்" என்று தன் காரியம் பார்ப்பதிலேயே கண்ணாக இருக்கிறான். இத்தன் காரியக் குட்டி உபசாரத்திற்காவது சடாயுவுக்கும் புண்ணில் மருந்து கட்டிப் பிழைப்பிக்க முயற்சி செய்தானா? இவனோ தெய்வம்? இவனை நம்பியிருப்போர் சாடாயுவின் கதியைச் சிந்திப்பார்களாக! தன் பொருட்டு உயிரையும் கொடுத்த சடாயுவையே அரக்கனென்று தன் அற்பமதியால்கருதிக் கொல்லயத்தனித்ததோடு உண்மை தெரிந்த பின்னரும்அப்பறவையின் நிலையைக்கண்டு கொஞ்சமும் மனம் இரங்காமலும், அதன் நோயைத் தணிக்கக்கொஞ்சமும் முயலாமலும் தன் மனைவியாகிய சீதையைப் பற்றிய செய்தியையே அதனிடம் கேட்டு நின்றவனாகிய இராமனா சாயுகதியில் மானம் பொறுக்கமாட்டாமல் அவன் விழுந்து செத்த இத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கப்பால் இவர்களை வந்து காப்பாற்றப் போகிறான்! ஆற்றில் விழுந்து செத்து மீன்களுக்கிரையாகிய இராமனுடைய உடலா இவர்களை இப்

போது வந்து காத்து முத்திக்கு அழைத்துப் போகப் போகிறது? ஆதலின் இவனைத் தெய்வமென நம்பி வழிபடுவோர் இதனை நன்கு சிந்தித்துத் தாங்கள் அறியாமையால் நடந்த வழிகளை விட்டு நல்வழியை அடைவார்களாக. இராமன் தெய்வ நிலை பெற்றுளனெனக் கொண்டாலும் அவனுக்காக உயிரையும் கொடுத்த சடாயுவினிடமே இரங்காமல் அதைக் கொல்லவும் துணிந்தவன் இவர்களுக்கு அருள் செய்யும் இரக்கமுள்ள மனத்தினனாவது எங்ஙனம்? அறிஞர்காள்! சிந்தித்து உண்மை காணுங்கள்.

இராமன் தன் காரியக்குட்டி என்பதை முன்னரும் கண்டோம். தன் தந்தையாகிய தசரதன் எவ்வளவு தூரம் தன் பக்கத்திலேயே காடேகாமல் இருக்கும்படி வேண்டியும் பின்னாலேயே ஓடி வந்தும் இராமன் அவனுக்காக மனம் இரங்காமல் அவன் தன்னைப் பிரிந்தால் செத்துப்போவானெனத் தெரிந்துகொண்டே அவன் செத்தாலும் கவலையில்லை, தனக்கு நாடு கிடைக்க வழியாவது அப்போது காடேகி பரதனை ஏமாற்றுவதே எனத் துணிந்து காடேகினன். இத்தன் காரியக் குட்டியாகிய இராமனை நோக்கி சடாயு, "மாயையால் பெருங் காற்றும் பெரு மழையும் உண்டுபண்ணி அரக்கர் தலைவனாகிய இராவணன் தூக்கிப் போனான்." என்று கூறுகிறது. இது உண்மையாயின் வால்மீகி இராவணன் தூக்கிப் போகும்போது இதைப்பற்றி ஒன்றும் கூறாததென்னை? ஆதலின் இது வால்மீகியின் பொருந்தா உரையே யாகின்றது. முன்னுக்குப் பின் முரணாக வால்மீகி கூறினார். இதையே மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 187ல், "இதை அந்த இடத்தில் ஏன் சொல்லவில்லை யென்பதைக் கவனிக்கவும்." எனக் குறிப்பெழுதியிருக்கிறார்.

சடாயுவுக்கு உயிர்போய்க்கொண்டிருக்கிறதை நேரில் கண்டும் இராமன், "இராவணனின் வரலாற்றைச் சொல்லும், சொல்லும்" என வற்புறுத்துகிறான். அது செத்து விழுகிறது. இதனால் இராமனைத் தன் காரியக்குட்டி என்பதிலும் இரங்காத கல்நெஞ்சன் என்பதிலும் என்ன தடையுளது?

இராமன் புலம்பும்போது, "சடாயு பல தலைமுறையாகக் கிடைத்த நாட்டை ஆண்டுவந்தது" என்று கூறுகிறான். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 178-ல் "சடாயுவும் சம்பாதியும் அருணனுடைய பிள்ளைகள். அவனும்

(அருணன்) கருடனும் காசிபரின் புத்திரர்கள். தண்டகாரணியத்தில் காசிபராவது கருடனாவது அருணனாவது ஆண்டதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க பல தலைமுறையாக வந்த அரசாட்சியைச் சடாயு பறவைக்கரசனாய் ஆண்டு வந்தான் என்று இராமன் கூறுவதற்குக் காரணம் தெரியவில்லை'' என்று குறித்திருக்கிறார். இதனால் இராமன் அறிவுகெட்டு இவ்வாறு புலம்பியிருக்கவேண்டும். அறிவு கெட்டாற்றானே பொருந்தாத பொய்யுரைகள் வெளிவரும்!

இராமன் சடாயுவினிடம், ''நான் என்ன குற்றம் செய்தேன? இராவணன் என் மனைவியைத் தூக்கிப்போயினனே! இராவணன் எவ்விடத்தினன்? எத்தகையவன? எவ் ஆற்றலன்?'' என வினவுகிறான். இக்கூற்றுக்களெல்லாம் நம்ப முடியாத நிலையிலிருக்கின்றன. இதைப்பற்றி இவ்விடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் ஒரு நீண்ட குறிப்பு இரண்டு பக்கங்களில் எழுதியிருக்கிறார். அவை 180, 181ம் பக்கங்கள். அக்குறிப்பு வருமாறு:—

(''இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும்.) சீதையை ராவணன் எடுத்துப்போகக் காரணமென்ன? அவனுக்கு என்ன கெடுதி செய்தேன்? அந்த இராட்சதனுடைய வரலாறும் இருப்பிடமுமென்ன வென்று ராமன் சடாயுவைக் கேட்கிறான். அவனுடைய இருப்பிடத்தை அந்தப் பட்சி சொல்லாததால் மறுபடியும் தேடிக்கொண்டு போனார்களென்றும், பிறகு சுக்ரீவன் முதலிய வானரர்களின் உதவியால் அந்த இடத்தைக் கண்டு பிடித்தார்களென்றும் கதை சொல்லப்படுகிறது இப்படியே சுக்ரீவனும் ராவணனிருக்குமிடத்தை அறியேனென்று சொல்லுகிறான்.

(1) விசுவாமித்திரர் தன் யாகத்தை ரட்சிக்க ராமனை யாசித்தபொழுது அதை அழிக்கும் மாரீச சுபாகுவைப் பற்றிச் சொன்னார். அவர்களுக்கு ராவணன் பக்க பலமாக வருகிறானென்றவுடன் தசரதர் அவனைப்பற்றின வரலாற்றைப் பூர்ணமாக அறிந்தவரானதால் 'அவனுடன் நான் யுத்தஞ் செய்யமாட்டே'னென்றார். ஆகையால் ராவணனைப்பற்றின விஷயங்கள் யாவும் ராமனுக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை. அப்பொழுது தசரதர் சொல்லாவிட்டாலும்சுபாகு மாரீசர்களை ஜெயித்ததைக் கேட்ட பிறகாவது அவர் ராமனுக்குச் சொல்லியிருக்க வேண்டும்.

(2) யாகத்தைக் கெடுக்க வந்த ராட்சதர்களையும் ராவணனையும் பற்றின விஷயங்களை ராமன் விசுவாமித்திரரைக் கேட்டிருப்பார். அவர் சொல்லியுமிருப்பார்.

(3) இட்சுவாகு வம்சத்தில் ஒருவரான அனரண்யன் ராவணனால் கொல்லப்பட்டதும், அவன் இறக்கும், பொழுது 'என் வம்சத்தில் பிறக்கும் ராமன் உன்னைக் கொல்வானென்று சபித்ததும் அந்த வம்சத்தரசர்களுக்கும் மந்திரிகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் தெரிந்திருக்கவேண்டும். ஆகையால் ராமனுக்கும் தெரியும்.

(4) வேதம், ஸ்மிருதி, இதிகாசபுராணங்கள், ராஜவம்ச சரித்திரங்கள், பூலோக ககோள வர்ணனை முதலியவைகளை ராஜ குமாரர்கள் அவசியம் கற்றிருக்கவேண்டும். அப்பொழுது சகல லோக கண்டகனான ராவணனைப் பற்றித் தெரியாமலிருக்க நியாயமில்லை.

(5) சூர்ப்பனகை ராம லட்சுமணர்களிடத்தில் ராவணனுடைய வரலாற்றைச் சொன்னாள்.

(6) அவளை அங்கஹீனஞ்செய்து கரதூஷணர்களைக் கொன்றது முதல் ராட்சதர்கள் தனக்குக் கெடுதி செய்ய சமயம் தேடிக்கொண்டிருக்கிறார்களென்று ராமனே பலதடவை சொல்லியிருக்கிறார். சீதையை அவர்களைத் தவிர வேறொருவனும் எடுத்துப் போகத்துணிய மாட்டானென்று சுலபமாக அறியலாம். தங்கையைக் கெடுத்தவனைத் தண்டிப்பதற்குத் தமையன் வருவானென்று தெரியாதா? கரதூஷணனைப் போல் அவனும் யுத்தத்திற்கு வருவானென்று எதிர்பார்ப்பது நியாயமே.

(7) தன் சத்துருக்களின் பலாபலங்களையும் வரலாறுகளையும் பூரணமாக அறிய வேண்டியது அரசர்களுடைய தருமம்.

(8) மேலும் தண்டகாரண்யத்து ரிஷிகளிடத்திலிருந்து ராவணாதி ராட்சதர்களின் விருத்தாந்தம் யாவற்றையும் கேட்டு அறியாமலிருக்கமாட்டார்.

(9) மேலும் ராவணாதி ராட்சதர்களால் தங்களுக்கு நேரும் கெடுதிகளைப்பற்றித் தேவர்கள் மகாவிஷ்ணுவிடத்

தில் முறையிடவில்லையா? அவருடைய அவதாரமே ராம னல்லவா? பூமியில் மனித தேகத்தை எடுத்தால் அவருடைய அகண்ட மான ஞானம் அழிந்ததா?

மேலே கண்ட ஒன்பதும் சீனிவாசய்யங்காருடைய குறிப் பாம். இராமன் தெய்வத்தின் தோற்றமாக இருந்தாலல்ல வோ அவன் பலவும் அறிந்தவனாக இருப்பான்? அவன் அற்ப மனிதனே!

இராமன் சடாயுவிற்குப் பிரேதக் கிரியைகள் செய்து பல மான்களைக் கொன்று அவைகளின் மாமிசங்களைப் பிடித் துப் பிண்டம் வைத்தனனாம். இவ்வளவு இழிதகைமையனை மனிதரிலும் கேடு கெட்ட மனிதனென்றே கூற இயலாத போது தெய்வமென்று கூறுவதெப்படி? கருணையற்றவனாய் எத்தனைஉயிர்ப்பிராணிகளை இவ்விராமன்கொன்றான்? எத் தனை உயிர்ப் பிராணிகளுக்கு இவ்விராமனுடைய வயிறு சுடு காடாயிற்று? எள்ளளவாவது இரக்கமுள்ளவனாக இருந் திருப்பானேல் இவ்விராமன் இத்தனை உயிர்களைக் கொன் றிருப்பானா? நிற்க, இனி கம்பர் புரளியைக் காண்பாம்.

இரமன் ஜடாயுவைக் கொல்லப்போனதும், அது கண்ட ஜடாயு, "நான் கொல்லப்பட்டேன். இன்னும் நீயும் என் னைக் கொல்லவேண்டாம்" என்று கூவியதையும் கம்பர் மறைத்துவிட்டு இராமனை மிகவும் நல்லவனைப்போல கதை யை மாற்றி எழுதுகிறார். மூச்சற்றுக் கிடந்த ஜடாயுவைக் கண்ட ராமன் அதன்மேல் விழுந்து மூச்சற்றுப்புலம்பியிருந்த தாகவும், பின்னர் ஜடாயு கொஞ்சம் உணர்வுபெற்று இராம னையும் தம்பியையும் பார்த்ததாகவும் கம்பர் கூறுகிறார்.

ஜடாயு இராமனை நோக்கி, "நீ மனைவியை இழந்தவித மெப்படி?" என்று கேட்டதாகவும், இலக்குவன் மாய மான் வந்தது முதல் நடந்த செய்திகளைக் கூறியதாகவும், அது கேட்டு ஜடாயு அவர்களைத் தேற்றியதாகவும் கம்பர் புதுக் கதை கட்டுகிறார். அவர் கதை இத்துடன் நிற்கவில்லை. ஜடாயு இராமனைப் பலவாறு தேற்றி இராவணன் தன்னைக் கொன்ற செய்தியைக்கூற, இராமன் உடனே அளவிலடங்காத சினங்கொண்டு உலகங்களையெல்லாம் அழிக்கத் துணிந்து ஆரவாரம் செய்கிறான் என்றும், ஜடாயுராமனைக்கண்டித்துத் தேற்றுகிறானென்றும் கம்பர் கதை கட்டிக்கொண்டு போகி றார். இது முன்னர் இலக்குவன் முன் இராமன் சினந்ததும்

அவன் தேற்றியதுமாகிய செய்தியை அவ்விடத்திற் கூறாது விடுத்து இங்கே புதுக்கதை போல ஜடாயுமுன் நிகழ்ந்ததாகக் கூறுகிறார்.

ஜடாயு இறந்தவுடன் இராமன் யாது செய்வதென வருந்த இலக்குவன் கவலையுறாது பகைவரைக் கொல்லுவதே செய்ய வேண்டிய செயலென்று கூற, இராமன் கவலை நீங்கி ஜடாயுவுக்குப் பிரேதக்கிரியை செய்யத் துணிந்தனன் எனக் கூறுகிறார் கம்பர். இராமன் பல மான்களைக் கொன்று பிண்டம் வைத்துப் பிரேதக்கடன் முடித்த செயல்களை கம்பர் மறைத்துவிட்டு மறைமுகமாக "வேதப் பலிக் கடன் முற்றினன்" என்று மட்டும் கூறுகிறார் கம்பர் புரளிக்கும் ஓர் அளவுண்டோ?

பத்தாம் அத்தியாயம்.

(சருக்கம் 69 முதல் 73 முடிய)

இராம லக்குமணர் சனத்தானத்தைக் கடந்து கிரௌஞ்சாரணியத்தை அடைந்தார்கள். பின் அக்காட்டையும் தாண்டி அவர்கள் அதற்கும் மதங்கர் குடிலுக்கும் நடுவிலிருந்த பெருங்காடடைந்தார்கள். அங்கே அவர்கள் ஒரு பெரிய குகையையும், அதனருகே ஓர் அரக்கியையும் கண்டார்கள். அவ் அரக்கி ஓடிவந்து இலக்குவனைப் பிடித்துத்தழுவி, "என் பெயர் அயோமுகி நாம் இன்பமாக வாழ்வோம்." என்றனள். உடனே இலக்குவன் சினங்கொண்டு அவளுடைய காதுகளையும், மூக்கையும், கொங்கைகளையும் அறுத்தான். அவள் கதறிக்கொண்டு வந்த வழியே ஓடிவிட்டாள்.

அவர்கள் மேலும் நடந்து சென்றார்கள். இலக்குவன் தீய சகுனம் கண்டு தீமை வருமோ என்றான். அப்போது ஓர் இடி முழக்கம் போன்ற ஒலிகேட்டது. ஓர் அரக்கன் தோன்றினான். அவனுக்குத்தலை இல்லை. வாய்வயிற்றிலிருந்தது. அவன் பெயர் கவந்தன் அவன் அவ்விருவரையும் பிடித்து இழுத்தான். இராமன்

கொஞ்சமும் அஞ்சவில்லை. இலக்குவன் பக்குவமான அறிவில்லாமையால் வருந்தினான். அவன், "அண்ணா! என்னை இவனுக்குப்பலி கொடுத்து விட்டுத்தாம் தப்பிப் பிழைத்துச் சீதையோடு நாட்டை அரசாளும், அச்சமயம் என்னையும் நினைத்துக்கொள்ளும்." என்றனன் இராமன் அவனைத்தேற்றினான். கவந்தன, "நீங்கள் என்வசப்பட்டபின் உயிரில் ஆசைவைக்கவேண்டாம்" என்று அதட்டினான். இராமன், முகம்வாடி "தம்பி! நாம் பட்ட துயரமெல்லாம் போதாதா? நமது உயிருக்கே மோசம் வருமென்று எண்ணுகிறேன். எல்லாம் நமது கெட்டகாலம்" என்று வருந்தினான்.

கவந்தன், "உங்களைக் கடவுளே எனக்கு உணவாக அனுப்பியிருக்கிறார்" என அதட்டினான், இலக்குவன், அண்ணா! இவனைக் கொல்லாமல் இவனுடைய தோள்களை மட்டும் வெட்டித்தள்ளுவோம்" என்றனன். கவந்தன் அவர்களை விழுங்கத் தொடங்க அவர்கள் அவனுடையகைகளை வெட்டித் தள்ளினார்கள். கவந்தன் கீழேவிழுந்து நடுங்கி, நீங்கள் யார்?" என்றான். இலக்குவன், நாங்கள் தசரத புத்திரர்கள். இவர் இராமர், நான் இலக்குவன். இவருடைய மனைவியை ஒரு அரக்கன் எடுத்துப்போக நாங்கள் அவனைத் தேடிவருகிறோம். நீயார்?" என்றனன். கவந்தன் அவர்களை வணங்கி, "நான் அழகிய உருவினனாயினும் கொடிய உருவோடு முனிவர்களை வருத்தி யிருந்தேன். தூலசிரசென்ற முனிவன் என்னை இவ்வுருவடையச் சபித்தான். நான் அவனை வேண்டிக்கொள்ள உங்களால் என்தோள் வெட்டுண்ட போது முன்னைய உருவடையச் சாப நீக்கம் உரைத்தனன். முன் ஒரு காலத்தில் நான் மூகன் தந்த வரத்தால் செருக்கடைந்து இந்திரனோடு போரிட அவன் வச்சிரத்தால் எறிந்தான்: அது என்னை இவ்வுருவாக்கியது. அதனால்இந்திரன் எனக்கு வயிற்றில் வாயையும் நீண்ட கைகளையும் தந்தனன். நீங்களே இராம இலக்குவரெனக் கண்டேன். நீங்கள் என்னைக் கொளுத்துங்கள். நான் உங்களுக்குச் சீதையைக்காணும் வழியைக் கூறுகிறேன்" என்றனன். இராமன், "என் மனைவியைக் கவர்ந்தனுடைய பெயர் மட்டும் தெரியும். உன்னைக் கொளுத்தியபின் நீ என் மனைவி இருக்கிற இடத்தைச் சொல்லவேண்டும்" என்றனன் கவந்தன் இசைந்தனன்.

அவர்கள் பெரிய குழி வெட்டி விறகடுக்கி அதில்கவந்தனுடைய உடலைத்தள்ளித் தீ மூட்டினார்கள். கவந்தன் ஒளிமி

க்க அழகிய உருவுடன் விண்ணில் தோன்றி, "இராமா உங்களுக்கு நேர்ந்த துன்பங்களால் நீங்கள் தாழ்ந்த நிலையை அடைந்து விட்டீர்கள். சீதையைக் காண்பதற்கு வழிகூறுகிறேன். உன்னைப்போல் வருந்தியிருக்கும் குரங்குத் தலைவன் சுக்கிரீவனுடைய நட்பை நீ பெறவேண்டும். அண்ணனாகிய வாலியால் துரத்தப்பட்டு நான்கு நண்பருடன் காட்டில் வாழும் அவன் உனக்கு வேண்டும் உதவி செய்வான். பம்பைக்கரையில் இருக்கும் அவனைக்கண்டு போர்க்கருவிகளும் தீயும் சான்றாக நட்புச் செய்து அவனுக்கு வேண்டும் உதவியைச் செய், உன் சீதையை அவன் கண்டுபிடிப்பான் என்றனன். மேலும் கவந்தன், "இந்த வழி உங்களை இரிசிய மூகமலைக்குக் கொண்டுபோய் விடும். அதற்கு அப்பால் நந்தனமென்ற காடு இருக்கிறது. அங்கிருந்து பல காடுகளையும் மலைகளையும் கடந்து பம்பைக் கரைக்குப் போகவேண்டும். அந்த ஏரிக்கரையிலுள்ள பறவைகளும் மான்களும் மனிதர்களால் தங்களுக்குக் கெடுதி நேருமென்று அறியாததால் உங்களைக் கண்டு பயப்படா. நெய்க் கட்டிகளைப் போன்ற அந்தக் கொழுத்த பறவைகளையும், செங்கயல், அயிரை முதலிய பலவித மான்களையும் இலக்குவன் அம்புகளால் அடித்துத் தோலையும் இறகுகளையும் நீக்கி நெருப்பில் வாட்டி பக்குவம் செய்து உனக்குக் கொடுப்பான், நீ அதை உண்டு தாமரை இலையில் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட தண்ணீரைக் குடி. சபரி என்ற ஒரு பெண் அங்கே தவம் செய்திருக்கிறாள். பம்பைக்கு மேற்குக் கரையில் முனிவர்களின் குடில்கள் ஓர் அந்தரங்கமான இடத்தில் இருக்கின்றன. அங்கே நீங்கள் வாழ்வீர்கள். இரிசியமூக மலை கிழக்கரையில் உள்ளது. அம்மலைகளிலுள்ள குகையில் சுக்கிரீவன் நான்கு துணைவருடன் வாழ்கிறான்" என்று கூறினான். அவர்கள் உத்தரவு கொடுக்க அவன் விமானத்தில் ஏறிப்போயினன். இவ்வரலாற்றை ஆராய்வாம்.

அயோமுகி என்ற பெண் இலக்குவனைத் தழுவிக்கொண்டு இன்பம் நுகர அழைக்க, இலக்குவன் அவளுடைய காதுகளையும், மூக்கையும், கொங்கைகளையும் அறுத்தனன். இவனைப்போலும் இரக்கமற்ற பாவியரும் இருப்பரோ? முன்னரும் சூர்ப்பனகையை இவ்வாறே உருக்குலைத்தான். இப்பெண்களை இவன் உருக்குலைத்து உலகில் சீரழிய விடுவதினும் கொன்றிருந்தால் மிகவும் நலமாயிருந்திருக்கும். இந்த இலக்குவன் தன் அண்ணன் மனைவியாகிய சீதையைக்

கைப்பற்ற பேராவலோடு நின்று அவளை மனம் துடித்து அலறித்தீயிலே குதித்து உயிரை மடித்துக்கொள்வேனென்று கூறும் வரையிலும் துன்புறுத்தி அவள் முன் அவளைப் பார்த்துக்கொண்டே நின்றானே! இப்பாதகனை யாது செய்வது? இவன் சூர்ப்பனகையை முன்னரும் இப்போது அயோமுகியையும் உருக்குலைத்தனனே! இவன் சூர்ப்பனகையாவது சீதையை தூக்கவந்தனள். அதனால் சினங்கொண்டு உருக்குலைத்தனன் என்று கூறினாலும், அயோமுகி என்ன குற்றம் செய்தாள்? இலக்குவனைக் கொல்ல வந்தனளா? இல்லையே. அவனை மார்புறத் தழுவின குற்றத்தைத் தவிர அவள் யாது செய்தனள்? அதற்காக அவளை உருக்குலைப்பதா? இவனுடைய அறிவு ஒழுக்கம் மிக நன்று? ஒழுக்கமுடைய ஆண் மகன் பிறபெண்டிரை ஏறெடுத்தும் பார்க்கலாமா? இந்த இலக்குவனோ அயோமுகி என்ற பெண்ணின் காதுகளையும் மூக்கையும் அறுத்தான் இவன் அத்துடன் நில்லாமல் பிறர் பார்க்கவும் கூடாத உறுப்பாகிய அவளுடைய கொங்கைகளையும் அறுத்தனன். இதனை நினைத்தால் கற்றறிவில்லாத பாமர மக்களின் உள்ளமும் கொதிக்குமே! இஃதிவ்வாறாயின் கற்றறிவுடைய அறிஞர் உள்ளம் என்னாகி என்படாது?

சூர்ப்பனகையின் உருவைக் குலைக்கும்போதாவது இராமன் அருகிலில்லை என்னலாம். இப்போது தனது தம்பி இலக்குவன் அயோமுகி என்ற பெண்ணின் உருவைக் குலைத்த வீரச் செயலை இராமன் கண்குளிரக் கண்டுதானே மகிழ்ந்திருந்தனன்! இலக்குவனை வயதிற் சிறியவன் என்னலாம். எவ்வளவு காலத்திற்குத்தான் அவன் சிறியவனாக இருப்பான். அவன் கடவுளிடம் என்றும் சிறுவனாக இருக்க வரம் பெற்றவன் போலும்! இச்சிறுவனாகிய இலக்குவன் அயோமுகியினுடைய காதுகளையும் மூக்கையும் அறுத்த போதாவது இராமன் சும்மா பார்த்திருந்தனனென்று வைத்துக்கொள்வோம். அவளுடைய கொங்கைளை அறுக்கும் போதாவது இராமன் தடுத்தனனா? "அவளுடைய அந்தரங்க உறுப்பாகிய கொங்கைகளைப் பார்த்தலும் கூடாதே! தம்பி! நீஅதனைத்தொட்டு அறுத்தல் கொடும்பாவம். பாவத்தைச் செய்யாதே" என்றாவது ஒரு பேச்சுக்காவது இராமன் கூறினானா? இல்லையே! அன்றி இராமன் தன் தம்பி செயலைக் கண்டு மிக மகிழ்ந்தனன். ஆதலின் இராமனும் மிகத் தீயவனே என்பதில் என்ன தவறு? தனது தம்பி அறக்

கொடும் செயலைச் செய்வதை நேரில் கண்டிருந்தும் தடுக்காமல் மகிழ்ந்தனனே?

அயோமுகி ஓர் அரக்கியாம்; அரக்கியரென்று ஆரியர் கூறுவோரெல்லாரும் தமிழ்மக்களே. தமிழ்மக்களை இழிவாக எழுதி வைக்கவேண்டுமென்ற எண்ணத்தினாலேயே ஆரியர் தலைவராகிய வால்மீகி முன்னர் சூர்ப்பனகையையும் இப்போது அயோமுகியையும் கூறி, அவர்களைக் காமுகராக எடுத்துக் காட்டி ஆரியனாகிய இலக்குவனால் இவர்கள் உருக்குலைக் கப்பெற்றனரென்ற கதையைக் கற்பித்துக் கூறுகிறார். இவை களெல்லாம் இடையிடையே வேண்டுமென்று கட்டிய கதைகளாகவே இருக்கவேண்டும். இந்த உண்மையை நாம் சூர்ப்பனகையைப் பற்றிக் கூறிய இடத்துவிவரமாக ஆராய்ந்தோம்.

கவந்தன் இராமனையும் இலக்குவனையும் பற்றிஇழுக்கும் போது இராமன் வருந்தவில்லையாம் இலக்குவன் பக்குவமில்லாத அறிவுடைமையால் வருந்தினனாம். இந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாச ஐயங்கார் குறிப்பு கவனிக்கத் தக்கது. அவர் சருக்கம் 69, பக்கம் 181-ல் "சர்வபரிபூரண மான மகாவிஷ்ணுவின் அம்சங்களான இராமலட்சுமண பரத சத்துருக்கர்களில் தாரதம்மியம் எப்படி உண்டாகும்? அரை, கால், அரைக்கால், வீசம்என்று அம்சத்தை நிறுத்துஅளந்து கட்டுவது சாத்தியமா? இதன் உண்மையான இரகசியம் என்ன?" என்று குறித்திருக்கிறார். இராமனும் திருமாலின் அமிசன், இலக்குவனும் திருமாலின் அமிசன். இஃதிவ்வாறாக, இராமன் வருந்தாதும், இலக்குவன் வருந்தியும் இருப்பதெப்படி? இராமன் மட்டும் பக்குவமான அறிவோடும், இலக்குவன் பக்குவமில்லாத அறிவோடும் இருப்பதெப்படி? திருமால் என்ற ஒருவன் பாதிப்பாகமான ஒருவனாகவும், காற்பாகமான ஒருவனாகவும், அரைக்காற்பாகமான இருவராகவும் முறையே இராமன் பரதன், இலக்குவன் சத்துருக்கன் என்ற நான்கு பேராகப் பிறந்தனன் என்று வால்மீகி கூறுகிறார். இவ்விதமான கூறுபாடுகளோடு அமைவது சாத்தியமில்லை. அதனாலேயே நமது ஐயங்கார் "இதன் உண்மையான இரகசியமென்ன என்று வினாவுகிறார். இதன் உண்மையான இரகசியமாவது வால்மீகி இராமனாதிய ஆரிய அரச குமாரர்களுக்கு தெய்வத்தன்மை கற்பித்துக் கதை உலகத்தாரை ஏமாற்றியுள்ளார் என்பதே. பின் இராமனும் 'சாதாரண மக்களினும் கடைபட்டவனைப் போல வருந்தி விதியை நொந்துகொள்ளுகிறான்.

இலக்குவன் இராமனை நோக்கி, "அண்ணா இவனைக் கொல்லாமல் இவனுடைய தோள்களை மட்டும் வெட்டித் தள்ளுவோம்" என்றனன். இந்த இடத்தில் (சருக்கம் 70-பக்கம் 185) மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் கூறுவதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும் அது வருமாறு:—

"கவந்தனைக்கொல்வதே நலம். அவனுக்கு ஆகாரத்தைச் சம்பாதிக்க முக்கியமான கருவியாயிருக்கும் தோள்களை வெட்டி அவன் பசியால் நெடுங்காலம் வதைபட்டுச் சாகும்படி செய்வது வெகு கொடியது. ஜீவகாருண்யமுள்ள க்ஷத்திரியர்கள் செய்யத்தகாதது. முன்பு சூர்ப்பனகையையும், பின்பு அயோமுகியையும் கொல்லாமல் சித்திரவதை செய்து விட்ட இலக்குவன் இப்படிச் சொல்வது ஆச்சரியமல்ல."

இதனால் இலக்குவன் மிகவும் கொடிய பாவி என்பது நமது ஐயங்காருடைய முடிபு என்ற செய்தியை அறியலாம். இவர் அய்யங்காராக இருந்தாலும் உண்மையை உள்ளபடி எழுதுவது பாராட்டத் தக்கது. சூர்ப்பனகையும் அயோமுகியும் தம்மைச் சேர இலக்குவனைக் கட்டாயப்படுத்தினரென்றே வைத்துக்கொள்ளுவோம். அதற்காக இலக்குவன் அப்பெண்களுடைய உறுப்புகளை அறுத்துச்சித்திரவதை செய்து அவர்களை உயிருள்ள அளவும் திண்டாடி வருந்தச் செய்வதா? மிகக் கொடிய பாவிகளும் இத்தீய செயலை மனதில் எண்ணவும் அஞ்சுவரே! இதனை இவன் செய்தனனே! இக்கொடிய பேச்சைக்கேட்டு அதன்படியே செய்யத்துணிந்தனனே இராமன்! ஆதலின் இவன் இலக்குவனிலும் மிகக் கொடியன் போலும்!

தீயில் தள்ளப்பட்டவுடன் கவந்தன் ஒளிவடிவுடன் தோன்றினானாம்! இது அறிஞர் ஒப்புமாறுளதா? ஒளியுருடன் தோன்றினனென்றே வைத்துக்கொள்வோம். அவன இன்ன இடத்தில் சீதையை இராவணன் வைத்திருக்கிறான் என்று தெரிந்து கூறாதது மிக வியப்பே!

கவந்தன், "அந்த ஏரிக்கரையிலுள்ள பறவைகளும், மான்களும் மனிதர்களால் தங்களுக்குக் கெடுதி நேருமென்று அறியாததால் உங்களைக் கண்டு பயப்படா. நெய்க்கட்டிகளைப் போன்ற அந்தக் கொழுத்த பறவைகளையும், செங்கயல், அயிரை முதலிய பலவிதமான்களையும் சிலர் பலவகை

மீன்கள் என்பர்.) இலக்குவன் அம்புகளால் அடித்து அறுத்துத் தோலையும் இறகுகளையும் நீக்கி நெருப்பில் வாட்டிப் பக்குவம் செய்து உனக்குக் கொடுப்பான்'' என்று கூறுகிறான். இதனால் ஆரியருடைய மன நிலைகள் மிகத்தாழ்ந்தவை என அறியலாம். ஒரு பாவமும் அறியாமல் பக்கத்தில் நம்பி வரும் பறவைகளையும் மான்களையும் அடித்துத்தின்பதென்றால் இதனினும் கொடிய பாதகம் வேறு யாது உளது? அறிஞரே சிந்தியுங்கள்! இத்தகைய கொடும்பாவம் செய்து வந்தவரே இராமனும் இலக்குவனும்.

பம்பை ஏரியின் மேற்குக் கரையில் முனிவர்களின் குடில்கள் ஓர் அந்தரங்கமான இடத்தில் இருந்தனவாம். இதனாலெல்லாம் நாம் ஆரியர் பலவிதமான வேடங்களுடன் தமிழ் நாட்டிலே புகுந்து அதனைக் கைப்பற்ற ஒளிந்தும், வெளிப்படையாகவும் முயன்று வந்தனர் என்பதை அறியலாம். இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

ஜடாயுவைச் சுட்டபின் வழி நடந்தனர் என்று வால்மீகி கூற, கம்பர் அதை விடுத்து அன்று இரவு இராமன் சீதையை நினைந்து நிலவு வருத்த, அதனை இகழ்ந்து மன்மதன் அம்புக்கிரையாகித் தவித்ததை மிக விரிவாகக் கூறுகிறார். கம்பர் காமியாதலின் இவ்வாறெல்லாம் கூறுகிறாரென்று முன்னரே விவரித்தோம். வால்மீகி கூறாத ஒன்றை வருவித்துக் கொண்டு இக்கம்பர் புலம்புதல் அவர் தம் உண்மை இயல்பையே விளக்குகின்றது. அவரியல்பை ஒரு தனிக் கட்டுரையால் ஆராய்வோம்.

தனது விரகதாபம் தீரும் பொருட்டு இளந்தளிர்களைப் பரப்பிய தம்பியை நோக்கி இராமன் இரவு நீளுதலை நோக்கி வினாவுவதாக ஒரு செய்யுளைக் கம்பர் கூறுகிறார். அது வருமாறு:—

''வென்றி வேற்கை இளவலை மேலெலாம்
ஒன்று போல உலப்பில நாள் கடாம்
நின்று காண்டி யன்றே நெடுங் கங்குல்தான்
இன்று நீள்வதற்கேது என் என்னுமால்''

இரவும் பகலும் தூங்காமல் நின்ற நிலையிலேயே இருக்

கும் இலக்குவனை நோக்கி இராமன், "அப்பா! நீ தூங்காமல் நின்று பல இரவுகளைக் கழித்தவனாயிற்றே அதனால் உனக்கு இராத்திரிகளின் இயல்பு நன்றாகத் தெரிந்திருக்குமே இன்றிரவு நீளுவதற்கு காரணம் என்னை? கூறு" என வேண்டினனாம். காமுகனாகிய தனக்கு இரவு நீள அதன் காரணத்தைத் தன் தம்பியை நோக்கி இராமன் வினவியதாகக் கம்பர் கூறுவது வியப்பன்று. ஏனெனில், இராவணன் தன் தங்கையாகிய சூர்ப்பனகையிடம் இதே சந்தர்ப்பத்தில் நடந்து கொண்ட முறையைக் கம்பர் விரித்தவாறு முன் கட்டுரைகளில் ஆராயப்பெற்றது. அங்குதான் கம்பர் வேண்டுமென்று எழுதினாரென நினைத்தோம். அவர் இயல்பே இதுபோலும்! காமம் பற்றிக் கூறுமிடத்து இவர் தம்மை மறந்து இவற்றை எழுதினரென்பது உண்மையே.

அன்றிரவு கழிந்தது, சூரியன் உதயமானான். இராமன் சோலைகளையும், கிளைகளையும் அவைகளினுறையும் பறவைகளையும் கண்டானென்று கூறுமிடத்து அவர் இராமனுக்கு அடைமொழி கொடுத்திருப்பதும் மிக அழகிதே. அது வருமாறு:—

"பொழிலை நோக்கும் பொழில் உறையும்
புள்ளை நோக்கும் பூங்கொம்பின்
எழிலை நோக்கும் இள மயிலின்
இயல்பை நோக்கும் இயல்பானாள்
குழலை நோக்கிக் கொங்கை இணைக்
[illegible] குவட்டை நோக்கி அக்குவட்டின்
தொழிலை நோக்கித் தன்னுடைய
தோளை நோக்கி நாள் கழிப்பான்."

கல்விப் பெரியாராகிய கவிச் சக்கிரவர்த்தி கம்பர் பெருமான் உலக நாயகனாகிய எம்பெருமான் இராம பிரான் உலக நாயகியாகிய எம்பெருமாட்டி சீதாபிராட்டி யாரிடத்தில் ஈடுபட்டிருக்கும் தன்மையை விவரிக்க வேறு வகையறியாது "கொங்கை இணைக்குவட்டை நோக்கி அக்குவட்டின் தொழிலை நோக்கி" அதனைச்சாரும் தன்னுடைய தோளை நோக்கி நாள் கழிப்பானாகிய இராமன் என விவரிக்கின்றனர். இக்கம்பர் தம் சிந்தையின் தூய்மை இருந்தவாறென்னே!

நடந்து சென்று கொண்டிருந்த இராமலக்குவர் முன் அயோமுகிதோன்றி இலக்குவனை மார்புறத்தழுவ அவன் அவ

னுடைய உறுப்புக்களைச் சிதைத்தான் என்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ இக்கதையையே வேறு மாற்றுகிறார். சூரியன் உதயமாகியும் காம மிகுதியால வருந்தியிருந்த இராமனை நோக்கி இலக்குவன் சீதையைத் தேடப் புறப்படுவோம் எனக் கூறியதாகவும், உடன் இருவரும் புறப்பட்டு நெடுந்தூரம் நடந்து சென்றனரெனவும், சூரியன் மறையும் வரைநடந்து ஓர் சோலையில் தங்கினரெனவும், இராமன் தன் தம்பியைத் தண்ணீர் கொண்டுவர ஏவ, இலக்குவன் பல இடங்களிலும் இருட்டில் அலைந்து திரிந்தும் தண்ணீர் காணாமல் அயோமுகி என்ற அரக்கியைக் கண்டனன் எனவும், அயோமுகி இலக்குவனைக்கண்டு காமமுற்று தன்னை மணக்கவேண்டிக் கொண்டதாகவும், அவன் மறுக்க அவள் அவனைத்தூக்கிச் சென்றதாகவும், இராமன் நெடுநேரமாகியும் திரும்பி வராத தன் தம்பியைத் தேடி ஓடிக் காணாமல் தற்கொலை செய்து கொள்ள முயன்றதாகவும், அவ்வேளையில் இலக்குவன் அயோமுகியை உருக்குலைக்க அவள் கதறியஒலியைக் கேட்டு இராமன் சற்று தெளிந்து ஓர் அம்பை விடத் துணிந்து நின்றதாகவும், அப்போது இலக்குவன் இராமனிடம் வந்து சேர்ந்ததாகவும் கம்பர் தமது மனம் போலக் கதையை மாற்றிச் செல்லுகிறார். வால்மீகி கவந்தனைப்பற்றிக் கூறவந்த பல சருக்கங்களில் முதற் சருக்கத்தில் ஒரு சிறு பாகமாகச் சுருங்க உரைத்த அயோமுகி கதையைக் கம்பர்மாற்றி விரித்து அயோமுகிப்படலமென்றே ஓர் தனிப்படலம் வகுத்து நூற்றுக்குமேற்பட்ட செய்யுட்களால் விரித்துப் போகிறார். மேலும் வால்மீகி விரித்துப் பல சருக்கங்களிற் கூறியிருக்கும் கவந்தன் கதையை கவந்தன் படலத்தில் ஓர் ஐம்பது பாடல்களால் கம்பர் சுருங்கக் கூறுகிறார். இவர் இலக்குவன் காடுறைந்த நாளெல்லாம் உறங்காதிருந்தனன் என்று கூறும் ஆதாரமற்ற புதுக்கதையையே பல இடத்தும் கூறிச்செல்கிறார். இக்கட்டுரையில் இரவு நீண்டது கண்ட இராமன் வினாவாகக் கூறியது முன் காட்டினோம். இதையே அயோமுகியால் இலக்குவன் அகப்பட்ட இடத்தில் இராமன் புலம்பலாகவும், "என்னையும் என் மனைவியையும் இமை கொட்டாமல் நின்று பாதுகாப்பவன் இவ்வளவு நேரம் வாரமல் தாமதிப்பானா?" என்றுக் கம்பர் குறிக்கிறார். பின்னரும் கவந்தன் படலத்தில் இலக்குவன் கூற்றாகவும்,

"மானே அன்னாள் தன்னொடு தம்முன் வரையாரும்
கானே வைகக்கண் துயில் கொள்ளாது அயல் காத்தற்

கானான்'' என இதையே கூறுகிறார். இக்கதை பொய்க் கதை யென்பதை முன்னரே மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் கூற்றாலும் எடுத்து விளக்கினோம்.

நமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை அன்புடன் படிக்கும் நண்பர்களுக்கு ஈண்டு கம்பரைப் பற்றிக் காமுகரென முன்னர்க் குறித்ததை ஒரு சிறிது நிலைகாட்டிக் காட்டுதும். வால்மீகி மிகச் சுருக்கிக் கூறியதைக் கம்பர் நூறு பாடல்களால் விரித்தாரென்று கூறினோம். அதில் முதல் முப்பது பாடல்கள் இராமன் சீதையை நினைந்து ஏங்கிப் புலம்பல். பின் அயோமுகி இலக்குவன் மீது காமுற்றதைப் பற்றிப்பல பாடல்கள் பாடியிருக்கிறார். போதாக்குறைக்கு இப்படலத்தின் கடைசியில் இராமன் சீதையை நினைத்து விரக தாபத்தால் புலம்பினதாக ஏழு பாடல்கள் பாடியிருக்கிறார். இவ்வாறாக இப்படலம் முழுதிலுமே கம்பர் காமம் பற்றியே பாடினார். அதனாலேயே இப்படலம் விரிந்தது என்று தெரிகிறது. கம்பர் கொங்கைச் சொல்லைப் பலமுறை சொல்லி மகிழ்பவர் என்றும், அதனாலேயே இப்படலம் விரிந்தது என்றும் அதனாலேயே சூர்ப்பனகையின் கொங்கையை இலக்குவன் அறுத்தானெனக் கூறி அதை அவள் கையிலெடுத்துப் பார்த்து வருந்தினளெனக் குறித்தார் என்றும் விரித்து முன்னர் ஆராய்ந்தோம். அதற்கேற்பவே இக்கட்டுரையிலும் இராமனைப்பற்றிக் கூறும்போது சீதையினுடைய "கொங்கையிணைக்குவட்டை நோக்கி அக்குவட்டின் (குவடு—மலைச் சிகரம்) தொழிலை நோக்கி......நாள் கழிப்பான்'' எனக்கூறினரெனவும் எடுத்துக்காட்டினோம். (அயோமுகிப் படலம்—செய்யுள் 31) பின்னர் செய்யுள் 53-ல் அயோமுகி இலக்குவனைப் பார்த்துக் கூறும் கூற்றாக கம்பர்.

"பின்னும் உரைப்பவள்'' பேர் எழில்வீரா!
முன்னம் ஒருத்தர் தொடா முலையோடும்
பொன்னின் மணித் தடமார்பு புணர்ந்து என்
இன்னுயிரைக் கடிது ஈகுதி "என்றாள்''

எனக் கூறியிருக்கிறார். "முன்னம் ஒருத்தராலும் தொடப் பெறாத கொங்கையினை நீ தொட்டுச் சேர்'' என்று கூறினதாகக் கூறுவதால் இத்துடன் இராமன் அயோத்தியை விட்டு நீங்கி வந்து தங்கிய சோலையில் துயின்ற பெண்களை விவரிக்கும் தன்மைகளையும் சூர்ப்பனகை அறுந்து கிடந்ததைக்

கையில் எடுத்து வருந்தினள்என்பதையும் ஒப்பிட்டு இக்கம்பர் தம் சிந்தை நிலையை அறிஞர் தெளிவாராக. பின்னர் இவர் தம்பியைப் பிரிந்து புலம்பிய இராமன் கூற்றாகவும், சீதையை "வார் கொண்டு அணி கொங்கை" செய்யுள் 64) என்று குறித்தார். பின்னர் இராமன் தம்பியைப் பிரிந்து கூடிய இலக்குவனைக் கண்டபோது பிரிந்த கன்றைக் கண்ட தாய்ப் பசுவை ஒத்தான் என்று கம்பர் மொழிகின்றார். (செய்யுள் 84) அப்பசுவை விவரிக்கும்போது அவர் "இளம்பால் முலை ஆவின் பான்மையான்" என்று புகல்கிறார். பசுவை விவரிக்கும்போதுமா இவர் இவ்வாறு விவரிக்கவேண்டும்?

வால்மீகி அயோமுகியினுடைய மூக்கையும் காதுகளையும் கொங்கைகளையும் இலக்குவன் அறுத்தான் என்று கூறுகிறார். ஆனால் கம்பரோ (செய்யுள் 7்)

"ஈர்ந்தான் அவள் நாசி பிடித்து இளையோன்" என்றனர். இதனைப் படித்தமாத்திரத்தில் யாமடைந்த பெரு மகிழ்ச்சிக்கோர் எல்லையும் உண்டோ? வால்மீகி கூறாத இடத்து சூர்ப்பணகையின் கொங்கைகளையும் அரிந்தான் என்று முற்பட்டு வந்து கூறி மகிழ்ந்த கம்பர் வால்மீகி அயோமுகியின் கொங்கைகளையும் அரிந்தான் என்று கூறியதைக் கூறாது விடுத்தமை மிக அறிவுடைமையே எனப் பாராட்டினோம். இராமன், 'நடந்தது கூறு' என, இலக்குவன் நிகழ்ந்தன அறியக் கூறுகிறான்: இராமன் அதனை யுணர்ந்து, "தம்பி! நான் யாரைப்பிரிந்தாலும் வருந்தேன் உன்னைப்பிரிந்து யான் பட்டதே மெய்த்துன்பம் (பாடல் 89) என்று கூறி,

'தொல்லிருள் தனைக்கொலத் தொடர்கின்றாளையும்
கொல்லலை நாசியைக்கொய்து நீக்கினாய்
வல்லை நீ மனுமுதல் மரபினோய் எனப்
புல்லினன் உவகையில் பொருமி விம்முவான்"

என்று (பாடல் 92ல்) கம்பர் கூறுகிறார். இதனாலும் இலக்குவன் அவள் மூக்கை மட்டுமே அரிந்தனன் என்பது விளங்குகின்றது. ஆனால் 89க்கும் 92க்கும் மத்தியில் இரண்டு பாடல்கள் 90ம் 91ம் இருக்கின்றன. இவைகளைக் கம்பர் தாம் பாடினாரோ, அன்றிக்கம்பர் கொடுமையைக் குறைக்க வேறு யாரவது பாடி இடைச்சொருகினாரோ அறிகிலோம்! அவையிரண்டும் கம்பருடைய அறிவை மிகக் குறைத்து இழிவுபடுத்

துவன. முன்னர் கம்பர் அவள் நாசியை மட்டும் அரிந்தா னென்று கூறிக் கடைசியில் இராமனும் அவள் நாசியை மட் டும் அரிந்தனை என அவனைப் பாராட்டினதாகவும் கூறி விட்டு, இக்கூற்றுக்கு முற்றிலும் மாறாக 60ம் பாட்டில் "தம்பி! நீ அவளை வென்று வந்தேன் என்றாய். அவளைக் கொன் றிலைபோலும்!" என்று இராமன் வினவியதாகவும், அதற்கு இலக்குவன் (செய்யுள் 91)

"தொளைபடு மூக்கொடு செவிது மித்துக
தளைவயின் நகிலொடு தடிந்து நீக்கிய
அளவையில் பூசலிட்டு அரற்றினாள் என
இளையவன் விளம்பி நின்று இருகை கூப்பினான்"

என அவள் மூக்கு, செவி, கொங்கை இவைகளை வெட்டின தாகக் கூறினான் என்று பாடியிருப்பது பொருந்தா உரையாக வும், முன்னுக்குப்பின் முரணான உரையாகவும் இருக்கிறது. இவ்விரண்டு பாடல்களும் இடைச்சொருகலாக இருப்பின் மிக நல்லதே. இவை கம்பருடைய கூற்றாயின் இங்கும் இவர் கொ ங்கையை மறந்தாரல்லர்! (நகில்—கொங்கை)

இராமனும் இலக்குவனும் நீர்பருகி ஓர் சோலையில் தங் கினர்; இராமன் விரகதாபத்தால் வருந்தியிருந்தனன்; விடிந் ததும் அவர்கள் வழி நடந்து நெடுந்தூரம் கடந்து கவந்தன் வனத்தை யடைந்தனர்; இதிலிருந்து கம்பருடைய கவந்தன் படலம் தொடங்குகிறது.

இராமனும் இலக்குவனும் கவந்தனைக்கண்டு அரக்க னென அறிந்து நடுங்கினரென வால்மீகி கூற, கம்பர் அவர்கள் முதலில் அவனுடைய கைகளைக்கண்டு அவைகளை அரக்கர் சேனையோ என்று மயங்கினரெனவும், அவர்கள் ஒன்றிரண்டு யோசனை தூரம் அக்கைகளுக்குள்ளே சென்று கவந்தனைக் கண்டு அவனை ஒரு பெரிய பூதமென எண்ணி நடுங்கினரென வும் கற்பித்துக் கூறுகிறார். இலக்குவன் இராமனை நோக்கி தன்னைக்கவந்தனுக்கு இரையாக விட்டு விட்டு ஓடி விடும்படி வேண்டினனென வால்மீகி கூற, கம்பர் இராமனே அவ்வாறு இலக்குவனை வேண்டினனெனவும் இலக்குவன் அதற்கு உடன்படாது முன் நோக்கிச் சென்றதாக வும் இராமன் அவனுக்கும் முற்பட்டதாகவும் கூறுகிறார். கவந் தன் தோள்கள் வெட்டுண்டு குழியிலே தள்ளப்பெற்றுக் கொ ளுத்தப்பட்டு பின்னரே அழகிய உருப்பெற்று விண்ணில் தோ

ன்றினனென வால்மீகி கூற, கம்பர் அவன் கைவெட்டுண்ட உடனே விண்ணில் அழகிய உருவுடன் தோன்றி இராமனைத் துதித்தனன் என்று கூறுகிறார். கவந்தன் தன்னைக் கொளுத்தும்படி இராமனை வேண்டியதையும், இராமன் அவனைத் தன் மனைவிபோன இடம் கூறவேண்டியதையும், பின் கவந்தன் ஒளியுருப்பெற்று இராமனைப் பம்பைக் கரையில் பறவைகளையும் மான்களையும் அடித்துச் சுட்டுத்தின்னுமாறு கூறியதையும் கம்பர் கூறாது மறைத்தார்.

பதினொன்றாவது அத்தியாயம்.

(சருக்கங்கள் 74-ம், 75-ம்.)

கவந்தன் காட்டின் வழியாக இராமனும் இலக்குவனும் நடந்து சென்று அன்றிரவு அம்மலையில் தங்கி மறுநாள் சபரியின் குடிலை அடைந்தார்கள். சபரி அவர்களை வணங்கினாள். இராமன் அவளிடம் நலம் வினாவினான். அவள் அவனை வாழ்த்தி தான் பல நாளாக அவனுக்கென்றே தேடி வைத்திருக்கும் பல பொருள்களை, "நான் இவைகளைச் சோதித்துப் பார்த்து மிகவும் மதுரமான பொருள்களென்று கண்டிருக்கிறேன்" என்று கூறி உண்ணவேண்டினள். சாதி தாழ்ந்தவளானாலும் அவளுடைய அன்பைப் பாராட்டி இராமன் அவளுடைய ஆசிரியர்களான முனிவர்களின் இருக்கைகளைக்காட்டக் கூறினன். சபரி அவ்வனத்திலுள்ள விந்தைகளையெல்லாம் இராமனுக்குக் காட்டினாள். இராமன் மகிழ்ந்து "நீ கொடுத்த உணவு பொருள்களால் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். நீ உனக்குப் பிரியமான உலகத்தையடைக" என்றனன். சபரி தீமூட்டி அதில் விழுந்து புண்ணிய லோகத்தை அடைந்தாள். பின் இராமனும் இலக்குவனும் பம்பைக்கரையை அடைந்தார்கள். இராமன், "தம்பீ! இந்த மலையில்தான் சுக்கிரீவன் வாழ்கிறான். அவனிடம் நீ போய் வா" என்றான். பின் இராமன் சீதையை நினைந்து வருந்தி "அவள் இல்லாமல் எப்படி பிழைத்திருப்பேன்?" எனப்புலம்பி அந்த ஏரியில் குளிக்க இறங்கினான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

சபரி என்ற பெண் தாழ்ந்த ஜாதியினளாயினும் இராமன் அவள் கொடுத்த பொருள்களை உண்டனனாம். காட்டில் தனித்தலையும் தமக்கு ஒருத்தி இருக்க இடம் கொடுத்து உணவுப் பொருள்களை கொடுத்தாளென்றால் அதனை உண்ண மாக்களும் மறுக்கமாட்டனவே. இறைவனுடைய பிள்ளைக ளாகிய மக்களுள் மேலான சாதியென்ன? கீழான ஜாதி யென்ன? அறிவினாலேயே உயர்வு தாழ்வு உண்டாகும். இராமன் தான் கீழானவனிலும் கேடு கெட்டவன் போல இடைவிடாமல் தனது மனவியை நினைந்து வருந்துகின்றனன். இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

சபரி தனது ஆசிரியர்கள் விண்ணுலகெய்தியபோது உட னேகாமல் இராமன் வருவதற்காகக் காத்திருந்தனள் என்று வால்மீகி கூற, கம்பர் அவளை நான்முகன் முதலியோர்வந்து தத்தம் உலகங்களுக்கும் அழைத்தனரென்று அவள் கூறிய தாக எழுதுகிறார். கந்தனை சுவக்கிரீவனிருக்கும் இடத் துக்கு வழியைக் கூறினன் என வால்மீகி கூறுகிறார். கம்ப ரோ கவந்தன் சபரியையடைந்து வழி தெரிந்து சுக்கிரீவனை அடைக என்று கூறியதாகவும், அதன்படியே இராமனும் இலக் குவனும் சபரியை அடைந்தபோது அவள் சுக்கிரீவனிருக்கும் இடத்துக்கு வழி கூறினள் எனவும் மொழிகிறார். இராமன் தன்னை வந்தடைந்த அன்றே சபரி புண்ணிய உலகடைந்த தாக வால்மீகி கூற, கம்பர் மறுநாள் அவள் மேலுலகடைந் தனள் என்று கூறுகிறார். சபரி தீயில் விழுந்து உடலை நீத்து விண்ணுலகடைந்தனள் என வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவள் "உழன்று பெற்ற யோகத்தின் பெற்றியிலே தன்னு டல் துறந்து" சென்றனள் என்று கூறுகிறார். இவ்வாறா கக் கம்பர் தம் மனம் போனவாறெல்லாம் வால்மீகி எழுதிய கதையை மாற்றி மாற்றி மறைத்து மறைத்து எழுதி மகிழ் கின்றனர். இத்துடன் ஆரண்யகாண்ட ஆராய்ச்சி இனிது நிறைவு பெறுகிறது. இதனை முடிக்குமுன் அறிஞர்களாகிய நண்பர்களுக்கு ஒன்று கூற விரும்புகின்றோம்.

இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவது உண்மை யை உலகினருக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே. வேறு எந்த விதமான நோக்கமும் பற்றி அன்று என, நாம் அடிக்கடி குறித்ததை நண்பர்கள் இன்னும் மறவாது மனத்தில் கொண் டிருக்க வேண்டிக் கொள்கின்றோம். இந்த இராமாயணக் கதையை வால்மீகி கூடுமான வரை நடந்ததை நடந்தபடி எழு

தியிருந்தாலும் சிற்சில இடங்களில் அவர் தமது ஆரியப்பகை உணர்ச்சியைத் தமிழ் மக்களிடம் காட்டித் தமிழ் மக்களை இழிவு படுத்துமாறு கதையைக் குறித்திருக்கிறார். ஆனால் கம்பரோ வால்மீகி கூறும் வரலாறுகளையெல்லாம் மாற்றி மறைத்துத் தமிழ் மக்களிடைப் புதுவது புனைந்து இனிது பாடி மயக்கித் தமது முன்னோராகிய இராவணேச்சுரனையே கொன்ற பகைவனாகிய இராமனைத் தமது தெய்வம் போல் வணங்குமாறு செய்து தாம் தோன்றிய குலமாகிய தமிழருக்கே அழியாப் பழியை விளைவித்துவிட்டார். இவ்வுண்மையையும் அன்பர்கள் எப்போதும் மறவாது நினைவின் கண்ணே பதியவைத்துப் போற்ற வேண்டிக்கொள்கின்றோம்.

கம்பர் தமிழ் மகனே. அவரைப் பற்றிச் சில இடங்களில் கடுமையான சொற்களைக் கூறுகிறோமெனச் சில நண்பர்கள் நினைக்கலாம். அது உண்மையே. அவரைப்போலும் தமிழுலகத்திற்குப் பெருங்கேடு யாரே செய்தார். இராமனாகிய பகைவனைத் தெய்வம்போல வணங்கும்படியும், இராவணனாகிய கூடப்பிறந்தவனைப் பகைவனாகிய பேய்போலும் நினைக்கும்படி எழுதிவைத்தவர் இக்கம்பரே அல்லரோ? 'உடன் பிறந்தே கொல்லும் நோய்' என்பது போல இக்கம்பர் கொடிய பழியை விளைவித்துவிட்டனரே! இவர் தம்மைச் சேர்ந்தவர்களாகிய தமிழ் மக்களனைவரையும் வேண்டுமானால் கொலை செய்திருக்கலாம்; தம்முயிரை இழந்தமையால் தமிழ் மக்கள் பெருங்கேடடைந்தவர் ஆகார்! உயிரினும் மானமேயன்றோ மக்களுக்குப் பெரியது?

"மயிர் நீப்பின் வாழாக்கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்" என்றருளினர் தெய்வப் புலவரும். ஆதலின் தமிழ் மக்களுடைய மானத்தைக் குலைத்த இக்கம்பருடைய கொடுஞ் செயலை நினைக்குந்தோறும் உள்ளங் கொதிக்கின்றது. அதனாலேயே சிற்சில இடங்களில் எம்மையும் மறந்து அவரைக் கடிந்தெழுதுவது நிகழ்கின்றது, இதனை ஒவ்வொரு உண்மைத்தமிழ்ப் பெரியாரையும் சிந்திக்கவேண்டுகின்றோம். அவர்கள் உண்மையோடும் சிந்திப்பரேல் அவர்கள் ஒவ்வொருவரும் எம்மைப்போலவே உணர்வரென்பது உறுதி. நமது வீட்டில் நம்முடைய மகனோ தம்பியோ தீயை வைத்துவிட்டானென்று வைத்துக்கொள்வோம். வீடு பற்றி எரிகிறது; நமது மகன் வைத்த தீ, நமது தம்பி வைத்த தீ, என்று வாளாயிருப்பது அறிவுடைமையோ? அதனை உடனே சென்று அணைத்துப் பக்கங்களிலும் பரவவிடாது தடுப்

பதே தலை சிறந்த அறிவுடைமையாம். அதுவே செய்யத்தக்க கடமையுமாம். கம்பர் தமிழ் மக்களுடைய மானமாகிய வீட்டில் பெருந்தீயை வைத்துவிட்டார்; ஆதலின் அதனை உணர்வோர் ஒவ்வொருவரும் ஓடிச் சென்று அதனை அணைத்துப் பரவச் செய்யாது தடுத்தலே ஒவ்வொரு உண்மைத் தமிழருடைய கடமையாம். சிலர் பிடிவாத குணத்தினாலே உண்மையை உணர்ந்தும் கொடிய பழக்கத்தின் வாய்ப்பட்டு நமது உண்மையுரைகளைக் கொடுமையானவைகளாக எண்ணுவர்.

> "கண்ணோட்டம் செய்யார் கருவியிட்டாற்றுவார்
> புண்வைத்து மூடார் பொதிந்து"

என்பது பெரியசர் மொழி. புண்ணுடையாருக்கு அப்புண்ணை ஆற்றும் பொருட்டு மருத்துவர் கருவிகளைக் கொண்டு அறுக்கும்போது அது கடுமையாகவே இருக்கும். ஆனால் அச்செயலில் விரைவில் புண் மறைந்து நல்லுடம்பு தோன்றும். அதுபோலவே நமது உடன் பிறப்பாளர்களாகிய நண்பர்களுக்கு அவர்களிடைக் கம்பர் செய்த பழியை எடுத்தியம்பும்போது சற்றுக் கடுமையாகவே தோன்றும். ஆயினும் புண்ணை வைத்து மூடுதல் பெருங்கேட்டினைத் தருவது போலவே பழியைப் போக்க முற்படாமல் மூடினசல் பெருங்கேடு தோன்றும் என்பதனை அவர்கள் உணர்வார்களாக.

நமது ஆராய்ச்சியுரையைப் படிக்கும் அன்பர்கள் அதனை உண்மையான உரை என்று தெளிந்து தமது நண்பர்களுக்கும் ஏனையோர்க்கும் அதனைக்கூறித் தெளிவித்து உண்மையைப் பரவச் செய்ய வேண்டுகின்றோம். சிலர் நமது ஆராய்ச்சி உரையை உண்மையென்று தெரியாமல் "சந்திரசேகரப் பாவலர் உலகத்தில் இதுவரை நாம் கேள்விப்படாத புதுக்கதையை எழுதி வருகிறார்." என்று கூறலாம். அது அவர்கள் தவறன்று; ஏனெனில் அவர்கள் தெரிந்திருக்கும் இராமாயணக் கதை கம்பர் கதை. அதிலேயே பழகி விட்டமையால் நாம் கூறும் வரலாறு அவர்களுக்குப் புதுவதாகத் தோன்றுகிறது. அவ்வாறு செய்து விட்டார் கம்பர்! நாம் கூறும் கதையோ ஒரு சிறிதும் மாறுபாடு செய்யாமல் வால்மீகி கூறுகிறபடியே உள்ளது. நாம் இக்கதையை ஒரு சிறிதும் மாறுபடுத்தியோ திரித்தோ இதனை எழுதவில்லை. திரித்து எழுதுவது மிகத்தவறு என்பது எமக்கு நன்கு தெரியும். எதையும் தவறாக எழுதுவதானால் விளைவது தீமைதான். ஆதலில் ஓர் சொல்லுக்கூட அதிகமாகச்

சேர்க்காமல் நாம் உள்ளதை உள்ளபடியே எழுதி வருகின்றோம் என்று உறுதி கூறுகின்றோம். வால்மீகி இராமாயண மொழிபெயர்ப்புக்களை வைத்துக்கொண்டு கவனிப்பாருக்கு இது எளிதில் விளங்கும். ஆதலின் நாம் எழுதுவதில் ஓர் சிறிதும் பொய்ம்மை என்பது இருக்காது என்ற உண்மையை எப்போதும் நினைத்துக்கொண்டு நமது ஆராய்ச்சி உரைகளைப்படிக்க நண்பர்களை மறுபடியும் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். இத்துடன் ஆரண்யகாண்டம் முடிவதால் இனித்தொடர்ந்து கிட்கிந்தா காண்ட ஆராய்ச்சி வெளிவருவதாகும்.

ஆரண்ய காண்டம் முற்றிற்று.

ஐயவினாக்களுக்கு விடை.

—————)o(—————

வடாற்காடு ஜில்லா வெங்களத்தூர் தோழர் நாராயண ஐயர், என்பவர் ஐயவினா என்பதாக ஒரு கேள்வி விடுத்திருக்கிறார். அதாவது:—

“கைகேசிக்குப் பிறக்கும் பிள்ளைக்கே பட்டம் கட்டுவதாக தசரத மன்னன் வாக்குறுதியைப்பெற்ற கேகயன் இராமன் காடு சென்றவுடன் அயோத்திக்கு வந்து இன்னது செய்தானென்பது தெரியவில்லை அல்லது இவனும் வாக்குறுதியை மறந்தானா? அல்லது பார்ப்பனருக்குப் பயந்தானா? இராமனால் மன்னன் வாக்குறுதியை அறிந்த குடிகளாவது கைகேசியாவது தெரிவித்திருக்கலாமே. கேகயன் வந்து பரதனுக்குப் பட்டம் ஏன் கட்டவில்லை என்று வசிட்டனைக் கேட்டு வசிட்டன் நான் எவ்வளவு சொல்லியும் குடிகளைக் கொண்டு சொல்லியும் பரதன் அரசை விரும்பவில்லை என்று பரதன் மேல் பழி சுமத்தி தான் தப்பியிருந்தாலன்றோ அவன் செயல் செயல் வஞ்சகம் என்பது நிலை நிற்கும்?” என்கிறார்.

இதற்கு நமது விடை.

பரதன் கேகய நாட்டிலிருக்கும்போது தந்திரமாக இராமனுக்கு முடி சூட்ட தசரதன், வசிட்டன், சுமந்திரன் இவர்கள் முயன்றனர். தசரதன் இராமனிடம் “பரதன் நாட்டிலில்லாத காலமே முடிசூட்டுக்கு ஏற்றகாலம்” என்கிறான். இம்முடிசூட்டுதற்செயலாக கைகேசியால் தடையுறுகிறது. அதனால் இராமன் காடேக தசரதன் மடிகிறான். வசிட்டன் பரதனை அழைத்துவர ஏவுகிறான். பரதனை அழைக்கச் சென்ற ஏவலரிடம் இராமன் காடேகியதையாவது தசரதன் இறந்ததையாவது தெரிவித்தல் கூடாதெனக் கண்டிப்பாக ஆணையிட்டு ஏதோ அவசரமாக அழைத்துவர ஏவியதாகக் கூறி அழைத்துவரச் செய்கிறான் வசிட்டன். ஏனெனில், இவர்கள் இராமனுக்கு முடி சூட்டச் சூழ்ந்ததையும் அதன் மேல் நிகழ்ச்சிகளையும் அறிந்தால் கேகயனும் பரதனுடன் வந்து வசிட்டனை தசரதனுடன் சூழ்ந்ததற்காகக் கண்டித்து பரதனுக்கு முடிசூட்டுவான். வசிட்டன் எண்ணப்படியே பரதன் மட்டும் வருகிறான். கேகயன் வரவில்லை. உண்மையறியாத

பரதன் இராமனுக்கே முடிசூட்ட நினைக்கிறான். இதன் மத்தியில் கேகயன் செய்தியறிந்து வந்தால் என் செய்வதென் பதற்காகவே வசிட்டன் பரதனை அரசேற்க தான் வேண்டிக் கொண்டகோடு நில்லாமல் குடிகளையும் ஏவி வேண்டச்சொல் லுகிறான். பரதன் காடேகி இராமனால் வஞ்சிக்கப் பெற்று தனக்குரிய நாட்டை இராமனுக்குக் கொடுத்து விடுகிறான். பின் அவன் பாதுகை பெற்று அயோத்திக்கு வருகிறான். ஆதலின் அதுவரை செய்தி அறியாமையயால் கேகயன் அயோத்திக்கு வரவில்லை. பின் வந் திருக்கலாம். அவன் வந்த செய்தி இராமாயணத்தில் காணப்பெற வில்லை. பின் வந்து முயன்றாலும் பரதன் தனக்குரிய உரிமையை இராமனுக்குக் கொடுத்துவிட்டபடி யால் பரதன் அரசேற்க இசையவே இசையான். இஃதிவ்வா றாக நமது தோழர் நாராயண ஐயர் வசிட்டன் மேலுள்ள பற்றால் கேகயன் வந்து வசிட்டனை வினாவி அவன் மறு மொழி கூறி யிருந்தாலல்லவோ வஞ்சகனாவான் என்கின்றார். திருடனொருவன் திருட்டுக்கொடுப்பன் காணாமல் பொரு ளைத் திருடுகிறான். திருட்டுக்கொடுத்தவன் திருடனிடம் ஏன் என் பொருளைத் திருடினாய்? என்று வினாவாதவரை திருடன் செய்தது திருட்டன்றோ? தென்னைமரத்தில் தேங் காய் திருட ஏறுகிற திருடனைச் சொந்தக்காரன் காணாத வரை அவன் செயல் திருட்டாகாதோ? சொந்தக்காரன் கண்டு வினாவ திருடன் நான் புல் பறிக்க ஏறுகிறேன் என்று வேறு பொருந்தாப் புகல் காட்டினாலும் சொந்தக்காரன் உண்மை யறியாதிருப்பானோ? அதுபோலவே பின்னர் கேகயன் வந்தி ருந்தாலும் வசிட்டனை அவனது படிற்றுரைகளால் நம்பாது வஞ்சகனெனவே உணர்வான். இதனை தோழர் சிந்திப்பாராக.

"கைகேசி சம்பரப் போரில் வாங்கிய இரண்டு வரங்கள் தனக்குப் பிறகும் பிள்ளைகளுக்கே நாடு பெற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே கேட்டாள் என்கிறீர்கள்" என இவர் எழுதுகிறார்.

இதனை இவர் யாண்டுக் கண்டனரோ? முன்கேகயனைப் பற்றி வால்மீகி எழுதாததை எடுத்துக்கொண்டு சில வினாவி னார். இப்போது நாம் யாண்டும் எழுதாத குறிப்பை எடுத் துக்கொண்டு சில வினாவுகிறார். கைகேசி உண்மையறியாது இராமனுக்கே முடிசூட்டு உரியதென்றெண்ணி இருந்தவள் இராமனிடம் அன்புடையவள் அவ்விழாவை அறிந்து மகிழ் கிறாள். கூனியால் கலைக்கப்பட்டபோது தன்னல உணர்ச்சி

மிக தன் மகனாகிய பரதனுக்கு நாடுதர வேண்டும், அது நிலைக்க இராமனைக் காடனுப்ப வேண்டுமென்ற எண்ண முண்டாகி தான் முன் பெற்றுவைத்த வரங்களை இதற்குப் பயன் படுத்துகிறாள். இது இயல்பே. இதில் ஐயம் விளைய ஏது என்னையோ?

"ஒரு சமயம் பரதன் வந்தவுடன் குடிகள் பரதனை இகழ்ந்திருக்கக்கூடும். பரதன் உண்மையைச் சொல்லி அவர்களும் முன்வர இவ்விடம் வந்திருக்கக்கூடுமென்றெண்ணி உன்னைக் குடிகள் துரத்திவிட்டார்களா என்று இராமன் கேட்டானே தவிர வேறன்று என்பதுதான் எமது உறுதி" என்கிறார் தோழர்.

காமாலைக் கண்ணருக்குக் கண்டதெல்லாம் மஞ்சள நிறம்தான். இவர்களுக்கு கருப்பு சிவப்பு, வெண்மை முதலிய நிறங்களேது? குடிகளும் பரதனும் உண்மை தெரிந்து உடன் வருவதற்கும் துரத்துவதற்கும் வேறுபாடு தோழர் உணர்வாராக. தோழர் கூறுவது உடன் வருகை. உடன் வருகை சமரதானத்தால் விளைவது. துரத்தல் பகையால் விளைவது. இதனால் தோழர் உறுதி உறுதியற்றுப்போகின்றது.

"புரோகிதர் வசமாக்குவதற்காக ஜாபாலி இராமனை மன்னிப்புக் கேட்டதாகக் கூறுவானாகில் பரதனைப் பட்டம் கட்டிக்கொள்ள வசிட்டன் வேண்டுகையில் வசிட்டனைபரதன் நிந்தித்ததாகக் கூறமாட்டான். இது போன்றவைகளை எழுதுவதென்றால் நாமும் ஒரு கட்டுரை தான் எழுதவேண்டும்" என்று எழுதுகிறார் தோழர் நாராயண ஐயர்.

இக்குறிப்பு விளங்குமாறில்லை இதனை தோழர் எது கருதி எழுதினாரோ? புரோகிதப்பற்றுக்கொண்டோ? இராமனிடம் ஜாபாலி முனிவன் பிதுர்களுக்கு சிரார்த்தம் கொடுப்பதை இகழ்ந்துரைக்க இராமன் யாதொரு காரணமும் கூறாமல் அவனைக் கண்டிக்கிறான் அதனால் ஜாபாலி முனிவன் தான் சிரார்த்தத்தை இகழ்ந்தது தவறென மன்னிப்புக்கேட்கிறான். இதற்கும் பரதன் வசிட்டனைக் கண்டித்தற்கும் யாது சம்பந்தம்? இது தோழர் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட முயன்றதையே ஒக்கும்.

இனி சாதி பேதத்தைப்பற்றி அவர் குறிப்பது வியப்பாகவே உள்ளது. எருமை, பசு ஆகியவகள் மாடென்ற பொதுப்

பெயரால் அழைக்கப் பெற்றாலும் வேறு வேறு சாதியே ஏனெனில் எருமை பசுவைப் பெறுவதில்லை. பசு எருமையைப் பெறுவதில்லை. அதைப்போல மனிதர்களுக்குள் வேறுபாடு காணாமையால் மனிதர்கள் அனைவரும் ஒரு சாதியே என்றோம். இதனையே கபிலர் கூறுகின்றனர்.

தோழர் தனிதரில் மகன் தாயைக் கூடினால் மனிதனையே பெறுகிறான். ஆதலின் மகனென்றும் தாயென்றும் வேறுபாடு ஏன்? என்று வினாவுகிறார்.

இச்செயல் மிருகங்களிடம் பெரிதும் நிகழ்வதையும் மக்களிடையும் சிறுபான்மை நிகழ்வதையும் காண்கின்றோம். தாயென்றும் மகனென்றும் பகுத்தறிவின்றிச் சேர்வார்க்கு அவ் வேறுபாடு இல்லைதான். அவர்கள் மக்களல்லர்; மாக்களே. பகுத்தறிவுடைய மக்களுக்கு ஒழுக்க முறைபற்றி தாயென்றும் பிள்ளையென்றும் பகுத்தறியும் அறிவு விளங்கும். இதனால் மக்களனைவரும் ஒரே சாதியினர் என்பதற்குத் தடையென்ன உள்ளது?

கபிலர் சொன்னது நியாயமாகுமேல் உலகத்தார் ஏன் கொள்ளவில்லை என்றும் கபிலர் வள்ளுவருடன் பிறந்தவரா என்றும்தோழர் வினாவினார்.

ஆரியருடைய சூழ்ச்சியின் வன்மையால் ஆரியர் செய்து வருகிற சுயநலப் பிரசாரத்தால் பொதுவாகக் கற்றறிவில்லா மக்களனைவரும் அதனை ஏலாராயினர். இப்போது மக்கள் கல்வியறிவு பெறப்பெற உண்மையுணர்ந்து சாதி வேறுபாட்டை ஒழிக்கவும், ஒரு குலத்துக்கொரு நீதி நூலை எரிக்கவும், அனைவரும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எனப்பறை சாற்றி ஒற்றுமைப்பட அனைவரையும் அழைக்கவும், பலரும் முன்னோக்கவேண்டும் முயற்சிகள் செய்யவும் முன் வந்து முயல்வாராயினர். தாயென்றும் பிள்ளையென்றும் பகுத்தறியும் அறிவே நாகரீகமாம். நாரீகம் பெறாத சில நாட்டினர் இன்னும் தகப்பனுடன் பிறந்தான் மகளாகிய தங்கையை மணப்பதைக் காண்கிறோம். இதனை தோழர் ஆராய்ந்து தெளிவாராக. கபிலர் திருவள்ளுவருடன் பிறந்தவராயிருந்தாலென்ன? வேறு கபிலராயிருந்தாலென்ன? அவர் கூறுவது எக்காலத்திலும் உண்மையாகவே விளங்குகின்றது.

"தாங்கள் புகழும் நாயனார் குறளுக்கு திருவள்ளுவமாலையில் இராமாயண பாரதங்களை உவமை கூறப்பட்டுள்ள

தே. ஆகையால் குறளும் ஆபாசம் நிறைந்த நூலா? என்று வினாவுகிறார் தோழர்.

திருவள்ளுவமாலையில் இராமாயண பாரதங்களை திருக்குறளுக்கு உவமை கூறியிருப்பது உண்மையே. அப்பாடலைப் பாடியவர் திருவள்ளுவரன்று. திருவள்ளுவர் தமது நூலுக்கு இணையாக இவைகளைக் கூறியிருக்தாலன்றோ நாம் அப்பாடலைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்? அப்பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற பெயரால் யாரோ ஒருவரால் பாடப்பெற்றது. அதனால் திருக்குறளும் ஆபாசம் நிறைந்த நூலா என்பது அறிஞர் வினாவாகாது. தோழர் இதனை வினாவியது பிறர் கூற்றாகப்போலும்! அப்பாடலே பின்வருவது.

"எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்—முப்பாற்குப்
பாரதம் சீராமகதை மனுப்பண்டைமறை
நேர்வனமற்றில்லை நிகர்"

திருவள்ளுவமாலை என்பது வள்ளுவர் காலத்தே தோன்றது அவ்வக்காலத்தில் பலரால் பாடப்பெற்றதோ அன்றி பிற்காலத்தில் யாரோ ஒருவராலேயே பாடப்பெற்றதோ தெரியவில்லை. பிற்காலத்தில் யாரோ ஒருவராலேயே ஐம்பத்து மூன்று பாடல்களும் பாடப்பெற்றன என்பதே பேரறிஞராகிய ஆராய்ச்சியாளர் முடிவு. நிற்க, இப்பாடலில் முப்பாலெனப் பெறும் திருக்குறளுக்கு நிகராக பாரதம், சீராம கதை, மனு, வேதம் இவை கூறப்படுகின்றன. பௌண்டரீக யாகம், அஸ்வமேத யாகம் கூறும் ஆபாச நூலாகிய வேதத்தை ஒப்புயர்வற்ற நீதி நூலாகிய திருக்குறளுடன் உவமை கூறவேண்டியது பொருத்தமே! உலகத்துக்கெல்லாம் பொது நீதி கூறும் திருக்குறளுக்கு உவமையாக ஒரு குலத்துக்கொரு நீதி கூறும் மனு நூலை கூறுவதும் அதிலும் அதிகப் பொருத்தமே! சீராம கதை என்ன அழகிலிருக்கிறதென்பதை நாம் இப்போது ஆராய்ந்து மறைந்து கிடந்த உண்மைகளை வெளிப்படுத்துவதால் தெளிவாகிறது. பாரத ஆராய்ச்சியும் விரைவில் வெளிவரும். ஆதலின் இந்நான்கு நூல்களும் திருக்குறளுக்கு உவமைகளா என்பதை தோழர் சிந்தித்து வெறியனொருவன் "நானே அரசன்" என்பதுபோலும் இச்செய்யுளின் பொருள் என்பதை தெரிந்துகொள்ளும்படி வேண்டுகிறோம். தோழரை நாம் எழுதும் கட்டுரைகளைக் கவனித்துப் படித்து ஆராய்ந்து பின் ஐயம் நிகழ்ந்தால் வினாவுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக

வெளியீடுகள்.

1.	பெண் ஏன் அடிமையானாள்? (ஈ.வெ.ரா.)	0	5	0
2.	முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	0	5	0
3.	கடவுள்.	0	5	0
4	மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?	0	3	0
5.	பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா.)	0	3	0
6.	மதமும், விஞ்ஞான சாஸ்திரமும்	0	3	0
7.	பிரபஞ்ச உற்பத்தி	0	3	0
8.	நான் ஏன் கிருஸ்தவனல்ல?	0	3	0
9.	நான் சம்சயவாதி ஆனதேன்?	0	3	0
10.	மெய்ஞ்ஞான முறையும், மூடநம்பிக்கையும்	0	6	0
11.	,, 2-ம் பாகம்	0	5	0
12.	ஞானசூரியன்	0	5	0
13.	மரணத்திற்குப்பின் வாழ்க்கை உண்டா?	0	4	0
14.	மதப்புரட்சி	0	4	0
15.	வால்டையரின் சரிதம்	0	4	0
16.	பகுத்தறிவு அல்லது மரண சாஸனம்	0	4	0
17.	பெண்ணுரிமையும் மதமும்	0	3	0
18.	தேவதாசி	0	8	0
19.	இத்தியமாதா	0	4	0
20.	இங்கர்சாலின் ஜீவிய சரித்திரம்	0	2	0
21.	மதம் என்றால் என்ன?	0	2	0
22.	தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி	0	3	0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	கைவல்யம் அல்லது கலைக்கியானம் (இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது)	0	8	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம்	0	8	0
8	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம் பதிப்பு)	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா? (மூன்றாம் பதிப்பு)	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	0	4	0
14.	ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப்பாடல்	0	2	0
18.	கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	சுயமரியாதைத் தாலாட்டு	0	2	0
20.	பர்னர்ட்ஷா உபந்யாசம்	0	1	0
21.	சோஷியலிசம்	0	2	0
22.	போல்ஷ்விக் முறை	0	1	0
23.	ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	0	0	9
24.	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
25	சமதர்ம உபந்யாசம்	0	0	6
26	சோதிட ஆராய்ச்சி	0	4	0
27.	மனுநீதி விளக்கம்	0	2	0
28.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
29	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0

விலாசம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு